REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2022 ஜுலை 22 வெள்ளிக்கிழமை
தினகரன்
THINAKARAN தினகரன்
1932 - 2022
வரு. 90 இல. 171 | Friday 22, July, 2022 | 16 பக்கங்கள் | 40/-

இங்கிலாந்து பிரதமர் பதவிக்கான போட்டி

## இறுதிக் கட்ட போட்டிக்கு ரிஷி சுனக் முன்னேற்றம்



இங்கிலாந்து பிரதமர் பதவிக்கான இறுதி கட்ட போட்டிக்கு இந்திய வம்சாவளி ரிஷி சுனக் முன்னேறினார்.

கன்சர்வேடிவ் கட்சி உறுப்பினர்களிடையே 06

# பிரதமராகிறார் தினேஷ்

## பதவியேற்பு நிகழ்வு இன்று



லோரன்ஸ் செல்வநாயகம்

புதிய அரசாங்கத்தின் பிரதமராக பாராளுமன்ற சபை முதல்வர் தினேஷ் குணவர்தன ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் முன்னிலையில் இன்று சத்தியப்பிரமாணம் செய்துகொள்ளவுள்ளார்.

அதேவேளை, ஜனாதிபதி தெரிவுக்கு முன்னர் இருந்த அமைச்சரவை மற்றும் அவர்கள் வகித்த அமைச்சுப் பதவிகளே மீண்டும் வழங்கப்படவுள்ளதுடன் அந்த அமைச்சர்கள் இன்று மீண்டும் புதிதாக சத்தியப்பிரமாணம் செய்துகொள்ளவுள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சர்வகட்சி அரசாங்கமொன்று அமைக்கப்பட்டதன் பின்னர் புதிய அமைச்சரவை நியமிக்கப்படுமென்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

புதிய பிரதமர் மற்றும் அமைச்சரவை சத்தியப்பிரமாண நிகழ்வு கொழும்பிலுள்ள பிரதமர் அலுவலகத்தில் இன்று முற்பகல் நடைபெறவுள்ளது.

அதேவேளை, பிரதமருக்கான வெற்றிடமொன்று ஏற்படும் சந்தர்ப்பத்தில் சபை முதல்வரே அந்தப் பதவிக்காக சத்தியப்பிரமாணம் செய்வது சம்பிரதாயபூர்வமாக நடைபெற்றுவரும் நிகழ்வு என்றும் அரசாங்கத்தின் பேச்சாளரொருவர் தெரிவித்தார். முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் மறைவுக்குப் பின்னர் அப்போது பிரதமராக பதவி வகித்த டி.பி. விஜேதுங்க புதிய ஜனாதிபதியாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். அந்த சந்தர்ப்பத்தில் அப்போது சபை முதல்வராக இருந்த ரணில் விக்கிரமசிங்க புதிய பிரதமராக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி தலைமையில் புதிய அமைச்சரவையும் இன்று சத்தியப்பிரமாணம்

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய முன்னிலையில் நேற்று

# எட்டாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக ரணில் பதவியேற்பு



லோரன்ஸ் செல்வநாயகம்

இலங்கையின் 08ஆவது நிறைவேற்று ஜனாதிபதியாக முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். பாராளுமன்ற கட்டடத்தில் நேற்று நடைபெற்ற எளிமையான நிகழ்வில் பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய முன்னிலையில் 10.15 மணி சுபவேளையில் உத்தியோகப்பூர்வமாக அவர் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இந்நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பாரியார் மைத்திரி விக்கிரமசிங்க, 06

## வசந்த முதலிகே, ரத்கரவ்வே தேரருக்கு எதிராக பிடியாணை

கோட்டை நீதவான் நேற்று பிறப்பிப்பு



லோரன்ஸ் செல்வநாயகம்

சட்டவிரோத ஆர்ப்பாட்டம் ஒன்றை கடந்த ஆண்டில் மேற்கொண்டுள்ள குற்றச்சாட்டுக்காக அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் இணைப்பாளர் வசந்த முதலிகே மற்றும் ஆர்ப்பாட்டக்காரர்களின் முக்கிய பிரதி 06

## ஜனாதிபதி ரணிலுக்கு சந்திரிகா வாழ்த்து

திறமையான செயல்வீரர் என புகழாரம்



லோரன்ஸ் செல்வநாயகம்

புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

தமது முகநூலில் விசேட பதிவொன்றை மேற்கொண்டுள்ள முன்னாள் ஜனாதிபதி, நாட்டின் இத்தகைய தீர்மானமிக்க கால 06

## பஸ் கட்டணத்தின் பாதியாக இனி ரயில் கட்டணங்கள்

புதிய வர்த்தமானி அறிவித்தல் வெளியானது



லோரன்ஸ் செல்வநாயகம்

ரயில் கட்டணங்கள் நாளை நள்ளிரவு முதல் அதிகரிக்கப்படவுள்ளதாக போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது. அது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

ரயில் கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பில் 06

நேற்று இடம்பெற்ற ஜனாதிபதியின்

## சத்தியபிரமாணத்தின் போது திடீரென மின் துண்டிப்பு

விசாரணைகள் CIDயினரிடம் கையளிப்பு



லோரன்ஸ் செல்வநாயகம்

புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க நேற்று சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட சந்தர்ப்பத்தில் பாராளுமன்ற கட்டடத்தில் ஏற்பட்ட திடீர் மின்துண்டிப்பு தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் பொறுப்பு சி.ஐ.டி.யினருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. 06

## QR முறைமையின் கீழ் எரிபொருள் விநியோகம்

பரீட்சார்த்த முயற்சி நேற்று முதல் ஆரம்பம்




லோரன்ஸ் செல்வநாயகம்

QR முறைமையின் கீழ் எரிபொருள் விநியோகிக்கும் நடவடிக்கைகள் நேற்றுமுதல் பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப்பட்டதாக எரிசக்தி மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர தெரிவித்துள்ளார். எவ்வாறெனினும் கொழும்பில் சில பகுதிகளுக்கு 06

25 முதல் முழுமையான திட்டம் அறிமுகமாகிறது

இலங்கையிலிருந்து ஆயுதக்கடத்தல்

## தமிழகத்தில் 22 இடங்களில் NIA பிரிவு தேடுதல் வேட்டை



போதைவஸ்து மற்றும் இலங்கையிலிருந்து ஆயுதங்களை கடத்தல் போன்ற தகவல்களின் அடிப்படையில் தமிழகத்தின் சுமார் 22 இடங்களில் இந்திய தேசிய புலனாய்வு பிரிவினர் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர். இந்த தேடுதல் நடவடிக்கை நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 06

கடந்த 10 நாட்களில் 7 இலட்சம் விநியோகம்

## எரிவாயு பிரச்சினைக்கு 31ஆம் திகதியுடன் முற்று!

லிற்றோ தலைவர் முதித பீரிஸ் நம்பிக்கை



எரிவாயு பிரச்சினையை எதிர்வரும் 31ஆம் திகதிக்குள் 100 வீதம் தீர்க்க முடியும் என லிற்றோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

கடந்த 10 நாட்களில் 12.5 கிலோகிராம் நிறையுடைய சுமார் 7 இலட்சம் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக லிற்றோவின் உள்ளக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. எவ்வாறாயினும், மேலும் 40 இலட்சம் எரிவாயு சிலிண்டர்கள் தேவைப்பாடு 06

சஜித் அணியில் 14; TNAயில் 05

## ஜனாதிபதி தெரிவின்போது ரணிலுக்கு ஆதரவளிப்பு

ஹரின் பெர்னாண்டோ MP தெரிவிப்பு



பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இடைக்கால ஜனாதிபதி பதவிக்கான வாக்கெடுப்பு தொடர்பில் தாம் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் இரவிரவாக பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதாகவும், சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியில் 14 பாராளுமன்ற உறுப்பினர்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரித்தனர் என ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். 06

## வங்கிக் கடன் பெற்றவர்களுக்கு 06 மாதகாலத்துக்கு நிவாரணம்

இலங்கை மத்திய வங்கி அறிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக வங்கிகளில் கடன்களை பெற்றுள்ளவர்களுக்கு ஆறுமாதகால சலுகையை வழங்குவதற்கு மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.

அதன்படி, பொருத்தமான சலுகைகளை கடன் வாடிக்கையாளர்களுக்கு பெற்றுக்கொடுக்குமாறு அனுமதிபெற்ற அனைத்து வங்கிகளுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக 06

## புதிய ஜனாதிபதியுடன் இணைந்து செயற்பட அமெரிக்கா தயார்

தூதுவர் ஜூலி சங் வாழ்த்துகூறி டுவிட்டர் பதிவு



புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து செயற்படுவதற்கு அமெரிக்கா தயாராகவுள்ளதாக இலங்கைக்கான அமெரிக்கா தூதுவர் ஜூலி சங் குறிப்பிட்டுள்ளார்.

தனது உத்தியோகப்பூர்வ டுவிட்டர் பக்க பதிவொன்றின் மூலம் இவ்விடயத்தை தெரிவித்துள்ள அவர், புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு தனது வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார். 06

ஜனாதிபதி செயலாளராக


## சமன் ஏக்கநாயக்க நேற்று நியமனம்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் செயலாளராக சமன் ஏக்கநாயக்க ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு நேற்று தெரிவித்தது.

ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவி வகித்த சந்தர்ப்பங்களில், சமன் ஏக்கநாயக்க அவரது செயலாளராக கடமையாற்றினார். 06

## அலரிமாளிகை போராட்டக்களத்தை அகற்றி வெளியேறி செல்ல தீர்மானம்



கொழும்பு கொள்ளுப்பிட்டி பகுதியிலுள்ள பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான அலரிமாளிகைக்கு முன்னால் அமைக்கப்பட்டுள்ள போராட்டக்களத்தை அகற்றி அங்கிருந்த போராட்டக்காரர்கள் வெளியேறியுள்ளனர். 06

எரிபொருள் விலையை குறைந்தது

## 50 ரூபாவால் குறைத்தால் மட்டுமே கட்டண குறைப்பு

ஆட்டோ சம்மேளனத்தின் தலைவர்



எரிபொருளின் விலையை மேலும் 50 ரூபாவினால் குறைத்தால் மாத்திரமே முச்சக்கர வண்டிகளின் கட்டணத்தை குறைக்க முடியுமென முச்சக்கர வண்டி சாரதிகள் சங்கங்கள் தெரிவிக்கின்றன.

பெற்றோலின் விலை மும்மடங்காக அதிகரிக்கப்பட்டு தற்போது அது வெறும் 06

## பிரசவ வலியால் துடித்த பெண்ணுக்கு உதவிய OIC

யாழ். வட்டுக்கோட்டையில் நெகிழ்ச்சி சம்பவம்



யாழ்ப்பாணம் தொல்புரம் பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவர் பிரசவ வலியினால் துடித்த வேளை வட்டுக்கோட்டை பொலிஸார் தமது பொலிஸ் வாகனத்தை கொடுத்து அந்த கர்ப்பிணிக்கு உதவி செய்த சம்பவம் பாரிய நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. 06

ஜனாதிபதியாக ரணில் பதவியேற்பு

## முல்லைத்தீவில் பட்டாசு கொளுத்தி கொண்டாட்டம்



புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் 52 வாக்குகள் வித்தியாசத்தில் தெரிவாகியதைடுத்து முல்லைத்தீவில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் வெடி கொளுத்தி கொண்டாடி வருகின்றனர்.

அந்த வகையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் நகரில் ஐக்கிய தேசியக் 06

## வெற்றிட MP பதவிக்கு யாரை நியமிப்பது?

கட்சி கூடி ஆராய்ந்து முடிவெடுக்கும்



ரணில் விக்கிரமசிங்கவின் பாராளுமன்ற ஆசனத்துக்கு ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து விரைவாக ஒருவரின் பெயர் அறிவிக்கப்படும். அதுதொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கமைய கட்சியின் முகாமைத்துவ குழு கூடி தீர்மானிக்கயிருக்கிறது என கட்சியின் செயலாளர் பாலித்த 06

## கெச்சிமலை தர்ஹாவின் ஷெய்ஹ் நாயகம் காலிப் அலவி மறைவு



பேருவளை, கெச்சிமலை தர்ஹா ஷரீப் அஷ்ஷேஹ் காலிப் அலவி பின் அஷ்ஷேஹ் முஹம்மத் அப்துல்லாஹ் (அலவியதுல் காதிரி) தனது 93 ஆவது வயதில் காலமானார்.

அன்னார், மக்கொனையை சேர்ந்த மர்ஹூமா 06

90 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# சர்வதேச செய்திகள்

பிரிட்டன் பிரதமருக்கான போட்டி

## இறுதிச் சுற்று வாக்கெடுப்புக்கு ரிஷி சுனக், லிஸ் ட்ரஸ் தெரிவு



பிரிட்டன் பிரதமர் பதவிக்கான இறுதிக் கட்டப் போட்டிக்கு முன்னாள் நிதி அமைச்சர் ரிஷி சுனக் மற்றும் வெளியுறவுச் செயலாளர் லிஸ் ட்ரஸ் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் இடையே கடந்த புதன்கிழமை இடம்பெற்ற வாக்கெடுப்பில் பிரதமர் பொரிஸ் ஜோன்சனின் இடத்தை நிரப்பும் போட்டியாளர்களின் எண்ணிக்கை இரண்டாக குறைக்கப்பட்டது.

கொவிட்–19 பெருந்தொற்றின் பொதுமுடக்க விதிகளை மீறியது உட்பட கடந்த சில மாதங்களாக நீடித்து வரும் சர்ச்சைகளால் தனது கட்சியினரின் ஆதரவை இழந்ததை அடுத்தே ஜோன்சன் இந்த மாத ஆரம்பத்தில் பதவி விலகினார்.

'இன்று என் மீது எனது சகாக்கள் வைத்த நம்பிக்கைக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். நாடு முழுவதும் எமது செய்தியை பரப்புவதற்கு நான் இரவு பகல் பாராது பணியாற்றுவேன்' என்று சுனக் ட்விட்டரில் குறிப்பிட்டார்.

இந்திய வம்சாவளியான சுனக்கிற்கு கன்சர்வேட்டிவ் கட்சியின் அனைத்து தரப்புகளிடம் இருந்தும் வாக்குகள் கிடைத்தபோதும், ட்ரஸ் தனது ஆதரவை அதிகரித்துக் கொண்டு வருகிறார். இந்நிலையில் இறுதியாக பிரதமரை தேர்வு செய்வதற்கான கன்சர்வேட்டிவ் கட்சியின் 200,000 உறுப்பினர்கள் பங்கேற்கும் வாக்கெடுப்பில் கடும் போட்டி நிலவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ட்ரஸூம் சமூக ஊடகத்தில் தனது ஆதரவாளர்களுக்கு நன்றி தெரிவித்ததோடு தாம் போட்டிக்குத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார்.

பிரிட்டன் பிரதமர் பதவிக்கான போட்டியில் ஆரம்பத்தில் பதினொரு வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இதன் ஐந்தாம் சுற்று வாக்கெடுப்பே கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

இதில் கனிஷ்ட வர்த்தக அமைச்சர் பென்னி மோர்டோன்ட் வெளியேற்றப்பட்டார். இதில் சுனக் 137 வாக்குகளுடன் தொடர்ந்து முன்னிலை பெற்றதோடு ட்ரஸ் 113 வாக்குகளை பெற்று இரண்டாம் இடம் பிடித்தார். மோர்டோன்ட் 105 வாக்குகளையே பெற்றார்.

பிரிட்டன் பிரதமர் பதவிக்கு தேர்வானவர் வரும் செப்டெம்பர் 5ஆம் திகதியே அறிவிக்கப்படவுள்ளார். யார் அந்தப் பதவியை வென்றாலும் பிரிட்டன் கடந்த பல தசாப்தங்களில் இல்லாத அளவு முகம்கோடுக்கு மோசமான பொருளாதார நிலையை கையாள வேண்டி உள்ளது.

நாட்டின் வருடாந்தப் பணவீக்கம் 11 வீதத்தை எட்டும் நிலையில் இருப்பதோடு பொருளாதார வளர்ச்சியும் ஸ்தம்பித்து, தொழில்துறை நடவடிக்கைகள் அதிகரித்து வருகிறது. அந்நாட்டின் பௌண்ட் நாணயம் டொலருக்கு நிகராக வரலாறு காணாத வீழ்ச்சியை நெருங்கியுள்ளது.

பிரதமருக்கான போட்டியாளர் இரண்டாகக் குறைந்திருக்கும் நிலையில் இவர்களில் எவர் தேர்வு செய்யப்பட்டாலும் அவர் முதல் வெள்ளை இனத்தவர் அல்லாத பிரதமர் அல்லது நாட்டின் மூன்றாவது பெண் பிரதமராக பதிவாவார்.

## ரஷ்ய எரிவாயு நிறுத்தத்திற்கு தயாராகும் ஐரோப்பிய நாடுகள்



ரஷ்யா தனது விநியோகத்தை நிறுத்தும் அச்சத்துக்கு மத்தியில் வரும் ஓகஸ்ட் தொடக்கம் மார்ச் வரை எரிவாயு பயன்பாட்டை 15 வீதம் குறைத்துக்கொள்வதற்கு தமது உறுப்பு நாடுகளை ஐரோப்பிய ஆணையம் கோரியுள்ளது.

இந்த இலக்கு அந்தந்த நாடுகளின் விருப்புக்குரியது என்றபோதும், இந்த கோடை காலத்தில் ரஷ்யா தனது குழாய்களை மூடினால், சட்ட ரீதியான கடப்பாடு உடையதாக மாறும் என்று அது குறிப்பிட்டுள்ளது.

ரஷ்யா மற்றும் ஜெர்மனிக்கான முக்கிய நோர்ட் ஸ்ட்ரீம் 1 குழாய் பராமரிப்பு வேலைகளுக்காக 10 நாட்கள் மூடப்பட்ட நிலையில் நேற்று வியாழக்கிழமை மீண்டும் திறக்க வேண்டி இருந்தது. எனினும் ரஷ்யா தனது வாக்குறுதிக்கு அமைய செயற்படாது என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

ரஷ்யா தனது இயற்கை வாயுவில் 40 வீதமானதை கடந்த ஆண்டு ஐரோப்பாவுக்கு விநியோகித்தது. 2020இல் இத்தாலியை தொடர்ந்து ஐரோப்பாவில் மிகப்பெரிய இறக்குமதியாளராக ஜெர்மனி உள்ளது.

பீரங்கி தாக்குதல்

## துருக்கி–ஈராக்கிற்கு இடையே இராஜதந்திர மோதல் தீவிரம்



ஈராக்கின் குர்திஷ்தான் பிராந்தியத்தில் உள்ள பூங்கா ஒன்றின் மீது இடம்பெற்ற பீரங்கி தாக்குதலில் ஒன்பது பொதுமக்கள் கொல்லப்பட்டதை அடுத்து ஈராக் மற்றும் துருக்கி இடையே இராஜதந்திர மோதல் ஒன்று வெடித்துள்ளது.

இதில் ஈராக்கிய சுற்றுலா பயணிகளே அதிகம் கொல்லப்பட்டிருப்பதோடு பலியானவர்களில் சிறுவர்களும் உள்ளனர். குறைந்தது 23 பேர் காயமடைந்துள்ளனர்.

உள்ளூர் அதிகாரிகள் துருக்கி படை மீது குற்றம்சாட்டுகின்றனர். துருக்கிக்கான பதில் தூதுவரை ஈராக் திரும்ப அழைத்துக்கொண்டுள்ளது. அதேபோன்று ஈராக்கிற்கான துருக்கிக் தூதுவரை அழைத்து மன்னிப்புக் கேட்கும்படி கோரியுள்ளது. 'துருக்கி படையினர் ஈராக்கிய இறைமையை மோசமாக மீறியுள்ளனர்' என்று ஈராக் பிரதமர் முஸ்தபா அல் கதீமி ட்விட்டரில் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் குர்திஷ்தான் தொழிலாளர் கட்சியைச் சேர்ந்த படையினரே இந்தத் தாக்குதலை நடத்தியதாக துருக்கி குற்றம்சாட்டுகிறது.

## ஸ்பெயின் காளை துரத்தும் திருழாவில் மூன்று பேர் பலி



கிழக்கு ஸ்பெயினில் காளை துரத்தும் திருவிழாவின்போது ஏற்பட்ட காயங்களால் கடந்த 24 மணி நேரத்தில் மூவர் உயிரிழந்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் வலென்சியா பிராந்தியத்தின் சம்பிரதாயமான காளை துரத்தும் நிகழ்வில் பங்கேற்றவர்களாவர். இதன்போது காளைகள் வீதிகள் ஊடாக துரத்தப்படுவதோடு மக்கள் அவைகளுக்கு முன்னால் ஓட முயல்வார்கள்.

இது விலங்குகளுக்கும் பொது மக்களுக்கும் ஆபத்தை ஏற்படுத்தக்கூடியது என்று விலங்கு உரிமைக் குழுக்கள் நீண்ட காலமாக முறையிட்டு வருகின்றன. இதனால் கடந்த எட்டு அண்டுகளில் 20 பேர் பலியாகி இருப்பதாக அந்தக் குழுக்கள் கூறுகின்றன. இதில் கடந்த இரண்டு வாரங்களாக இடம்பெற்று வரும் இந்த திருவிழாவின்போது மோசமாக காயமுற்ற மூவரே உயிரிழந்துள்ளனர். இதில் 56 வயதான ஆடவர் ஒருவர் காளையால் தூக்கி வீசப்பட்டதால் மூளை காயத்திற்கு உள்ளாகியுள்ளார்.

இந்த விபத்து நிகழ்ந்து ஒன்பது நாட்களின் பின் அவர் மருத்துவமனையில் உயிரிழந்துள்ளார்.

நுரையீரல் காளையால் துளைக்கப்பட்டதால் 50 வயதான மற்றொருவர் உயிரிழந்துள்ளார்.

## ஜோ பைடன் தனக்கு புற்றுநோய் இருப்பதாக கூறியதால் பரபரப்பு



அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தனக்கு புற்றுநோய் இருப்பதாக குறிப்பிட்டுள்ளது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சமர்செட்டில் இருக்கும் முன்னாள் சுரங்க ஆலை ஒன்றுக்குச் சென்ற பைடன், காலநிலை மாற்றத்திற்கு எதிராக போராடுவதற்கான புதிய ஆணைகள் பற்றி பேசினார். இதன்போதே அவர் புற்று நோய் பற்றி சாதாரணமாக குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர், 'எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையால்தான் எனக்கும், அந்தப் பகுதியில் வசித்த பலருக்கும் புற்றுநோய் வந்தது. நீண்ட காலமாக, இந்த தேசத்தில் நாங்கள் வசித்த டெலாவேர் பகுதிதான் அதிக புற்றுநோய் விகிதம் கொண்ட பகுதியாக இருந்தது' என்றார்.

இந்தக் கருத்து சமூக ஊடகத்தில் பெரும் விவாதப் பொருளாக மாறியது. இதனை அடுத்து வெள்ளை மாளிகை பைடனின் கருத்துக்கு உடன் பதிலளித்துள்ளது. அதில் ஜனாதிபதி தனக்கு வந்து தோல் புற்றுநோய் பற்றியே குறிப்பிட்டதாகவும், அதற்கு அவர் ஜனாதிபதி பதவியை ஏற்பதற்கு முன்னரே சிகிச்சை பெற்றதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.



## உலகின் வயதான ஆண் பாண்டா கரடி உயிரிழப்பு

கூண்டில் வளர்க்கப்படும் உலகின் மிக வயதான ஆண் பாண்டா கரடி ஹொங்கொங்கில் உள்ள பொழுதுபோக்கு பூங்கா ஒன்றில் நேற்று வியாழக்கிழமை உயிரிழந்தது.

ஆன் ஆன் என்று அழைக்கப்பட்டும் 35 வயதான அந்தப் பாண்டாவுக்கு கருணைக் கொலை செய்யப்பட்டுள்ளது. அதன் வயதானது மனித வாழ்நாளுடன் ஒப்பிடுகையில் 105 வயதுக்கு நிகராகும்.

கடந்த சில வாரங்களாக உடல் நிலை மோசமடைந்த நிலையிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது என்று ஓசியன் பூங்கா அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளது. ஆன் ஆன் அதன் ஜோடியான ஜியா ஜியாவுடன் சீன மத்திய அரசால் 1999 இல் ஹொங்கொங்கிற்கு அன்பளிப்புச் செய்யப்பட்டது.

அதன் ஜோடியான ஜியா ஜியா 2016 ஆம் ஆண்டு தனது 38 வயதில் இறந்தது.

இது மனிதப் பராமரிப்பில் அதிக காலம் உயிர் வாழ்ந்த பெண் பண்டா கரடியாக பதிவாகியுள்ளது.

## காஷ்மீரில் போதைப்பொருள் பயங்கரவாத ஆயுதமாக பயன்படுத்தப்படுவதாக புகார்

### காஷ்மீர் மக்களுக்கு முன்னணி எச்சரிக்கை



ஜம்மு காஷ்மீரில் ஆயுதமேந்திய பயங்கரவாதம் குறைந்து வந்தாலும் அதற்குப் பதிலாக போதைப் பொருள் ஒரு பயங்கரவாத ஆயுதமாக இங்கு பயன்படுத்தப்படுகிறது என்று ஜம்மு காஷ்மீர் மக்கள் நீதி முன்னணி தெரிவித்துள்ளது. வடக்கு காஷ்மீரின் பரமுல்லா மாகாணத்தின் ஹைகாம் பகுதியில் இம் முன்னணி நடத்திய போதைப் பொருள் தடுப்பு விழிப்புணர்வு கூட்டத்தில் உரையாற்றியோர் இக்கருத்தை வெளிப்படுத்தினர்.

காஷ்மீரிகளை குறிப்பாக இளைய தலைமுறையினரை போதைப் பழக்கத்துக்கு அடிமைப்படுத்துவதன் மூலம் வலுவற்ற சமூகமாக அவர்களை மாற்றி தமது இலக்கை அடையலாம் என அண்டை நாடு திட்டமிடுவதாகவும் ஆனால் இதைத் தடுத்து நிறுத்தக் கூடிய நிலையில் தாம் இருப்பதாகவும் இங்கு உரையாற்றிய பரமுல்லாவின் உயர் பொலிஸ் அதிகாரியான ஸஷூர் அஹ்மட் ரைனா தெரிவித்தார்.

காஷ்மீரிகள் மத்தியில் போதைப் பழக்கம் பரவி வருவதாகவும் அது கட்டுமீறிச் செல்வதற்கு முன்னரே இப்பழக்கம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட வேண்டும் என்றும் இக்கூட்டத்தில் கூறப்பட்டது. போதைப்பொருள் பழக்கம் தொடர்பான விழிப்புணர்வு பிரசாரம் காஷ்மீரில் அதிக அளவில் மேற்கொள்ள வேண்டிய அவசியம் இங்கே வலியுறுத்தப்பட்டது.

## தமது உரிமை மீறப்படுவதாக மென்பொருள் தயாரிப்பாளர் குற்றச்சாட்டு

### சட்டப்படியே நடப்பதாக சீன நிறுவனம் விளக்கம்



சீன மென்பொருள் நிறுவனமான 'கிங்சொப்ட்' மென்பொருட்களை வடிவமைத்து எழுதுபவர்கள் மீது கட்டுப்பாடுகளை விதிப்பதாகவும் எழுதுவிக்கப்படும் பொருள் என்ன என்பது தொடர்பான விவரங்கள் மறைக்கப்படுவதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. பலர் சமூக இணைய தளங்களில் விமர்சனங்களை முன்வைத்துள்ளனர்.

மென்பொருள் எழுதுபவரான மிஃபிகூ தான் எழுதிய மென்பொருள் தொகுதி தனக்கு வழங்கப்பட்ட போது தடைசெய்யப்பட்ட தகவல்களைக் கொண்டிருப்பதால் அதைத் திறக்க முடியாது என்ற எச்சரிக்கையுடன் அது காணப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். பத்து இலட்சத்துக்கும் அதிகமான சொற்களைத் தான் எழுதியிருப்பதாகவும் ஆனால் அந்த ஆவணங்களைத் தன்னால் திறந்துபார்க்கும் உரிமை மறுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் கூறியுள்ளதாக வோல் ஸ்ட்ரீட் ஜேர்னல் தெரிவித்துள்ளது.

இச்செய்தி சமூக ஊடகங்களில் அடிபடத் தொடங்கியதும் சீன சைபர் ஸ்பேஸ் சட்டதிட்டங்களுக்கு அமைவாகவே அந்த மென்பொருள் ஆவணத்தை மூன்றாம் நபர் பார்வையில் இருந்து தடுத்துவிட்டதாக கிங்சொப்ட் நிறுவனம் காரணம் கூறியுள்ளது.

## சூறாவளியையும் தாக்குப் பிடிக்கும் கூடாரங்கள் திபெத்தில் சீனா அமைத்து வருகிறது




கடுங் குளிரையும், துருப்பிடித்தலையும் மேலும் சூறாவளியையும் தாங்கக்கூடிய புதிய இராணுவ கூடாரங்களை சீனா திபெத்திலும் தென்சீனக் கடல் தீவுகளிலும் நிறுவி வருவதாக ஒசின்ட் டிவி நிறுவனம் செய்தி வெ ளியிட்டுள்ளது.

சிறிய கூடாரங்களில் எட்டுப் பேரும் பெரிய கூடாரங்களில் 16 பேரும் தங்கக்கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ள இவற்றை சில நிமிடங்களிலேயே அமைக்கவும் அல்லது கழற்றி எடுத்துச் செல்ல முடியும் என்று இச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1950 களில் திபெத்தைக் கைப்பற்றிய சீனா, அது சீனாவின் ஒரு பகுதியாகவே சரித்திரகாலம் முதல் இருந்து வந்திருக்கிறது என்று கூறி வருகிறது. மொத்த சீன நிலப்பரப்பின் கால்வாசி பகுதி பரப்பளவைக் கொண்டதாக திபெத் விளங்குகிறது.

இதேசமயம் தென்சீனக் கடல் பிராந்தியத்தை சொந்தம் கொண்டாடும் சீனா, ஸ்பிராட்லி தீவுகளின் மீது ஆதிக்கம் செலுத்த விரும்புகிறது. இத் தீவுகளை தாய்வான், வியட்நாம், புரூணை மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளும் சொந்தம் கொண்டாடுகின்றன. இத்தீவுகளிலும் சீனா இப் புதிய வகை கூடாரங்களை அமைத்து வருகிறது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 ஜுலை 22 வெள்ளிக்கிழமை
தினகரன்
THINAKARAN



**தொழுகை நேரம்**

19 முதல் 23 வரை

சுபஹ் - 04.41
ளுஹர் - 12.18
அஸர் - 03.43
மஃரிப் - 06.32
இஷா - 07.47

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் ஆடி 6

ராகுகாலம் : பகல் : 10.30 - 12.00வரை
சுபநேரம் : காலை : 9.00 - 10.30வரை

யோகம்: சித்தயோகம்
திதி: நவமி

**இராசி பலன்கள்**

மேஷம் - சுகம்
ரிஷபம் - வெற்றி
மிதுனம் - தனம்
கடகம் - போட்டி
சிம்மம் - கோபம்
கன்னி - முயற்சி
துலாம் - நன்மை
விருச்சிகம் - நிறைவு
தனுசு - மறதி
மகரம் - பொறுமை
கும்பம் - செலவு
மீனம் - பாராட்டு

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

பாதுகாப்பு அமைச்சுக்கு ஜனாதிபதி விஜயம்

# பாதுகாப்புச் செயலாளர், முப்படையின் தளபதிகள், உயரதிகாரிகளுடன் சந்திப்பு





**ஸாதிக் ஷிஹான்**

முப்படைகளின் தளபதியான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் நடைபெற்ற பதவிப்பிரமாண நிகழ்வைத் தொடர்ந்து நேற்று (21) கோட்டே ஸ்ரீ ஜயவர்தனபுரயிலுள்ள பாதுகாப்பு தலைமையக வளாகத்தில் அமைந்துள்ள பாதுகாப்பு அமைச்சுக்கு விஜயம் செய்தார்.

பாதுகாப்பு அமைச்சுக்கு வருகை தந்த ஜனாதிபதியை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமல் குணரட்ண வரவேற்றார்.

ரணில் விக்கிரமசிங்க நேற்றுக் காலை ஜனாதிபதியாக பதவிப் பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் அரச நிறுவனமொன்றுக்கு தனது முதல் விஜயத்தை மேற்கொண்டு பாதுகாப்பு அமைச்சுக்கு வருகை தந்து பாதுகாப்பு உயர் அதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடலொன்றை மேற்கொண்டார்.

முன்னாள் அமைச்சர் டிரான் அலஸ், சட்ட மாஅதிபர், ஜனாதிபதியின் செயலாளர், பாதுகாப்புப் படைகளின் பிரதம அதிகாரி, முப்படைத் தளபதிகள், பொலிஸ் மா அதிபர், தேசிய புலனாய்வுத் தலைவர், அரச புலனாய்வுச் சேவை பணிப்பாளர் மற்றும் அமைச்சின் உயர் அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். ஜனாதிபதி தனது வருகையின் நினைவாக விசேட பிரமுகர் புத்தகத்திலும் கையொப்பமிட்டார்.

# இலஞ்சம் பெற்றதாக குற்றச்சாட்டு:

## விசாரணைகளை நடத்துமாறு நிமல் சிறிபால டி சில்வா ஜனாதிபதியிடம் வேண்டுகோள்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ஜப்பானிய நிறுவனமொன்றில் இலஞ்சம் பெற முற்பட்டதாக தம்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பில் விரைவான விசாரணைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு முன்னாள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேற்படி குற்றச்சாட்டு தொடர்பில் சுயாதீனமான விசாரணையொன்றை மேற்கொள்வதற்கு வசதியாக தாம் அமைச்சர் பதவியிலிருந்து விலகிக்கொண்டதாகவும் எனினும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டைவிட்டு வெளியேறியதையடுத்து அந்த விசாரணைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

அமைச்சுப் பதவியை பெற்றுக்கொள்வதற்கு முதல் முழுமையான விசாரணையை விரைவாக நடத்தி தமது குற்றமற்ற தன்மையை வெளிப்படுத்துவதே அவசியமென்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவ்வாறு இலஞ்சம் எதனையும் பெற்றுக்கொள்ளவில்லையென்று சம்பந்தப்பட்ட ஜப்பான் நிறுவனம் ஏற்கனவே தெரிவித்துள்ளது என குறிப்பிட்டுள்ள நிமல் சிறிபால டி சில்வா தான் நிரபராதியென மிகுந்த பொறுப்புடன் தெரிவிக்க விரும்புவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி செயலகம், பிரதமர் அலுவலகம்

# மக்கள் போராட்டம் எனும் பெயரால் சிலர் ஆக்கிரமிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நான் ராஜபக்ஷக்களின் நண்பனல்ல, நாட்டு மக்களின் நண்பனென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். ராஜபக்ஷக்களோடு செயற்பட்டாலும் நான் அவர்களது நண்பனல்ல என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நான் எனக்குத் தெரிந்த காலத்திலிருந்து அவர்களுக்கு எதிரானவன்.

## எவ்வகையிலும் ஏற்க முடியாது



இப்போது வெளிநாட்டிலிருந்து நீங்கள் வந்து நான் ராஜபக்ஷ ஆதரவாளரா? என்று கேட்பது எவ்வாறு? ஒரு ஊடகவியலாளராக நீங்கள் ஆழ்ந்த தேடலில் ஈடுபட வேண்டும்.இது போன்ற கேள்விகளை கேட்க வேண்டாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டதையடுத்து நேற்று முன்தினம் மாலை கொழும்பு ஹுணுப்பிட்டி கங்காராம விகாரைக்கு விஜயம் செய்து சமய வழிபாடுகளில் ஈடுபட்டார். இங்கு ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் நடைமுறைச் சட்டங்களுக்கு முரணாக செயற்படுபவர்களுக்கு எதிராக சட்டம் நடைமுறைப்படுத்தப்படும். போராட்டம் என்ற போர்வையில் அரசாங்கத்தை கவிழ்க்கவும் வீடுகளுக்கு தீ வைக்கவும் ஜனாதிபதி செயலகம் மற்றும் பிரதமர் அலுவலகம் ஆகியவற்றின் மீது தாக்குதல் நடத்துவதும் ஜனநாயக செயற்பாடுகளல்ல என்றார்.

போராட்டம் என்ற போர்வையில் ஜனநாயகத்துக்கு எதிராகவும் சட்டத்துக்கு எதிராகவும் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளுக்கு இடமளிக்க முடியாதென

06

# கடல் வழியாக ஆஸி செல்ல முற்பட்ட 09 பெண்கள் உட்பட 33 பேர் கைது



இலங்கையிலிருந்து கடல் வழியாக அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாக செல்ல முயன்றதாக சந்தேகிக்கப்படும் 33 பேர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களை கைது செய்ய இலங்கை கடற்படையினர் நேற்று முன்தினம் (21) காலை நீர்கொழும்பு கடற்பகுதியில் விசேட தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

மேற்கு கடற்படை கட்டளையுடன் இணைக்கப்பட்ட நான்காவது விரைவு தாக்குதல் கடற் படைக்கு சொந்தமான P 435 விரைவு தாக்குதல் கப்பல், (21) அதிகாலை நீர்கொழும்பு கடல் பகுதியில் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது, சந்தேகத்துக்கிடமான ஆழ்கடல் வள்ளத்தை அவதானித்தது. அதனை சோதனை செய்தபோது சட்டவிரோதமான முறையில் கடல் மார்க்கமாக வெளிநாடுகளுக்கு செல்ல முயன்ற 19 ஆண்கள், 09 பெண்கள், 05 குழந்தைகள் உட்பட 33 பேரை கடற்படையினர் கைது செய்தனர். படகை இயக்கிய நால்வரும் கைது செய்யப்பட்டனர்.

இந்த தேடுதல் நடவடிக்கையில் 18 வயதுக்கும் 65 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் உட்பட கடற்படையினரால் கைது செய்யப்பட்டவர்கள் சிலாபம், மாரவில, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய பகுதிகளில் வசிப்பவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

# கல்வித் துறையினருக்கு எரிபொருள் வழங்குவதில் முன்னுரிமையளிக்கவும்

## ஜனாதிபதி, அமைச்சர் மற்றும் அதிகாரிகளிடம் கல்வி அமைச்சர் வேண்டுகோள்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பாடசாலைகளை எதிர்வரும் 25ஆம் திகதி கல்வி நடவடிக்கைகளுக்காக திறக்கும் வகையில் கல்வித் துறையினருக்கு எரிபொருள் வழங்குவதில் முன்னுரிமையளிக்குமாறு கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கடுமையான உத்தரவை விடுத்துள்ளார்.

எரிபொருள் விநியோக செயற்திட்டத்தின் பொறுப்பானவர்களுடன் அமைச்சர் அது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதுடன், ஜனாதிபதிக்கும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கும் அதுதொடர்பில் உரிய வேண்டுகோளையும் தாம் விடுத்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

உலகில் எங்கும் எரிபொருள் பிரச்சினை காரணமாக பாடசாலைகள் மூடப்படுவதில்லையென்பதையும் அவர்களுக்கு சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது மூடப்பட்டுள்ள பாடசாலைகள் மீண்டும் திறப்பதற்கு வசதியாக எரிபொருள் வழங்கும் நடவடிக்கைகளை விரைவுபடுத்துமாறு சம்பந்தப்பட்ட கல்வித் துறை அதிகாரிகளுக்கு அவர் கடுமையான உத்தரவை பிறப்பித்துள்ளார்.

நாட்டில் தற்போது நிலவும் எரிபொருளுக்கான வரிசையை முடிவுக்கு கொண்டுவரும் வகையில் கொள்வனவு செய்யப்பட்டுள்ள எரிபொருளை விநியோகிப்பதற்கான விரைவான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அவ்வாறு கல்வித் துறையினருக்கும் விரைவாக எரிபொருளை வழங்கி, விரைவாக பாடசாலைகளை ஆரம்பிக்குமாறு தாம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடமும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களிடம் கேட்டுக்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

QR முறைமையை விட்டுவிட்டு விரைவாக எரிபொருள் வரிசைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்;.

எதிர்வரும் 25ஆம் திகதி பாடசாலைகளை ஆரம்பிக்கவுள்ளதால் வாரத்தில் 03 தினங்களுக்கு கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள தீர்மானித்துள்ளதாகவும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க திங்கள், செவ்வாய், மற்றும் வியாழன் ஆகிய தினங்களில் பாடசாலைகளை திறக்கவும் புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் வீட்டிலிருந்து கற்கக் கூடிய வகையில் ஒன்லைன்

06

# குளிக்கச் சென்ற இரண்டு மாணவர்கள் உயிரிழப்பு

## பேராதனை பகுதி குளம் ஒன்றில் அனர்த்தம்



பேராதனை, நெல்லிகல குளத்தில் குளிக்கச் சென்ற பாடசாலை மாணவர்கள் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

யட்டகலதென்ன பிரதேசத்தை சேர்ந்த 17 மற்றும் 18 வயதுடைய இருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இவர்கள் நேற்றுமுன்தினம் (20) மாலை நெல்லிகல குளத்தில் குளிக்கச் சென்ற போது நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளனர்.

பின்னர், பொலிஸ் அதிகாரி களும், இராணுவ அதிகாரிகளும் சேர்ந்து நீரில் மூழ்கிய இருவரின் உடல்களையும் கண்பிடித்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பேராதனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# எல்லைதாண்டி மீன்பிடித்த தமிழக மீனவர் அறுவர் கைது

## தலைமன்னார் கடற்பகுதியில் கடற்படை அதிரடி



இராமேஸ்வரத்திலிருந்து நேற்று முன்தினம் (20) மீன் பிடிக்க வந்த ஒரு படகையும், அதிலிருந்த 6 மீனவர்களையும் எல்லை தாண்டி மீன் பிடித்ததாக இலங்கை கடற்படையினர் கைது செய்து தலைமன்னார் கடற்படை முகாமிற்கு அழைத்து சென்று விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து நேற்று முன்தினம் புதன்கிழமை காலை 400க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் மீனவர்கள் மீன்பிடி அனுமதி சீட்டு பெற்று மீன்பிடிக்க கடலுக்கு வந்தனர்.

06

# எம்.பி பதவியிலிருந்து விலக தம்மிக்க பெரேரா தீர்மானம்?

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான தம்மிக்க பெரேரா பொதுஜன பெரமுன தேசிய பட்டியல் எம்.பி பதவியிலிருந்து விலகுவதற்கு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ தமது பதவியை இராஜினாமா செய்ததையடுத்து வெற்றிடத்துக்கு தம்மிக்க பெரேரா நியமிக்கப்பட்டதுடன் அவருக்கு முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் பதவியும் வழங்கப்பட்டது.

எனினும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டைவிட்டு வெளியேறியதையடுத்து தம்மிக்க பெரேரா தமது அமைச்சர் பதவியை இராஜினாமா செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் அவர் தனது பொதுஜன பெரமுன தேசிய பட்டியல் எம்.பி பதவியிலிருந்தும் விலகுவதற்கு தீர்மானித்துள்ளதாக தெரியவந்துள்ளது.

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 245.76 | 257.09 |
| கனடியன் டொலர் | 276.47 | 288.75 |
| யூரோ | 364.85 | 379.31 |
| ஜப்பான் யென் | 2.5880 | 2.6672 |
| சிங்கப்பூர் டொலர் | 255.88 | 266.36 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 428.26 | 445.24 |
| சுவிஸ் பிராங்க் | 361.49 | 377.54 |
| அமெரிக்க டொலர் | 358.53 | 368.90 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 959.90 | கட்டார் ரியால் | 98.40 |
| குவைத் டினார் | 1,177.04 | சவூதி ரியால் | 96.37 |
| ஓமான் ரியால் | 939.90 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.51 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் ஆடி மாதம் 06ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 துல்ஹிஜ்ஜஹ் பிறை 22

### குறள் தரும் சிந்தனை

ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால்
செல்லும்வாய் நோக்கிச் செயல்

இயலும் இடங்களில் எல்லாம் செயல் முடிப்பது நலம் தரும். இயலாத இடமாயின் அதற்கேற்ற வழியை அறிந்து அந்தச் செயலை முடிக்க வேண்டும்.

## புதிய ஜனாதிபதி நியமனத்தையடுத்து தோன்றிய நம்பிக்கை எதிர்பார்ப்புகள்!

எமது நாட்டின் நிறைவேற்று அதிகாரமுள்ள எட்டாவது ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க நேற்று வியாழக்கிழமையன்று பதவியேற்றுள்ளார். ஜனாதிபதியாகப் பதவி வகித்த கோட்டாபய ராஜபக்ஷ நாட்டில் உருவான மோசமான பொருளாதார நெருக்கடி காரணமாக தனது பதவியிலிருந்து விலகியதையடுத்து, நாட்டின் அரசியலமைப்பு விதிமுறைகளுக்கமைய புதிய ஜனாதிபதியொருவரைத் தெரிவு செய்வதற்காக கடந்த புதன்கிழமையன்று பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடைபெற்றது.

அந்த வாக்கெடுப்பில் ரணில் விக்கிரமசிங்க அதிகூடிய ஆதரவு வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியாகத் தெரிவானார். இலங்கைப் பாராளுமன்றத்தில் மொத்த எம்.பிக்களின் எண்ணிக்கை 225 ஆகும். அவர்களில் 134 வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டி புதிய ஜனாதிபதியாகத் தெரிவாகி நேற்று பதவியேற்றுக் கொண்டுள்ளார் ரணில் விக்கிரமசிங்க.

நிராகரிக்கப்பட்ட நான்கு வாக்குகளையும், வாக்களிப்பில் பங்கேற்காத இரண்டு உறுப்பினர்களையும் தவிர ஏனைய 219 வாக்குகளையும் வைத்துப் பார்க்கின்ற போது, ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கிடைத்துள்ள ஆதரவு வாக்குகள் 134 ஆகும். அவ்வாறு பார்க்குமிடத்து அவர் பெற்றுள்ள வெற்றி அபாரமானதென்றே கூற வேண்டும்.

இந்த வெற்றியை இலங்கை மாத்திரமன்றி சர்வதேசமே வியப்புடன் உற்றுநோக்கியது. இவ்வெற்றியானது எமது நாட்டின் யதார்த்த நிலைமைகள் பலவற்றை மறைமுகமாக உணர்த்துகின்றது. நாட்டில் கடந்த சில மாதங்களாக நிலவுகின்ற தீவிரமான பொருளாதார நெருக்கடி மற்றும் மக்கள் போராட்டங்கள், அரசியல் கொந்தளிப்பு ஆகியவற்றின் மத்தியிலும் ரணில் விக்கிரமசிங்கவின் ஆளுமைத்திறன் மீது பாராளுமன்றம் முழுதான நம்பிக்கை வைத்துள்ளதென்பது நாட்டு மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டிய யதார்த்தம் ஆகும்.

இதனை வேறொரு முறையில் கூறுவதானால், இன்று அதலபாதாளத்தில் வீழ்ந்து கிடக்கின்ற நாட்டை நெருக்கடியில் இருந்து மீட்டெடுக்கின்ற ஆற்றல் மிகுந்த தலைவராக இலங்கையின் அரசியல் களத்தில் வேறெவரும் இல்லை என்பதே அர்த்தமாகும். எனவேதான் இத்தனை அரசியல் முரண்பாடுகளுக்கு மத்தியிலும் புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்கவை பெரும்பான்மையான பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்துள்ளனர்.

ஆசிய நாடுகளின் அரசியல் தலைவர்களில் அனுபவமும், ஆற்றலும் மிகுந்தவராக மதிக்கப்படுபவர் ரணில் விக்கிரமசிங்க ஆவார். அவர் கொண்டுள்ள கல்விப் புலமையை சர்வதேசமே நன்கறியும். இலங்கையில் அவரால் அறிமுகம் செய்யப்பட்ட கல்விச் சீர்திருத்தத் திட்டங்கள் ஏராளம். அத்திட்டங்களே நாட்டின் கல்விமான்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு இன்றும் நடைமுறையில் இருந்து வருகின்றன. உலகின் இன்றைய மாற்றத்துக்கு ஏற்ப நவீன அறிவியல் தொழில்நுட்பத்தை நோக்கி எமது மாணவர்களை வழிநடத்த வேண்டுமென்பதில் உறுதி கொண்டவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

அதனைக் கருத்தில் கொண்டு மாணவர்களுக்கான புதிய வரப்பிரசாதங்கள் பலவற்றை அவர் அறிமுகம் செய்த வேளைகளில் நாட்டில் நிலவிய அரசியல் நெருக்கடிகள் காரணமாக அது சாத்தியப்படாமல் போய் விட்டது. எமது நாட்டின் பெரும்பாலான அரசியல்வாதிகள் தங்களது அரசியல் நலன்களை மாத்திரம் கருத்திற் கொண்டு செயற்பட்டதன் விளைவே அது.

பொருளாதாரத் திட்டங்களை வகுப்பதிலும் ஆற்றல் மிகுந்தவராக புதிய ஜனாதிபதி காணப்படுகின்றார். நாட்டின் இன்றைய பொருளாதார நெருக்கடி வேளையில் அவர் கொண்டுவரவிருக்கும் திட்டங்கள் நாட்டை மீட்டெடுக்குமென்பதே பொருளாதார நிபுணர்களின் நம்பிக்கையாக உள்ளது. அதாவது நாட்டில் பல மாதங்களாக நிலவி வருகின்ற பொருளாதார நெருக்கடி இன்னும் ஓரிரு மாதங்களில் ஓரளவு தணிவு நிலைமையை நோக்கிச் செல்லுமென்பதே பலரதும் நம்பிக்கையாக இருக்கின்றது.

புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்றிருக்கின்ற ரணில் விக்கிரமசிங்க வகுத்திருக்கின்ற புதிய திட்டங்களும், பாராளுமன்றத்தில் அவருக்குக் கிடைத்திருக்கின்ற அதிகபட்ச ஆதரவும் அந்த நம்பிக்கையை வலுப்படுத்தியுள்ளன. அவரது பதவியேற்பு தொடர்பாக பலதரப்பினரும் வாழ்த்தும், நம்பிக்கையும் வெளியிட்டுள்ளனர். சர்வதேச நாடுகள் அவருக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளன. இலங்கையை நெருக்கடியில் இருந்து மீட்கக் கூடிய வல்லமையுள்ள தலைவர் அவரென சர்வதேச நாடுகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளன.

அதேவேளை ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதும் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் ஒரு விடயத்தை தெளிவாகத் தெரிவித்திருந்தார். நாடு இன்று பொருளாதார வீழ்ச்சியில் அகப்பட்டிருக்கும் போது அனைத்துத் தரப்பினரும் ஒன்றுபட்டு நின்று பணியாற்ற வேண்டுமென்பதே அவர் விடுத்த வேண்டுகோள் ஆகும். எமது நாட்டின் இன்றைய இக்கட்டான நிலைமையில் ஒன்றிணைந்த பயணமே மிக அவசியமானதாகும்.

அரசியல் ஆதாயங்களை மாத்திரமே நோக்கமாகக் கொண்டு இன்றைய இக்கட்டான நிலையில் செயற்படுவது தவறாகும். பொருளாதாரத்தை மீட்டெடுக்கின்ற விடயத்தில் அரசியல்வாதிகள் மத்தியில் ஒற்றுமையும் நம்பிக்கையுமே பிரதானமாகும்.

editor.tkn@lakehouse.lk

# இலங்கையை நெருக்கடியிலிருந்து மீட்கக் கூடிய ஆற்றல் மிகுந்த தலைவர் ரணில் விக்கிரமசிங்க



இலங்கையின் நிறைவேற்று அதிகாரமுடைய எட்டாவது ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க நேற்று பதவியேற்றுக் கொண்டார். பாராளுமன்ற வளாகத்தில் வைத்து பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய முன்னிலையில் புதிய ஜனாதிபதி நேற்று பதவியேற்றுக் கொண்டார்

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் எட்டாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக கௌரவ ரணில் விக்ரமசிங்க இன்று (21) பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய முன்னிலையில் பதவியேற்றுக்கொண்டார்.

பாராளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள், முதற் பெண்மணி பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்க உள்ளிட்ட பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகியதைத் தொடர்ந்து ஏற்பட்ட ஜனாதிபதி பதவி வெற்றிடத்துக்கு புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் இரகசிய வாக்கெடுப்பு நேற்றுமுன்தினம் (20) நடைபெற்றதுடன், இதில் பதில் ஜனாதிபதியாகக் கடமையாற்றியிருந்த ரணில் விக்கிரமசிங்க 134 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றிருந்தார்.

### புதிய ஜனாதிபதி பதவியேற்றதையடுத்து சர்வதேச நாடுகள் பெரிதும் நம்பிக்கை

நேற்றுக் காலை பாராளுமன்ற கட்டட தொகுதிக்கு வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முப்படைகளின் அணிவகுப்பு மரியாதையுடன் சபாநாயகர், படைகல சேவிதர், பாராளுமன்ற செயலாளர் நாயகம் ஆகியோரால் வரவேற்கப்பட்டார்.







இதனை தொடர்ந்து பதவிப்பிரமாணம் நடைபெற்றது. இதேவேளை பாராளுமன்றத்திற்கு செல்லும் வீதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதிகளான மைத்திரிபால சிறிசேன, மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்டோரும் கலந்து கொண்டிருந்தனர்.

இது இவ்விதமிருக்க ஜனாதிபதியின் செயலாளராக சமன் ஏக்கநாயக்க நேற்று நியமிக்கப்பட்டுள்ளார். இந்தத் தகவலை ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டது தொடர்பில் உள்நாட்டு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மாத்திரமன்றி சர்வதேச நாடுகளின் தலைவர்களும் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கையை மீட்டெடுப்பதற்கான ஆற்றல் மிகுந்த தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆவார் என்று சர்வதேச நாடுகளின் தலைவர்கள் தங்களது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளனர்.

எதிர்வரும் நாட்களில் இலங்கையில் சிறந்த மாற்றங்களை எதிர்பார்க்க முடியுமென பலரும்நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இலங்கையின் புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து பணியாற்ற எதிர்பார்த்துள்ளோம் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங் தெரிவித்துள்ளார்.

தமது உத்தியோகபூர்வ டுவிட்டர் பதிவிலே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இன்றைய சவாலான காலங்களில் பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்கும், ஜனநாயகம் மற்றும் பொறுப்புக்கூறலை நிலைநிறுத்துவதற்கும், அனைத்து இலங்கையர்களுக்கும் நிலையான மற்றும் பாதுகாப்பான எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதற்கும் அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயல்படுவதற்கான முயற்சிகளை இரட்டிப்பாக்குவது அவசியமாகும் எனவும் அமெரிக்கத் தூதுவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேசமயம் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவானது குறித்து வெளிநாட்டு ஊடகங்களும் முக்கியத்துவம் அளித்து செய்திகளை வெளியிட்டுள்ளன. நாட்டை மீட்கக் கூடிய ஆற்றல் மிக்க தலைவர் அவரென அந்த ஊடகங்கள் சுட்டிக் காட்டியுள்ளன.

இலங்கை மக்கள், ஆய்வாளர்கள் மற்றும் சக அரசியல்வாதிகள் சற்றும் எதிர்பார்க்காத வகையில் ரணில் விக்கிரமசிங்க நாட்டின் ஜனாதிபதியாக தெரிவானது நாட்டுக்கான அதிர்ஷ்டம் என்று நாட்டு மக்கள் நம்புவதாக வெளிநாட்டு ஆங்கில ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

இதனிடையே ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கை மறுசீரமைப்பு, தாராளமய அணுகுமுறை மற்றும் இலங்கை மத்திய வங்கியை சுயாதீனமாக மாற்றுவது போன்றவற்றை ஏற்றுக் கொள்வதாக மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் டப்ளியூ.ஏ. விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

# இலங்கையில் இல்லாமல் போன மிக உயரமான புகையிரதப் பாதை!

இலங்கையில் 1900 களின் முற்பகுதியில் நானுஓயாவிலிருந்து ராகலை வரை நிர்மாணிக்கப்பட்ட 'உடபுஸ்ஸல்லாவ குறுகிய புகையிரதப் பாதை' இரண்டாம் உலகப் போரின் பொருளாதார நெருக்கடிகளாலும், நெடுஞ்சாலைகளின் அபிவிருத்தியினாலும் அழிவடைந்தது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில், தேயிலை மற்றும் தோட்டப் போக்குவரத்திற்காக இந்த பாதை அமைக்கப்பட்டது.

தற்போதுள்ள பட்டிப்பொல ரயில் நிலையம் கடல் மட்டத்திலிருந்து 6204 அடி உயரத்தில் உள்ளது. உடபுஸ்ஸல்லாவ ரயில்பாதை இருந்திருந்தால், கடல் மட்டத்தின் மிக உயரமான இடம் கந்தப்பொலவுக்குச் செல்லக் கூடியதாக இருக்கும்.

1895ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி நுவரெலியாவை வந்தடைந்த சேர் வெஸ்ட் ரிட்ஜ்வே இந்த புதிய ரயில் பாதைக்கான கோரிக்கையை முன்வைத்துள்ளார். 19 மைல் நீளமான ரயில் பாதைக்கான பணிகள் 1900 இல் ஆரம்பிக்கப்பட்டன, மேலும் நானுஓயாவிலிருந்து ராகலை வரையிலான குறுகிய ரயில் பாதையின் பணிகள் 1904 இல் நிறைவடைந்தன.

ரயில் பாதை அமைப்பதற்கான மொத்த செலவு ரூபா 1,653,452.00.

உடபுஸ்ஸல்லாவ பாதையில் இயங்கிய முதல் நீராவி இயந்திரம் 1902 இல் இங்கிலாந்தில் இருந்து ஃபாஸ்ட் ஸ்டீவர்ட் என்பவரால் இறக்குமதி செய்யப்பட்டது. 1934 இன் ரயில்வே புள்ளிவிவரங்களின்படி, 7279 பயணிகள் ரயிலில் பயணம் செய்தனர்.

பல்வேறு பிரச்சினைகள் காரணமாக உடபுஸ்ஸல்லாவ குறுகிய ரயில் பாதையை மூடுவதற்கு அப்போதைய அதிகார சபை தீர்மானித்தது. 1942 இல் ராகலை முதல் நுவரெலியா வரையிலான புகையிரதத்தின் முதலாவது பகுதி மூடப்பட்டது.

உடபுஸ்ஸல்லாவ ரயில்பாதை இன்று பாவனையில் இருந்திருந்தால் அது உலகின் மிக அழகான புகையிரத நிலையமாக இருந்திருக்கும். எவ்வாறாயினும், அதிக செலவு மற்றும் பல சிரமங்கள் காரணமாக இந்த வீதியை கடந்த காலங்களில் மீண்டும் திறக்க முடியாமல் போனது.

அந்தப் புகையிரத பாதையை புனரமைப்பு செய்தால் இப்பகுதியில் வாழும் மக்கள் பயன் பெற முடியும்.

மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்

# யுத்தம் முடிவுற்று பல வருட காலம் கடந்த போதிலும் துன்பம் இன்றும் தீரவில்லை!

### கரைதுறைப்பற்று பிரதேச மீனவரின் துயரம்

நாட்டில் இடம்பெற்ற முப்பது வருடகால யுத்தம் பலரது வாழ்விலும் பல்வேறு துன்பங்களை விட்டுச் சென்றுள்ளது. அந்த வகையில் பலரது வாழ்விலும் இன்றைய பொருளாதார நெருக்கடியும் எரிபொருள் தட்டுப்பாடும் மீண்டும் அம்மக்களை துன்பத்தில் தள்ளியுள்ளன. இவ்வாறு வலிகளுடன் வாழும் ஒரு மீனவனின் வாழ்வின் சோகம் இது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வட்டுவாகல் கிராமத்தில் தனது மனைவி மற்றும் மூன்று பிள்ளைகளுடன் வசித்து வருகிறார் கரைவலை சம்மாட்டியான குமாரசாமி தசரதகுமார் (தவராசா).

1995 ஆம் ஆண்டு பொக்கை பகுதி கடற்பரப்பில் இடம்பெற்ற தாக்குதல் காரணமாக தனது வலது காலை இழந்த நிலையில் இன்று தனது ஒற்றைக் காலுடன் இன்றும் தனது தொழில் நடவடிக்கைகளை அவர் முன்னெடுத்து வருகிறார்.

2009 ஆம் ஆண்டு யுத்தத்தில் மாத்தளன் பகுதியில் தனது மூத்த மகன் தாக்குதலில் உயிரிழந்த நிலையில் மகனை இழந்த துன்பத்தில் அவர் வாழ்ந்தார். நாட்டில் பொருளாதார நெருக்கடிகளுக்குள் வாழ முடியாத நிலையில் தனது இரண்டாவது மகனை பல்வேறு துன்பங்களுக்குள் கனடா நாட்டுக்கு அனுப்பியுள்ளார் அவர்.

கனடா நாட்டுக்குச் செல்ல சென்ற இவருடைய இரண்டாவது மகன் இந்தியாவில் தங்கியிருந்த நிலையில் 2020 ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்டு பெங்களூர் சிறையில் தபோது உள்ளார்.

இந்நிலையில் கல்வி கற்கின்ற தனது மூன்று பிள்ளைகளையும் கற்பிப்பதற்காகவும் தனது வாழ்வாதாரத்துக்காகவும் ஒற்றைக் காலுடன் போராடி இன்றும் தனது தொழில் நடவடிக்கைகளை அவர் முன்னெடுத்து வருகிறார்.

இவ்வாறன துன்பங்களோடு இன்றைய பொருளாதார நெருக்கடி மற்றும் எரிபொருள் தட்டுப்பாடுகளுக்கு மத்தியில் தொழில் நடவடிக்கையில் ஈடுபடும் குமாரசாமி தசரதகுமார் இவ்வாறு கருத்து தெரிவித்தார்.







"கடந்த ஒரு மாத காலத்திற்கு மேலாக எரிபொருள் இல்லாத நிலையினால் தொடர்ச்சியாக தொழிலை மேற்கொள்ள முடியாமல் இப்போதுதான் தொழிலை ஆரம்பித்துள்ளேன். இருப்பினும் உரிய வகையில் எரிபொருட்களை பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் அந்தத் தொழிலை தொடர்ச்சியாக செய்ய முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளேன். தற்போதைய பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் என்னுடன் பணியாற்றுகின்ற தொழிலாளர்களின் சம்பளங்களை வழங்குவதற்கு கூட வருமானங்களை பெற்றுக் கொள்ள முடியாதவாறு உள்ளேன்.

மீன்கள் பிடிபடுகின்ற அளவு குறைவாக காணப்படுவதோடு அதனை விற்பதால் இலாபமும் கிடைப்பதில்லை. முன்னையை காலத்தில் சட்டவிரோத தொழில்கள் இல்லாததன் காரணமாக அதிகளவான மீன்களை பெறக் கூடியதாக இருந்தது. தற்போது இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறிய தொழில் நடவடிக்கைகள் மற்றும் சட்டவிரோத தொழில்கள் காரணமாக எங்களுடைய தொழில் பாதிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் நெருக்கடி காரணமாக எந்த ஒரு தொழிலையும் செய்ய முடியாத அளவுக்கு தள்ளப்பட்டுள்ளோம். எனவே எரிபொருட்களை பெற்றுக் கொள்வதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்." இவ்வாறு அவர் கோரிக்கை விடுத்தார்.

எஸ். தவசீலன்...
(மாங்குளம் குறூப் நிருபர்)

# ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# ஹிஜ்ரி ஆண்டு முறைமை எவ்வாறு உருவானது?

ஆண்டுகளின் கணிப்பீடு முக்கிய நிகழ்வுகளை கவனத்தில் கொண்டு தான் பெரும்பாலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறிப்பாக ஈஸா நபியின் பிறப்பை அடிப்படையாகக் கொண்டு கிறிஸ்தவர்கள் ஆண்டை கணக்கிட்டுள்ளனர். அதுவே கி.பி (கிறிஸ்து பிறப்புக்கு பின்), கி.மு.(கிறிஸ்து பிறப்புக்கு முன்) எனப்படுகிறது. இந்நடைமுறையே இன்று பரவலாகப் பின்பற்றப்படுகிறது.

அந்த வகையில் இஸ்லாமியர்கள் ஹிஜ்ரி ஆண்டைக் கடைபிடிக்கின்றனர். இது முஸ்லிம்கள் கடைபிடிக்கும் வருடமுறைமையாகும். இந்த ஹிஜ்ரி ஆண்டின் இவ்வருட முதல் மாதமான முஹர்ரம் ஆரம்பமாகவிருக்கும் தற்போதைய சூழலில் இம்முறைமை எவ்வாறு உருவானது என்பதை அறிந்து கொள்வது பயன்மிக்கதாக இருக்கும். இந்த ஹிஜ்ரி வருட முறைமை நபி (ஸல்) அவர்கள் வாழ்ந்த காலப்பகுதியில் காணப்படவில்லை. ஆண்டின் முதல் மாதம் என்பது முஹர்ரம் என்றும் இருக்கவில்லை. நபிகளாரின் காலத்தில் யானை ஆண்டு என்றே குறிப்பிட்டு வந்தனர்.

அதாவது நபி (ஸல்) அவர்களது காலத்திற்கு முன்னர் அப்ரஹா என்ற மன்னன் யானை படையுடன் கஃபதுல்லாஹ்வை அழிக்க வந்த போது அல்லாஹ், பறவைகள் மூலம் அப்படையை முறியடித்தான். இது தொடர்பில் அல் குர்ஆனின் 105வது அத்தியாயம் குறிப்பிடுகிறது. இவ்வத்தியாயமே ஃபீல் யானை எனவும் பெயரிடப்பட்டுள்ளது. இச்சம்பவம் அரபுலகத்தில் பிரபலமானது. இச்சம்பவம் நடந்த ஆண்டு தான் அன்றைய அரபுலகில் வருடத்தைக் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்பட்டது.

'நானும் நபி (ஸல்) அவர்களும் யானை ஆண்டில் பிறந்தோம்' என்று கைஸ் பின் மக்ரமா (ரலி) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். **(ஆதாரம்: திர்மிதீ, அஹ்மத்)**

இதன்படி நபி(ஸல்) அவர்கள் காலத்தில் ஆண்டுக் கணிப்பீடு, யானை ஆண்டு என்று குறிப்பிட்டு வந்துள்ளது என்பது தெளிவாகிறது. நபி (ஸல்) அவர்கள் மதீனாவுக்குச் சென்ற போது வருடத்தைக் கணக்கிடுமாறு கட்டளையிட்டார்கள். ரபீவுல் அவ்வல் மாதத்தில் கணக்கிடப்பட்டது என்ற செய்தி இமாம் ஹாகிமின் அல்இக்லீல் என்ற நூலில் இடம் பெற்றுள்ளது. ஆனால் இது முஃளல் என்ற வகையைச் சார்ந்த மிகவும் பலவீனமான செய்தி என்று ஹாபிழ் இப்னு ஹஜர் அவர்கள் குறிப்பிடுட்டுள்ளார்கள். (ஆதாரம்: பத்ஹுல் பாரீ)

நபி (ஸல்) அவர்கள் காலத்திலும் அவர்களுக்கு அடுத்து வந்த கலீபா அபூபக்ர் (ரலி) அவர்களின் ஆட்சிக் காலத்திலும் நாம் தற்போது பயன்படுத்தும் ஹிஜ்ரி ஆண்டு முறை பயன்படுத்தப்படவில்லை. உமர் (ரலி) அவர்களின் ஆட்சிக் காலத்தில் தான் இந்த ஹிஜ்ரி ஆண்டு முறை ஆரம்பமானது. அன்று இந்த இஸ்லாமிய ஆண்டை எதை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிப்பது என்பது தொடர்பில் நான்கு கருத்துக்கள் மக்களிடம் காணப்பட்டன. 1. நபிகளாரின் பிறப்பு, 2. நபிகளார் இறைத் தூதராக ஆன ஆண்டு, 3. நபிகளார் ஹிஜ்ரத் செய்த ஆண்டு, 4. நபிகளாரின் இறப்பு.

இதில் நபி (ஸல்) அவர்கள் எப்போது பிறந்தார்கள்? எப்போது இறைத் தூதரானார்கள்? என்பதில் கருத்து வேறுபாடு காணப்பட்டதால் இவற்றைக் கணக்கில் கொள்ளவில்லை. நபிகளார் இறந்த ஆண்டு அவர்களை கவலைக்கு உள்ளாக்கியதால் அதையும் எடுத்துக் கொள்ளவில்லை. இறுதியாக இருந்த ஹிஜ்ரத் செய்த ஆண்டைத் தேர்வு செய்தார்கள். **(ஆதாரம்: பத்ஹுல் பாரீ)**

மக்கள் (ஆண்டுக் கணக்கை) நபி (ஸல்) அவர்கள் இறைத்தூதராக நியமிக்கப்பட்ட (அவர்களுடைய நாற்பதாவது வயதிலிருந்தோ அவர்களுடைய மறைவிலிருந்தோ கணக்கிடவில்லை. மதீனாவுக்கு நபி (ஸல்) அவர்கள் (ஹிஜ்ரத் செய்து) வந்ததிலிருந்தே கணக்கிட்டார்கள். (ஆதாரம்: புகாரி)

உமர் (ரலி) அவர்களின் ஆட்சிக் காலத்தில் ஹிஜ்ரி 16 அல்லது 17வது ஆண்டில் தான் இந்த ஆண்டு முடிவு செய்யப்பட்டது. (ஆதாரம்: பத்ஹுல் பாரீ)

அபூமூஸா (ரலி) அவர்கள் உமர் (ரலி) அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் 'உங்களிடமிருந்து கடிதம் வருகிறது. ஆனால் அதில் காலம் குறிப்பிடப் படுவதில்லை' என்று கூறியிருந்தார். அப்போது உமர் (ரலி) அவர்கள் மக்களை ஒன்றிணைத்தார்கள் என்ற செய்தியை ஹாகிம் அவர்கள் பதிவு செய்துள்ளார்கள் என்று ஹாபிழ் இப்னு ஹஜர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

**(ஆதாரம்: பத்ஹுல் பாரீ)**

உமர் (ரலி) அவர்கள் மக்களை ஒன்றிணைத்து 'வருடத்தை எந்த நாளிலிருந்து ஆரம்பிக்கலாம்?' என்று ஆலோசனை கேட்டார்கள். அப்போது அலீ (ரலி) அவர்கள், 'நபி (ஸல்) அவர்கள் மக்காவை விட்டு விட்டு நாடு துறந்து சென்ற நாளை எடுத்துக் கொள்ளலாம்' என்றார்கள். அவ்வாறே உமர் (ரலி) அவர்கள் செய்தார்கள். (ஆதாரம்: ஹாகிம்)

நபிகளார் அவர்கள் மதீனா ஹிஜ்ரத் செய்து சென்ற பின்னர் தான் இஸ்லாம் வளர்ச்சி பெற்றது. மேலும் இறைவனை நிம்மதியாக வணங்க முடிந்தது. இறையில்லமும் கட்டப்பட்டது. எனவே இஸ்லாத்தின் வளர்ச்சிக்கு முக்கியக் காரணமாக இருந்த இதனை ஹிஜ்ரத்தை ஆண்டின் பெயராகக் குறிப்பிட்டனர். வருடக் கணக்கு இல்லாத காரணத்தால் வருடத்தில் முதல் மாதம் எது என்று நபி(ஸல்) அவர்கள் காலத்தில் குறிப்பிடப்படவில்லை. வருடத்தைக் கணக்கிட்ட போது வருடத்தில் முதல் மாதமாக முஹர்ரம் மாதத்தைத் தேர்வு செய்தார்கள்.

எந்த மாதத்தை முதல் மாதமாகக் கணக்கிடுவது என்பதில் கருத்து முரண்பாடு ஏற்பட்ட போது சிலர் ரஜப் என்றும் சிலர் ரமழான் என்றும் குறிப்பிட்டனர். உஸ்மான் (ரலி) அவர்கள் முஹர்ரம் என்று கூறினார்கள். 'ஏனெனில் இம்மாதம் கண்ணியமிக்க மாதம் (போர் தடை செய்யப்பட்ட மாதம்) மேலும் மக்கள் ஹஜ் செய்து விட்டுத் திரும்பும் போது வரும் முதல் மாதம் முஹர்ரம்' என்று குறிப்பிட்டார்கள். **(ஆதாரம்: பத்ஹுல் பாரீ)**

நபித்தோழர்கள் வருடக் கணக்கை கணக்கிடுவதற்கு ஹிஜ்ரத்தைத் தெரிவு செய்ய திருக்குர்ஆனின் ஒரு வசனம் தூண்டுகோலாக இருந்ததாக சில அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர். ஆரம்ப நாள் முதல் இறையச்சத்தின் அடிப்படையில் நிர்மாணிக்கப்பட்ட பள்ளிவாசலே நீர் வணங்குவதற்குத் தகுதியானது. அதில் தூய்மையை விரும்பும் ஆண்கள் உள்ளனர்.

அல்லாஹ் தூய்மையானவர்களை விரும்புகிறான். (அல்குர்ஆன் 9:108) 'இந்த வசனத்தில் ஆரம்ப நாள் என்பது ஹிஜ்ரத்திற்குப் பின்னுள்ள ஆரம்ப நாளையே குறிக்கிறது. இவ்வாறு அல்லாஹ் குறிப்பிட்டுள்ளதால் இதுவே இஸ்லாமிய ஆண்டின் முதல் நாள் என உணர்த்தப்படுகிறது' என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செய்தது ரபீவுல் அவ்வல் மாதத்தில் தான். ஆனால் வருடத்தை ஹிஜ்ரீ என்று தேர்வு செய்த நபித்தோழர்கள் ஏன் ரபீவுல் அவ்வல் மாதத்தை முதல் மாதமாகத் தெரிவு செய்யவில்லை? என்ற கேள்விக்கு அறிஞர்கள் பின்வருமாறு பதிலளிக்கிறார்கள்.நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செய்தது ரபீவுல் அவ்வல் மாதமாக இருந்தாலும், அவர்கள் மதீனாவுக்கு நாடு துறந்து போக வேண்டும் என்று உறுதி கொண்டது முஹர்ரம் மாதத்தில் தான். எனவே முஹர்ரத்தை முதல் மாதமாகத் தேர்வு செய்தார்கள். **(ஆதாரம்: பத்ஹுல் பாரீ)**

ஆகவே ஹிஜ்ரி வருட முறைமையில் மற்றொரு புதுவருடம் இன்னும் சில தினங்களில் உதயமாகவிருக்கும் சூழலில் இவ்வருடத்தின் சிறப்பையும் மகத்துவத்தையும் அறிந்து வாழ்வொழுங்கை அமைத்துக் கொள்வோம்.

**அபூ முஷீரா ...**

# இறைநம்பிக்கையாளனின் பண்பு

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள் 'மரங்களில் இப்படியும் ஒருவகை மரம் உண்டு. அதன் இலைகள் உதிர்வதில்லை. அது முஸ்லிமுக்கு உவமையாகும். அது என்ன மரம் என்பதை எனக்கு அறிவியுங்கள்' எனக் கேட்டார்கள். அப்போது மக்களின் எண்ணங்கள் நாட்டு மரத்தின் பால் திரும்பியது. நான் அதை பேரீச்சை மரம் தான் என்று கூற வெட்கப்பட்டுக் கொண்டு அதைச் சொல்லாமல் இருந்து விட்டேன். பின்னர் 'அல்லாஹ்வின் தூதரே! அது என்ன மரம் என்று எங்களுக்கு அறிவியுங்கள்' என தோழர்கள் கேட்டார்கள். அதற்கு 'பேரீச்சை மரம்' என்றார்கள்.

**(ஆதாரம்: புகாரி, முஸ்லிம்)**

துன்பம் நேரும் போது இறை நம்பிக்கையாளர் எப்படி நடந்துகொள்ள வேண்டும்? என்பதற்கு இதுவொரு அழகிய உதாரணமாகும். வாழ்க்கையில் இன்பத்தை விட துன்பங்களை சந்திப்பவர்கள் தான் அதிகம். அவர்கள் விரும்பும் வாழ்க்கை பெரும்பாலும் யாருக்கும் கிடைப்பதில்லை.அதாவது எல்லா மரங்களுக்கும் கோடை காலத்தில் இலை உதிர் காலம் உண்டு. அக்காலத்தில், தன் இலைகளை உதிரச் செய்கின்றன. ஆனால் பேரீச்ச மரம் மட்டும் எந்தக் காலத்திலும் இலைகளை உதிரச் செய்வதில்லை. இதைப் போன்று தான் எவ்வளவு துன்பமான நேரம் வந்தாலும் துவண்டு விடாமல் மன உறுதியோடு அதை எதிர்கொள்வது அவசியம்.

மேலுமொரு உதாரணத்தைக் குறிப்பிடுவது போன்று நபி (ஸல்) அவர்கள், 'இறை நம்பிக்கையாளரின் நிலை, இளம் தளிர் பயிருக்கு ஒப்பானதாகும். அதைக் காற்று ஒரு முறை சாய்த்து, மறுமுறை நிமிர்ந்து நிற்கச் செய்யும். நயவஞ்சகனின் நிலை தேவதாரு மரத்திற்கு ஒப்பானதாகும். அது ஒரேயடியாக வேரோடு சாயும் வரை (தலை சாயாமல்) நிமிர்ந்து நிற்கும்' என்று கூறினார்கள். **(ஆதாரம்: புகாரி)**

அல்லாஹ்வை நம்பியவன் அவனுக்கு எவ்வளவு பெரிய துன்பம் வந்தாலும் அந்த நேரத்தில் கவலை கொள்வான். ஆனால் அதற்காக உள்ளம் தளர்ந்து தவறான முடிவை எடுக்க மாட்டான். எப்படி இளம் தளிர்ப் பயிர், காற்று அடிக்கும் போது சாய்ந்து விட்டுப் பின்னர் எழுந்து விடுகிறதோ இதைப் போன்று இறைநம்பிக்கையாளன் அவனுக்கு வரும் துன்பங்களில் சோர்ந்து இருந்தாலும் சில நாட்களில் சாதாரண நிலைக்கு வந்து விடுவான்.

பெரும் மரங்கள் சாதாரண காற்றுக்கு அசைந்து கொடுக்கா விட்டாலும் பெரும் காற்று அடிக்கும் போது மொத்தமாக சாய்ந்து விடுகிறது. அது திரும்பவும் நிமிர்ந்து நிற்பதில்லை. அத்தோடு அழிந்து விடுகிறது. இது இறை நம்பிக்கை இல்லாதவனுக்கு உதாரணம். சிறிய துன்பமாக இருந்தாலும் பெரிய துன்பமாக இருந்தாலும் அனைத்தையும் சகித்துக் கொள்பவன் தான் உண்மையான இறை நம்பிக்கையாளன் ஆவான்.

இன்பங்கள் வரும் போது இறைவனைப் போற்றி, துன்பங்கள் வரும் போது பொறுமையைக் கடைபிடித்து இரு நிலைகளிலும் நன்மை சம்பாதிக்கும் பாக்கியம் இறை நம்பிக்கையாளனைத் தவிர வேறு எவருக்குமில்லை.

'முஃமினுடைய காரியம் ஆச்சரியத்தை அளிக்கிறது. அவனுடைய அனைத்துக் காரியங்களும் நல்லதாகவே அமைகின்றன. இந்நிலை முஃமினைத் தவிர வேறு எவருக்கும் கிடைப்பதில்லை. அவனுக்கு மகிழ்ச்சியான நிலை ஏற்பட்டால் அவன் (இறைவனுக்கு) நன்றி செலுத்துகிறான். அது அவனுக்கு நன்மையாக அமைந்து விடுகிறது. அவனுக்குத் தீங்கு ஏற்பட்டால் பொறுமையைக் கடைபிடிக்கிறான். அதுவும் அவனுக்கு நன்மையாக அமைகிறது' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். **(ஆதாரம்: முஸ்லிம்)**

அதனால் சோதனைகள் நன்மைக்கே என்பதை முஸ்லிம்கள் கருத்தில் கொள்ள வேண்டும் என்பதையே இந்நபிமொழி எடுத்தியம்புகிறது. மற்றொரு தடவை நபி (ஸல்) அவர்கள், 'யாருக்கு அல்லாஹ் நன்மையை நாடுகிறானோ அவரை சோதனைக்கு உள்ளாக்குகின்றான்' என்று கூறினார்கள். **(ஆதாரம்: புகாரி)**

அதேநேரம் நமக்கு ஏற்படும் ஒவ்வொரு துன்பமும் நமது பாவங்களை அழிக்கிறது என்பதையும் மனதில் கொள்ள வேண்டும். 'ஒரு முஸ்லிமைத் தைக்கும் முள் உட்பட அவருக்கு நேரிடும் துன்பம், நோய், துக்கம், கவலை, தொல்லை, மனவேதனை ஆகிய எதுவாயினும் அதற்குப் பதிலாக அவருடைய பாவங்களிருந்து சிலவற்றை அல்லாஹ் மன்னிக்காமல் இருப்பதில்லை' என்றும் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

**(ஆதாரம்: புஹாரி)**

இறைவனால் தேர்தெடுக்கப்பட்ட நபி (ஸல்) அவர்கள் கூட துன்பத்திற்கு ஆளாகியுள்ளார்கள். ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள் காய்ச்சலுக்கு உள்ளாகி சிரமப்பட்டுக் கொண்டிருந்த போது அவர்களிடம் சென்று அவர்களை(ப் பணிவோடு) நான் தொட்டேன். அப்போது நான், 'தாங்கள் கடும் காய்ச்சலால் சிரமப்படுகிறீர்களே!' என்றேன். அதற்கு நபி (ஸல்) அவர்கள் 'ஆம். உங்களில் இருவர் காய்ச்சலால் அடையும் துன்பத்தைப் போன்று (நான் ஒருவனே அடைகிறேன்)' என்றார்கள். நான், '(இத்துன்பத்தின் காரணமாக) உங்களுக்கு இரு (மடங்கு) நன்மைகள் கிடைக்குமா?' என்று கேட்டேன். நபி (ஸல்) அவர்கள் 'ஆம். ஒரு முஸ்லிமுக்கு ஏற்படும் நோயாயினும் அது அல்லாத வேறு துன்பமாயினும் (அதற்கு ஈடாக) மரம் தன் இலைகளை உதிர்த்து விடுவதைப் போன்று அவருடைய பாவங்களை அல்லாஹ் உதிர்க்காமல் இருப்பதில்லை' என்றார்கள் என்று அப்துல்லாஹ் பின் மஸூத் (ரழி) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். **(ஆதாரம்: புஹாரி)**

ஆகவே என்ன தான் துன்பங்கள், கவலைகள், சோகங்கள், கஷ்டங்கள், சிரமங்கள் ஏற்பட்டாலும் பொறுமையோடும் சகிப்புதன்மையோடும் இறைவனில் நம்பிக்கை வைத்தவர்களாக அவற்றை எதிர்கொண்டு இறையருளைப் பெற்றிட முயற்சிப்போம்.

**அப்துல்லாஹ் ...**

# யா ரப்பே...
# உன் வாசலில் நான்

'என் ரப்பே... உன்னுடைய படைப்பாகிய நான் உன் வாசலில் நிற்கிறேன். உன்னிடம் யாசகம் கேட்கும் நான் உன் வாசலில் நிற்கிறேன். வறியவனாகிய நான் உன் வாசலில் நிற்கிறேன். தாழ்ந்தவனாகிய நான் உன் வாசலில் நிற்கிறேன். உன்னுடைய பலவீனப் படைப்பான நான் உன் வாசலில் நிற்கிறேன். உன்னுடைய விருந்தாளியாகிய நான் உன் வாசலில் நிற்கிறேன். அகிலத்தின் அதிபதியே..... (அருள்புரிவாயாக.)

யா ரப்பே... உன்னுடைய கூற்று சத்தியமானது. என்னிடம் இறைஞ்சுங்கள் உங்களுடைய இளைஞ்சுதல்களை ஏற்றுக்கொள்வேன் என்று கூறியுள்ளாய். யா ரப்பே... என் இறைஞ்சுதல் ஏற்றுக்கொள்வாயாக'.

**(ஆதாரம்: கன்சுல் அம்பால்)**

என் ரப்பே... நீ என் அதிபதி. உன்னைத் தவிர வணக்கத்துக்குரியவன் யாருமில்லை. நீயே என்னைப் படைத்தவன். நான் உன் அடிமை. என்னால இயன்றவரை உன்னுடன் செய்துள்ள உடன்படிக்கையை நிறைவேற்றுவேன்.

நான் உன்னிடம் அபயம் தேடுகிறேன்.

என் மீது பொழியப்படும் கொடைகளை ஒப்புக்கொள்கிறேன். என் பாவங்களை ஏற்றுக்கொள்கிறேன். என்னை மன்னித்து அருள்புரிவாயாக. உன்னைத்தவிர மன்னிப்பவன் யார் இருக்கின்றார்'. **(ஆதாரம்: புஹாரி)**

யா ரப்பே... நானோ பலவீனமானவன். உன் உவப்பை தேடுவதில் என்னிடம் இருக்கும் பலவீனத்தை உன் வலிமையால் அகற்றி விடுவாயாக.. நன்மைகள் நற்செயல்கள் பக்கம் என்னை இட்டுச் செல்வாயாக. இஸ்லாத்தை என் விருப்பத்தின் இறுதி இலக்காக ஆக்குவாயாக, நான் தாழ்ந்தவன் (பலவீனமானவன்). எனக்கு கண்ணியம் அளிப்பாயாக.

நான் வேண்டி நிற்பவன் நீ எனக்கு அருள் புரிவாயாக.

யா ரப்பே.... எங்கள் உள்ளம், எங்கள் நெற்றி, எங்கள் உறுப்புக்கள் அனைத்தும் உன் கையில் உள்ளன. இவை எதுவொன்றுக்கும் நீ எங்களை உரிமையாளனாக்கவில்லை.

எனவே நீயே எங்களின் ஆதரவாளன். எங்களை நேர் வழியில் செலுத்துவாயாக. **(ஆதாரம்: திர்மிதி)**

கருணையுள்ள ரப்பே... என் இதயம் உன் இரு விரல்களுக்கிடையில் உள்ளது. நீ நாடிய வண்ணம் அதை திருப்புகிறாய்.

எனவே என் இதயத்தை உன் மார்க்கத்தில் நிலைப்படுத்திவிடு. உன்னுடைய நினைவில் என் இதயம் திருப்திப்படச் செய்வாயாக. என் உள்ளத்தில் சாந்தியையும் அமைதியையும் இறக்கியருள்வாயாக.

யா ரப்பே... உன்னை அதிகம் தியானிக்கும்படி என் இதயத்தை அமைப்பாயாக, உன்னை அதிகம் நினைத்து நன்றி செலுத்தக்கூடியவாய், உன்னை அதிகம் அஞ்சுபவனாய், உனக்கு அதிகம் அடிபணிந்து வாழ்பவனாய், உனக்கே கட்டுப்பட்டவனாய், உன்னைக் கொண்டு சாந்தியும் அமைதியும் பெறுபவனாக என் இதயத்தை ஆக்கி விடுவாயாக.

**தொகுப்பு:**
**அபூ ஸப்வான் உமைர்...**

# பாவமன்னிப்பின் முக்கியத்துவம்

மனிதர்கள் பெரும்பாலும் பாவங்களைச் செய்ய விரும்பாதவர்களாகவும், பாவத்தில் ஈடுபட்டாலும் பாவம் என்று அறிந்த நிலையில் அதை செய்தவர்களாக, செய்பவர்களாக, அதை நினைத்து மனம் வருந்திடக் கூடியவர்களாக, அவற்றில் இருந்து எப்படியாவது விரைவில் விடுபட முயல்பவர்களாகவும் இருப்பது யதார்த்தமானது.

இதற்கு மாற்றமாக ஒரு சிலர் பாவங்களில் மூழ்கியும் அதை விட்டு விடுபடாமலும், அதையே தொடர்ந்த போதிலும் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் அதை நினைத்து வருந்திடவே செய்வர்.

அவர் பாவமன்னிப்பு கேட்காமல் இருப்பினும் புத்தி சுவாதீனமுடன் இருப்பின் இதை தமது வாழ்வில் ஏதேனும் ஒரு கணமாவது நினைத்து அவர் வருந்தி பச்சாதாபப்படாமல் இருக்கவே மாட்டார்.

ஆனால் ஒருவர் தாம் செய்வது பாவம் என்று அறியாமல் அதை தொடரும் போது, அதை நன்மையென்று கருதி பலரும் செய்வதைக் காணும் போது அதை ஒரு தவறு என்று கூட கருதாமல் மார்க்கக் காரியம் எனும் அடிப்படையில் செயல்படும் போது அவர் அச்செயல்களுக்குப் பாவமன்னிப்பு கோராத நிலையில் மரணித்து விடுவது மாபெரும் கைதேசமாகும்.

இஸ்லாம் இற்றைக்கு 1400 ஆண்டுகளுக்கு முன்னரே அல்லாஹ்வினால் முழுமையாக்கப்பட்ட ஓர் இறை மார்க்கம்.

இது எவ்வித சேர்க்கைகளும் நீக்கங்களும் மாற்றமும் தேவையற்ற நிகரற்ற உன்னதமான இறைவழிகாட்டல். இதை அல்லாஹ் தன் அருள் மறையில், 'இன்றைய தினம் உங்களுக்காக உங்கள் மார்க்கத்தைப் பரிபூரணமாக்கி விட்டேன்.

மேலும் நான் உங்கள் மீது என் அருட்கொடையைப் பூர்த்தியாக்கி விட்டேன்.

இன்னும் உங்களுக்காக நான் இஸ்லாம் மார்க்கத்தையே (இசைவானதாகத்) தேர்ந்தெடுத்துள்ளேன்'. (அல் குர்ஆன் 05:03) என்று குறிப்பிட்டுள்ளான்.

அதேநேரம் நபி (ஸல்) அவர்கள், 'வார்த்தையில் சிறந்தது அல்லாஹ்வின் வேதம். நடைமுறையில் சிறந்தது முஹம்மத்(ஸல்) அவர்களின் நடைமுறை.

காரியங்களில் கெட்டது (பித்ஆத்) புதுமையாகும். பித்அத்துகள் அனைத்தும் வழிகேடு. வழிகேடுகள் அனைத்தும் நரகில் சேர்க்கும்' என்று கூறியுள்ளார்கள்.

**(ஆதாரம்: புகாரி, முஸ்லிம், நஸயி.)**

அதனால் தவறுகள் பிழைகள் செய்து பாவங்கள் புரிந்தாலும் தூய்மையாக மனம் வருந்தி அல்லாஹ்விடம் மனிதன் பாவமன்னிப்பு கேட்பதை அவன் வலியுறுத்தியுள்ளான். அதனை அங்கீகரித்து பாவமன்னிப்பு அளிப்பதாகவும் அவன் குறிப்பிட்டுள்ளான்.

'என் அடியார்களே! (உங்களில்) எவரும் வரம்பு மீறி தமக்குத்தாமே தீங்கிழைத்துக் கொண்ட போதிலும், அல்லாஹ்வுடைய ரஹ்மத்தில் அவர் நம்பிக்கை இழக்க வேண்டாம்.

நிச்சயமாக அல்லாஹ் பாவங்கள் யாவையும் மன்னிப்பான். நிச்சயமாக அவன் மிக்க மன்னிப்பவன். மிக்கக் கருணையுடையவன்' (என்று நபியே!) நீர் கூறுவீராக.. (அல் குர்ஆன் 39 :53)

அத்தோடு நபி(ஸல்) அவர்கள், 'மூச்சு தடுமாறுவதற்கு முன்பு வரை மனிதனின் பாவமன்னிப்பு கோரலை அல்லாஹ் ஏற்றுக்கொள்கிறான் என்று குறிப்பிட்டுள்ளார்கள். **(ஆதாரம்: திர்மிதி)**

இதேவேளை 'எவனொருவன் நேர்வழி இன்னது என்று தமக்குத் தெளிவான பின்னரும், (அல்லாஹ்வின்) இத்தூதரை விட்டுப் பிரிந்து, முஃமின்கள் செல்லாத வழியில் செல்கின்றானோ, அவனை அவன் செல்லும் (தவறான) வழியிலேயே விட்டு நரகத்திலும் அவனை நுழையச் செய்வோம். அதுவோ, சென்றடையும் இடங்களில் மிகக் கெட்டதாகும். (அல்குர்ஆன் 4 : 115) என்பதையும் அல் குர்ஆன் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

ஆகவே உலகில் பாவம் என்று அனைவரும் கருதிடும், தெளிவான பாவங்களை அறிந்து அவற்றிலிருந்து தங்களை தடுத்து தவிர்த்து கொள்வது போன்று, தாங்கள் அறியாமல் செய்த பாவங்களையும் நினைத்து வருந்தி அவற்றை கைவிட்டு பாவமன்னிப்பு கேட்பது போன்று, அல்லாஹ்வின் கட்டளைகள் மற்றும் நபி வழிக்கு மாற்றமான செயற்பாடுகளை உணர்ந்து பாவ மன்னிப்பு கேட்பதும் மிகவும் அவசியமானதாகும்.

அதனால் நபிவழியில் நடந்து பாவமன்னிப்பும் கேட்டு ஈடேற்றம் பெற்றிட அல்லாஹ் அனைவருக்கும் அருள் புரியட்டும்.

# 05 மாதங்களுக்குள் நாட்டை இலகுவாக மீட்கலாம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



## மத்திய வங்கி ஆளுநர் நம்பிக்கை தெரிவிப்பு

அரசாங்கத்திடம் தெளிவான வேலைத்திட்டங்கள் காணப்படுவதால் எதிர்வரும் ஐந்து மாத காலத்துக்கு நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நிலைமை ஓரளவு நிவர்த்திசெய்யப்படுமென மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க நம்பிக்கை தெரிவித்துள்ளார். வெளிநாட்டு ஊடகமொன்றுக்கு அவர் வழங்கியுள்ள நேர்காணல் ஒன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இந்த ஐந்து மாத காலங்களுக்கு மக்கள் சில அசௌகரியங்களை அனுபவிக்க நேரிடுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுவருவதால் வெகுவிரைவில் அதிகாரிகள் மட்ட உடன்படிக்கை மேற்கொள்ளப்படும். அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெற்றுக்கொள்ள நடத்தப்படும் பேச்சுவார்த்தைகளுக்கிணங்க அதற்கான காலம் தீர்மானிக்கப்படும். சர்வதேச நாணய நிதியத்துடனான தொழில்நுட்ப மட்ட பேச்சுவார்த்தையின் போது இலங்கையின் திட்டம் தொடர்பில் அந்த குழுவுக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. இந்த கடனைப் பெற்றுக்கொள்வதற்கான முதலாவது கட்ட நடவடிக்கை உயர்மட்டக் குழுவுடனான உடன்படிக்கையே. ஸ்திரமான அரசாங்கமொன்று உருவாக்கப்பட்டு அரசாங்கம் முன்வைத்துள்ள திட்டத்தை விரைவாக நடைமுறைப்படுத்த முடியுமானால் ஒருமாத காலத்திற்குள் மேற்படி உயர்மட்டக் குழுவுடனான உடன்படிக்கைக்கு வரமுடியும் என்ற நம்பிக்கையுள்ளது. ஸ்திரமான அரசாங்கம் அமைக்கப்படா விட்டால் அது மேலும் தாமதமாகலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எம்பி பதவி வெற்றிடம் தொடர்பில்

# தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு நேற்று எழுத்துமூலம் அறிவிப்பு

பாராளுமன்ற உறுப்பினர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்றிருப்பதால் பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் வெற்றிடம் ஏற்பட்டிருப்பதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக, தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு எழுத்துமூலம் அறிவித்துள்ளார்.

இந்நாட்டின் ஜனாதிபதிப் பதவியை ஏற்றுக் கொண்டிருப்பதாகவும், இதனால் நேற்று முன்தினம் (21) முதல் நடைமுறைக்கு வரும் வகையில் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்வதாகவும் ரணில் விக்கிரமசிங்க கடிதம் மூலம் தனக்கு அறிவித்திருப்பதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

அரசியலமைப்பின் 66 (இ) உறுப்புரையின் பிரகாரம் ஒன்பதாவது பாராளுமன்றத்தில், உறுப்பாண்மையில் வெற்றிடமொன்று ஏற்பட்டுள்ளதனால் 1988ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க பாராளுமன்ற தேர்தல்கள் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1981ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 64(5) பிரிவின் கீழ் பாராளுமன்ற செயலாளர் நாயகம், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு அறிவித்துள்ளார்.

## 50 ரூபாவால் குறைத்தால்...

0 ரூபாவினால் மாத்திரமே குறைந்துள்ளதாக இலங்கை சுயதொழில் முயற்சியாளர் தேசிய முச்சக்கரவண்டி சம்மேளனத்தின் தலைவர் மஹிந்த குமார சுட்டிக்காட்டி தற்போதைய நிலைமையில் முச்சக்கர வண்டி கட்டணத்தை குறைக்க முடியாதென தெரிவித்துள்ளார்

எரிபொருள் கோட்டா முறையின்படி வாரத்திற்கு 08 லீற்றர் எரிபொருளே கிடைக்கப்பெறுவதாகவும் அது தமது தொழிலை செய்வதற்கு போதாதெனவும் முச்சக்கர வண்டி சாரதிகள் ஒன்றியத்தின் தலைவர் லலித் தர்மசேக்கர தெரிவித்தார்.

பெற்றோல் விலையை மேலும் குறைத்தால் கட்டணத்தை மாற்றியமைக்க தயார் என்றும் அவர் தெரிவித்தார்.

## வங்கிக் கடன் பெற்றவர்களுக்கு...

எழுந்துள்ள சவால்கள் மற்றும் மேலதிக நிவாரணங்களைப் பெற்றுக்கொடுக்குமாறு அரச நிறுவனங்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்புக்கள் மத்திய வங்கியிடம் வேண்டுகோள் விடுத்திருந்தன.

அதனை கருத்திற்கொண்டே மத்திய வங்கி அனுமதிபெற்ற வங்கிகளுக்கு மேற்படி வேண்டுகோளை விடுத்துத்துள்ளது. அதேவேளை சுற்றுலாத்துறை மற்றும் சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு இவ்வாறு நிவாரணம் பெற்றுக்

கொடுக்குமாறு ஏற்கனவே அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது. கடன்பெற்றுக் கொண்டுள்ள வாடிக்கையாளர்களின் கடனை மீள செலுத்தும் திறன் மற்றும் தொழில் முயற்சிகளில் அடிப்படை ஆகியவற்றை கருத்திற் கொண்டு சலுகையைப் பெற்றுக்கொடுக்குமாறு மத்திய வங்கி வேண்டுகோள் விடுத்துள்ளது.

அதுதொடர்பில் எதிர்வரும் 31ஆம் திகதிக்குள் தொழில் முயற்சியாளர்கள் விண்ணப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## எரிவாயு பிரச்சினைக்கு...

காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு மாதத்துக்கும் மேலாக எரிவாயு விநியோகம் இடம்பெறாத நிலையில், கடந்த 11ஆம் திகதி முதல் மீண்டும் எரிவாயு விநியோகப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டது.

இதன்போது, நாடு முழுவதும் 47 இலட்சம் எரிவாயு சிலிண்டர்களுக்கான தேவைப்பாடு காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும், எதிர்வரும் 31ஆம் திகதிக்குள் எரிவாயு பிரச்சினையை 100 வீதம் தீர்க்க முடியும் என லிற்றோ தலைவர் முதித பீரிஸ் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

## வசந்த முதலிகே, ரத்கரவ்வே...

நிதியான ரத்கரவ்வே ஜினரதன தேரர் ஆகியோருக்கு எதிராக கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட சட்டவிரோத ஆர்ப்பாட்டம் ஒன்று தொடர்பில் பொலிசாரினால் மேற்படி வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையில் நேற்று அந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன் போது கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே, அந்த இருவருக்கும் பிடியாணை பிறப்பித்துள்ளார்.

நேற்றைய தினம் சந்தேக நபர்கள் இருவரும் நீதிமன்றத்தில் ஆஜராகி யிருக்கவில்லை. அந்த நிலையில் பொலிசாரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை ஏற்றுக் கொண்டுள்ள நீதவான், அவர்கள் இருவருக்கும் பிடியாணை பிறப்பித்துள்ளார்.(ஸ)

## ஜனாதிபதி ரணிலுக்கு...

கட்டமொன்றில் உன்னத மனம் படைத்த மற்றும் தூர நோக்கு சிந்தனை கொண்ட தலைவர் ஒருவரே அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தனது முகநூலில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாடு முன்னொருபோதும் இல்லாத வகையில் பெரும் சவால்களை எதிர்கொண்டுள்ள காலகட்டத்தில் புதிய ஜனாதிபதிக்கு ஆட்சியை பொறுப்பேற்க நேர்ந்துள்ளது.

அனைத்து நாட்டு மக்களின் எதிர்பார்ப்பையும் சாத்தியமாக நிறைவேற்ற வேண்டுமானால் அரசியல் மற்றும் சிவில் சமூகத் தலைவர்களின் விரிவான நிர்வாக வரைவுக்குள் அரச நிர்வாகம் உள்ளடக்கப்பட வேண்டும் என தாம் நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனது நாட்டின் நலனுக்காக புதிய ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்கவுக்கு நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## ஜனாதிபதி தெரிவின்போது...

மேலும் "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்கள் நான்கு அல்லது ஐவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக வாக்களித்திருக்கக்கூடும் எனவும் ஹரீன் மேலும் தெரிவித்துள்ளார்.

இவ் ஜனாதிபதி வாக்கெடுப்பில் டலஸ் 120 வாக்குகளுக்கு மேல் பெறுவார் என சஜித், டலஸ் அணிகள் கூறிவந்த நிலையில் பல எம்பிகள் பல்டி அடித்து ரணிலுக்கு ஆதரவளித்திருந்தமை குறிப்பிடதக்கது.

## முல்லைத்தீவில் பட்டாசு...

கட்சியின் புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் முத்துசாமி முகுந்தகஜன் மற்றும் ஆதரவாளர்கள் பட்டாசு கொளுத்தி கொண்டாடியதாக தெரிவிக்கப்படுகிறது.

## புதிய ஜனாதிபதியுடன்...

அத்துடன் இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதற்கும் ஜனநாயகத்தை நிலைநிறுத்துவதற்கும் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## அலரிமாளிகை போராட்டக்களத்தை...

2022 ஆம் ஆண்டு மே மாதம் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்டதையடுத்து, அரச எதிர்ப்பு போராட்டக்காரர்களால் போராட்டக்களம் அமைக்கப்பட்டது.

மே 09 ஏற்பட்ட வன்முறையின் பின்னர் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியை இராஜினாமா செய்ததையடுத்து முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்டார்.

இந்நிலையில், ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவியேற்றதையடுத்து அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் அலரி மாளிகைக்கு முன்னால் 'நோடீல் கம' போராட்டக்களத்தை அமைத்தனர்.

இதையடுத்து இலங்கையின் 08 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க நேற்று பதவிப் பிரமாணம் செய்துள்ளதையடுத்து, இப்பகுதியிலிருந்த போராட்டக்களத்தை அங்கிருந்து அகற்ற போராட்டக்காரர்களே தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பிரசவ வலியால் துடித்த...

இச்சம்பவம் நேற்று முன்தினம் (20) மாலை இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

கர்ப்பிணி தாய் ஒருவருக்கு பிரசவ வலி ஏற்பட்டவேளை அவர் முச்சக்கர வண்டி மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்ல முச்சக்கர வண்டியொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்திற்கு அருகில் சென்று கொண்டிருந்தவேளை திடீரென முச்சக்கர வண்டியில் பெற்றோல் தீர்ந்து இடைநடுவே நின்றுள்ளது.

இதனை அவதானித்த வட்டுக்கோட்டை பொலிஸ் உத்தியோகத்தர் மயூரன் முச்சக்கர வண்டிக்கு பெற்றோல் வழங்கியுள்ளார். எனினும் முச்சக்கர வண்டி இயங்க மறுத்துள்ளது. இதனை அவதானித்த வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமன் குணதிலக பொலிஸ் வாகனத்தை வழங்கி அந்த கர்ப்பிணி பெண்ணை உரிய நேரத்தில் வைத்தியசாலையில் சேர்ப்பதற்கு வழி செய்தார்.

வட்டுக்கோட்டை பொலிஸாரின் இந்த நெகிழ்ச்சிகரமான செயலை அனைவரும் பாராட்டி வருகின்றனர்.

## கெச்சிமலை தர்ஹாவின்...

ஹாஜியானி ஸித்தி பாத்திமாவின் அன்புக் கனவரும் மர்ஹூம் அஷ்ஷேஹ் அல்ஹாஜ் முஹம்மத் அப்துல்லாஹ் ஆலிம் (அலவியதுல் காதிரி) ஹாஜியானி மர்ஹூமா பாத்திமா தம்பதிகளின் அன்பு மகனும், மர்ஹூம் அஷ்ஷேஹ் அல்ஹாஜ் ஹம்ஸா ஆலிம் பின் அஷ்ஷேஹ் முஹம்மத் அப்துல்லாஹ் ஆலிம் (அலவியயுல் காதிரி) யின் சகோதரரும், மற்றும் மர்ஹூம்களான ஹாஜியானி உபாபா அலவி அல்ஹாஜ் ஸாலிம் பின் அப்துல்லாஹ், அல்ஹாஜ் புலைல் பின் அப்துல்லாஹ், ஹாஜியானி அமீனா அல்ஹாஜ் அஷ்ஷேஹ் ஷுஐப் பின் அப்துல்லாஹ் ஆகியோரின் அன்புச் சஹோதரரும் ஆவார்.

அல்ஹாஜ் ஆஸிம் அலவி, அல்ஹாஜ் மனார், அல்ஹாஜ் ஸுமைர்

அல்ஹாஜ் பௌஸான் அஷ்ஷேஹ் அல் ஆலிம் ஸகீ அஹ்மத் (அலவியயுல் காதிரி) ஹாஜியானி பாதிமா ஷஹீனா

ஆகியோரின் அன்பு தகப்பனாரும் ஆவார்.

அன்னாரது ஜனாஸா முஹிப்பீன்கள் முரீதீன்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு, அஸர் தொழுகையை தொடர்ந்து, மொல்லியமலை ஹில்ரியா ஜும்ஆ மஸ்ஜித் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்படுமென மகன் அல்ஹாஜ் ஸுமைர் தெரிவித்துள்ளார்.

## QR முறைமையின் கீழ்...

மாத்திரம் நேற்று முதல் இச்செயற்திட்டம் பரீட்சார்த்தமாக முன்னெடுக்கப்பட்டதாக தெரிவித்த அமைச்சர் எதிர்வரும் 25ஆம் திகதியே நாடு முழுவதும் இத்திட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

வாகனங்களின் இலக்கத் தகட்டிலுள்ள இறுதி இலக்கங்களுக்கமைய எரிபொருளை விநியோகிக்கும் நடவடிக்கைகள் நேற்றுமுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் QR முறைமையின் கீழ் எரிபொருளை விநியோகிக்கும் முறை முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும்வரை இந்த முறைமையின் கீழ் விநியோகம் நடைபெறுமென்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அதன்படி, வாகன இலக்கத் தகட்டின் இறுதி இலக்கங்களான 0,1,2 ஆகியவற்றைக் கொண்ட மோட்டார் சைக்கிள்கள் உள்ளிட்ட வாகனங்களுக்கு செவ்வாய் மற்றும் சனிக்கிழமைகளிலும் 3,4,5 ஆகிய இலக்கங்களைக் கொண்ட வாகனங்களுக்கு ஞாயிற்றுக் கிழமை மற்றும் வியாழக்கிழமையிலும் 6,7,8,9 ஆகிய இறுதி இலக்கங்களைக் கொண்ட வாகனங்களுக்கு திங்கள், புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் எரிபொருள் விநியோகிக்கப்படுமென்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தற்போது கையிருப்பிலுள்ள எரிபொருளை கவனத்திற்கொண்டு எரிபொருள் அளவை மட்டுப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் அதன்படி மோட்டார் சைக்கிள் ஒன்றுக்கு 1,500 ரூபாவுக்கும் முச்சக்கரவண்டி ஒன்றுக்கும் 2,000 ரூபாவுக்கு ஏனைய வாகனங்களுக்கு 7,000 ரூபாவுக்கும் பெற்றோல் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரவித்துள்ளார்.

## வெற்றிட MP பதவிக்கு...

ரங்கே பண்டார தெரிவித்தார்.

ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக பதவி ஏற்றுக் கொண்டதையடுத்து பாராளுமன்றத்தில் வெற்றிடமாகியுள்ள ஆசனத்துக்கான வெற்றிடம் தொடர்பில் குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டதைத் தொடர்ந்து பாராளுமன்றத்தில் ஐக்கிய தேசிய கட்சிக்குரிய ஆசனம் வெற்றிடமாகி இருக்கின்றது.

இந்த வெற்றிடத்துக்கு யாரை நியமிப்பதென்று இதுவரை தீர்மானிக்கவில்லை. என்றாலும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ஆலாசேனையின் அடிப்படையில் கட்சியின் முகாமைத்துவ குழு கூடி விரைவாக ஒருவரை பாராளுமன்றத்துக்கு பெயரிட நடவடிக்கை எடுப்போம் என்றார்.

## சமன் ஏக்கநாயக்க...

இந்நிலையில், இலங்கையின் எட்டாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக நேற்று ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றதன் பின்னர், சமன் ஏக்கநாயக்க ஜனாதிபதியின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## மக்கள் போராட்டம் எனும்...

03ஆம் பக்க தொடர்...

தெரிவித்துள்ள ஜனாதிபதி அத்தகையவர்களுக்கு எதிராக சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

தமக்கான எதிர்காலத்தை அமைத்துக் கொள்வதற்கான ஆர்ப்பாட்டங்களுக்கு நாம் முழுமையான ஒத்துழைப்பபை வழங்குவோம். அவர்களுக்கான மேடைகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் நாம் தயார்.

அனைத்துக் கட்சிகளுடனும் இணைந்து செயல்படுவதே எனது எதிர்பார்ப்பாகும். அனைத்துக் கட்சிகளும் ஒன்றாக இணைந்து ஏன் நாட்டை முன்னேற்றக்கூடாது என்றே மக்கள் இக்காலங்களில் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

நாம் தற்போதைய முறைமையை மாற்றி இளைஞர்களுடைய கருத்துகளுக்கு செவிமடுக்க வேண்டியுள்ளது. போராட்டங்களும் தற்போதுள்ள முறைமைக்கு எதிரானவையாகவே காணப்படுகின்றன.

அமைதியாக கருத்துக்களை தெரிவிப்பவர்களுக்கு அதற்காக நாம் இடமளிக்க வேண்டும். எம்மாலும் அவற்றுக்கு பதில் வழங்க முடியும். அவ்வாறானவர்களின் கருத்துக்களை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். எனினும் போராட்டம் என்ற போர்வையில் மேற்கொள்ளப்படும் வன்முறைகளை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## எல்லைதாண்டி மீன்பிடித்த...

03ஆம் பக்க தொடர்...

மீனவர்கள் நேற்று முன்தினம் நள்ளிரவு தலைமன்னாருக்கும் நாச்சிகுடாவுக்கும் இடையே மீன்பிடித்துக் கொண்டிருக்கும் போது அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த இலங்கை கடற்படையினர் எல்லை தாண்டி மீன் பிடித்ததாக இரண்டு படகையும் அதில் இருந்த 11 மீனவர்களையும் கைது செய்தனர்.

இதில் ஒரு படகையும் அதிலிருந்த 5 மீனவர்களும் இயந்திர கோளாறு காரணமாக காற்றின் வேகத்தால் எல்லை தாண்டி வந்ததாக மீனவர் தெரிவித்ததையடுத்து, படகை சோதனை செய்த இலங்கை கடற்படையினர் இயந்திர கோளாறு உறுதி செய்யப்பட்டதையடுத்து அந்த படகையும் அதிலிருந்து 5 மீனவர்களையும் தமிழகத்திற்கு திருப்பி அனுப்பினர்.

இந்நிலையில் தங்கச்சி மடத்தைச் சேர்ந்த தூதர் என்பவருக்கு சொந்தமான மற்றொரு படகையும் அதிலிருந்த பாலமுருகன், அந்தோணி, தங்கபாண்டி, அஜித், கிருஷ்ணன், மடுகு பிச்சை ஆகிய ஆறு மீனவர்களை எல்லை தாண்டி மீன் பிடித்ததாக படகுடன் கைது செய்த இலங்கை கடற்படையினர் தலைமன்னார் கடற்படை முகாமிற்கு அழைத்து வந்து விசாரணை நடத்தினர்.

சிறைபிடிக்கப்பட்ட ராமேஸ்வரம் மீனவர்களிடம் இலங்கை கடற்படையினர் நடத்திய முதல் கட்ட விசாரணைக்கு பின்னர் 6 மீனவர்களும் மன்னார் மீன் வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

சிறைப்பிடிக்கப்பட்ட மீனவர்களையும், படகுகளையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என இராமேஸ்வரம் அனைத்து விசைப்படகு மீனவ சங்க மீனவர்கள் மத்திய, மாநில அரசுகள் ஊடக இலங்கை அரசுக்கு கோரிக்கை வைத்துள்ளனர்.

## கல்வித் துறையினருக்கு

03ஆம் பக்க தொடர்...

மூலமான கல்வி வசதிகளை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

அடுத்த கட்டமாக பாடசாலை நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பில் எதிர்வரும் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்றும் கல்வி அமைச்சின் செயலாளர் நிஹால் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

## எட்டாவது நிறைவேற்று...

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன, முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன, ஆளும் கட்சியின் அமைச்சர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள், எதிர்க்கட்சியின் பிரதம கொறடா உட்பட அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் அமைச்சர்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள், பலரும் கலந்து கொண்டனர்.

அவர்களுடன் நேற்றைய தினம் புதிதாக நியமனம் பெற்றுள்ள ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவும் இணைந்துகொண்டிருந்தார். நேற்றுக் காலை சத்தியப்பிரமாண நிகழ்வுக்காக பாராளுமன்ற கட்டடத்துக்கு வருகை தந்த புதிய ஜனாதிபதி மற்றும் அவரது பாரியாரை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன உத்தியோகபூர்வமான வரவேற்றார். நேற்றைய நிகழ்வையிட்டு பாராளுன்ற வளாகம் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்கள் பலத்த பாதுகாப்புக்கு உட்படுத்தப்பட்டிருந்தது.

ரணில் விக்கிரமசிங்க ஆறு தடவைகள் நாட்டின் பிரதமராக பதவி வகித்துள்ளதுடன், முதல் தடவையாக நேற்றைய தினம் அவர் நாட்டின் ஜனாதிபதியாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

இறுதியாக ஜனாதிபதி தெரிவுக்கான வாக்கெடுப்பு தினத்தன்று ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட பின்னர் சபையில் உரையாற்றிய அவர், சபாநாயகரிடம் வேண்டுகோள் ஒன்றை முன்வைத்தார்.

தமது சத்தியப் பிரமாணம் பாராளுமன்ற கட்டடத்தில் இடம்பெற வேண்டும் என்பதே அவரது வேண்டுகோள். அதன்படி நேற்றைய தினம் சத்தியப்பிரமாண நிகழ்வு பாராளுமன்ற கட்டடத்தில் நடைபெற்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமது அரசியல் வாழ்க்கையில் பாராளுமன்ற ஜனநாயகத்தை மிக உயர்வாக மதித்து கடைப்பிடித்த தலைவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சத்தியபிரமாணத்தின் போது...

நாட்டின் 08ஆவது நிறைவேற்று ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க நேற்று முற்பகல் பாராளுமன்றத்தில் உத்தியோகபூர்வமாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இந்நிகழ்வை நேரடி ஒளிபரப்பு செய்வதற்கான நடவடிக்கைகளை சுயாதீன தொலைக்காட்சி மேற்கொண்டிருந்தது. ஜனாதிபதிக்கு செங்கம்பள வரவேற்பளிக்கப்பட்டு பாராளுமன்ற கட்டிடத்துக்குள் பிரவேசித்த பின்னர் நேரடி ஒளிபரப்பு நிறுத்தப்பட்டது.

பாராளுமன்ற கட்டடத்தில் மின் துண்டிப்பு ஏற்பட்டதால் அவ்வாறு நேரடி ஒளிபரப்பு நிறுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. வழமையாக பாராளுமன்ற கட்டடத்தில் மின்துண்டிப்பு இடம்பெற்றால் இரண்டு நிமிடங்களுக்குள் மின்பிறப்பாக்கி மூலம் மின்விநியோகம் வழங்கப்படும். எனினும் நேற்றைய தினம் ஜனாதிபதியின் சத்தியபிரமாணத்தின் போது 10 நிமிடங்கள் இவ்வாறு மின்துண்டிப்பு இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அதன் காரணமாகவே தொலைக்காட்சியின் நேரடி ஒளிபரப்பை வழங்க முடியாமல் போனதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இவ்விவகாரம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் பொறுப்பு சி.ஐ.டி.யினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## தமிழகத்தில் 22 இடங்களில்...

சென்னை, செங்கல்பட்டு, திருப்பூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களிலேயே இந்த தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த தேடுதல் நடத்தப்பட்ட இடங்களில் இருந்து பல, இலத்திரனியல் ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதாக இந்திய தேசிய புலனாய்வு முகவரகம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் இருந்து செயற்படும் போதைவஸ்து கடத்தல்களுக்கு காரணமான குணா எனப்படும் குணசேகரன், பூக்குட்டி கண்ணா என்று அழைக்கப்படும் புஸ்பராஜா, ஹஜ் சலீம் என அழைக்கப்படும் பாக்கிஸ்தானில் இருந்து இயங்கும் போதைவஸ்து மற்றும் ஆயுதக் கடத்தல் முகவர் ஆகியோர் தொடர்பிலேயே இந்த தேடுதல் நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

இலங்கையில் தமிழீழ விடுதலை புலிகளின் நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிக்கும் முகமாகவே இந்த போதைவஸ்து மற்றும் ஆயுதக் கடத்தல்கள் இடம்பெறுவதாக இந்திய தேசிய புலனாய்வு முகவரகம் சந்தேகம் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் இந்த மாதம் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## பஸ் கட்டணத்தின் பாதியாக...

பல்வேறு சந்தர்ப்பங்களில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதும் மக்கள் எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடிகளைக் கருத்திற்கொண்டு அதற்கான நடவடிக்கைகள் ஒத்திபோடப்பட்டன. எனினும் எரிபொருள் விலை அதிகரிப்பை கருத்திற்கொண்டு ஓரளவு அக்கட்டணத்தை அதிகரிப்பதற்கு போக்குவரத்து அமைச்சு தீர்மானித்தது. அதுதொடர்பில் நேற்று போக்குவரத்து அமைச்சின் உயரதிகாரியொருவர் தெரிவிக்கையில்,

தற்போது நடைமுறையிலுள்ள பஸ் கட்டணத்தில் சரிபாதியையே ரயில் கட்டண அதிகரிப்பாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அந்தக் கட்டண அதிகரிப்பு நாளை நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தனவின் கையொப்பத்துடன் அது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய பயணிகள், சரக்கு போக்குவரத்து ரயில் போன்றவற்றுக்கான கட்டணத்தில் திருத்தத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

புதிய திருத்தத்தின்படி, ரயில் கட்டணம் பஸ் கட்டணத்தில் சரி பாதியாக இருக்கும் எனவும் ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

## இறுதிக் கட்ட போட்டிக்கு...

நடைபெற்ற இறுதி கட்ட வாக்கெடுப்பில் ரிஷி சுனக் 137 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்.

வெளியுறவு அமைச்சர் லிஸ் ட்ரஸ் 2ஆவது இடம் பிடித்ததுடன், சர்வதேச வர்த்தக அமைச்சர் பென்னி மோர்டாண்ட் (Penny Mordaunt) போட்டியில் இருந்து வெளியேற்றப்பட்டார்.

இறுதிக் கட்டமாக கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் என 2 இலட்சம் பேர் தபால் வாக்குகள் செலுத்தி பிரதமர் யார் என்பதைத் தேர்வு செய்யவுள்ளனர்.

# கெச்சிமலை தர்ஹாரின் ஷெய்ஹ் நாயகம் மறைவுக்கு முன்னாள் எம்.பி அஸ்லம் அனுதாபம்

பேருவளை கெச்சிமலை தர்ஹாரின் ஷெய்ஹ் நாயகம் அலரியதுல் காதிரி சங்கைக்குரிய அல்ஹாஜ் காலிப் அலவி (அலவியதுல் காதிரி) தனது 93வது வயதில் காலமான செய்தி கேள்விப்பட்டு தான் ஆழ்ந்த கவலையடைந்ததாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.எம். அஸ்லம் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

நான் பல தடவை மரியாதை நிமித்தம் அவரை சந்தித்து அவரது ஆசிர்வாதத்தையும் பெற்றுக் கொண்டேன். எல்லோருடனும் அன்பாகவும் பண்பாகவும் அமைதியான சுபாவம் கொண்ட அன்னார் 16 வருடங்கள் சரித்திர பிரசித்தி பெற்ற கெச்சிமலையில் புஹாரி முஸ்லிம் மஜ்லிசை தலைமை தாங்கி மிகச்சிறப்பாக நடத்தியுள்ளார்.

ஏனைய சமூகத்தின் ஒற்றுமைக்கும் பாரிய பங்களிப்பு செய்துள்ளார். அன்னாரின் மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அன்னாரின் நற்கருமங்களை வல்ல இறைவன் ஏற்றுக்கொண்டு மேலான ஜென்னத்துல் பிர்தௌஸ்ஸை வழங்க வேண்டும் என தான் பிரார்த்திப்பதாக அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

# கெச்சிமலை செய்கு நாயகத்தின் மறைவிற்கு மர்ஜான் பளீல் எம்.பி அனுதாபம்

வரலாற்று புகழ்மிக்க பேருவளை கெச்சிமலை தர்ஹாவின் ஷெய்ஹ் நாயகம் அலவியதுல் காதிரி சங்கைக்குரிய அல்ஹாஜ் காலிப் அலவி (அலவியதுல் காதிரி) தனது 93வது வயதில் இறையடியெய்திய செய்தியைகேக் கேள்வியுற்று, ஆழ்ந்த கவலையடைந்ததாக பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அஷ்ஷெய்கு காலிப் அலவி அவர்கள் வரலாற்றுப்புகழ்மிக்க கெச்சிமலை தர்ஹாவின் ஷெய்ஹ் நாயகமாகச் செயற்பட்டவர். அமைதியான சுபாவம் கொண்ட அன்னார், தரீக்காவை அஹ்லுஸ் சுன்னத் வல்ஜமாஅத்தின் அடிப்படையில் வழிகாட்டி,சீரான வழியில் வழிநடாத்தினார்.

சுமார் ஒரு தசாப்தத்திற்கும் மேலாக ஆன்மீக தலைவராக இருந்த அவர், பேருவளை சமூகத்திற்கு மாத்திரமல்ல ஏனைய சமூகத்தினரின் ஒற்றுமைக்கும் பாரிய பங்களிப்புச் செய்தார்.

பாராளுமன்ற உறுப்பினராக நான்,பதவியேற்றபோது அன்னாரை மரியாதையின் நிமித்தம் சந்தித்து அவரது ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொண்டேன்.

அன்னாரின் திடீர் மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

அன்னாரின் நற்கருமங்களை வல்ல இறைவன் ஏற்றுக்கொண்டு, மேலான ஜென்னத்துல் பிர்தௌஸை வழங்க வேண்டுமென, பிரார்த்திப்பதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் தெரிவித்துள்ளார்.

# தந்தை செல்வா நற்பணி மன்ற வெள்ளி விழா



தந்தை செல்வா நற்பணி மன்ற வெள்ளி விழாவை முன்னிட்டு கௌரவிப்பும், மலர் வெளியீடும் எதிர் வரும் 30.07.2022 சனிக்கிழமை கொழும்பு விவேனானந்த சபை பிரதான மண்டபத்தில் பி.ப. 3.30 ஆரம்பிக்கப்படும்.

இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான மனோகணேசன் கலந்து சிறப்பிப்பதோடு சிறப்பு விருந்தினராக 306B1 ஆளுனர் லயன் R.L. ராஜ்குமார் PMJF, MAF கௌரவ விருந்தினராக வீரகேசரி பத்திரிகையின் பிரதம செயற்பாட்டு அதிகாரி ஆ. செந்தில் நாதனும், விஷேட அதிதியாக ஜனாதிபதி சட்டத்தரணி சு.ஏ. தவராஜா, லயன்.

நிமால் செல்வரட்ணம் ஆகியோர் கலந்து சிறப்பிப்பார்கள். இவ் நிகழ்வில் அறநெறி பாடசாலை மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்குதல், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் கூடிய புள்ளிகள் எடுத்த மாணவர்களுக்கு பதக்கம் அணிவிக்கும் நிகழ்வும், கண் பரிசோதனை செய்தவர்களுக்கு கண்ணாடி வழங்கும் நிகழ்வும் நடைபெறுவதோடு மன்றத்தில் சேவை செய்த உறுப்பினர்களை கௌரவிக்கும் நிகழ்வும் அமரர் பிரதி பொலிஸ்மா அதிபர் அரசரட்ணம் அரங்கில் நடைபெறும்.

கிழக்கு மாகாணம், மலையகம், மற்றைய மாகாணங்கள் இருந்து சுமார் 21 பேர் தந்தை செல்வா விருது வழங்கி கௌரவிக்கப்பட உள்ளார்கள்.

இவர்களுக்கான கௌரவம் அமரர் பேராசிரியர் சந்திரசேகரன் அரங்கில் நடைபெறவுள்ளது. இதற்கான ஒழுங்குகளை பொதுச் செயலாளர் S.K. தளையரட்ணம், நிர்வாகச் செயலாளர் திருமதி புவனேஸ்வரி ஆகியோர் மேற்கொண்டு வருகின்றனர்.

# புன்னகையால் சகலரையும் அரவணைத்த மூத்த உலமா மர்ஹூம் அஷ்ஷேஹ் காலிப்அலவி ஹாஜியார்

(பேருவளை தினகரன் விஷேட நிருபர்)

அலவிய்யாத் தரீக்காவின் ஆன்மீகப் பெரியார் அஷ்ஷெய்ஹ் காலிப் அலவி ஹாஜியார் அலவியதுல் காதிரியின் மறைவு ஈடுசெய்ய முடியாத மாபெரும் இழப்பாகுமென பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மக்கார் அனுதாபம் தெரிவித்துள்ளார்.அவரின் மறைவு தொடர்பில்,பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர்மாக்கார் தெரிவித்துள்ளதாவது,

நாட்டின் மூத்த ஆன்மீகப் பெரியார்களில் ஒருவரான மர்ஹூம் அஷ்செய்ஹ் காலிப் அலவி ஹாஜியார், ஆன்மீக, சமய மற்றும் சமூக மேம்பாட்டிற்காக 50 வருடங்களுக்கு மேலாக அயராது உழைத்தவர்.அலவீய்யாத் தரீக்காவின் ஆன்மீகத் தலைவராக திகழ்ந்த மர்ஹூம் அஷ்ஷெய்ஹ் அப்துல்லாஹ் ஹாஜியாரின் புதல்வரும் அஷ்ஷெய்ஹ் ஹம்ஸா ஆலிமின் சகோதரருமான இவர், அலவிய்யாத் தரீக்காவின் வளர்ச்சிக்கும் பொதுவாக சமூகத்தின் மறுமலர்ச்சிக்கும் மிக அமைதியான முறையில் அரும்பணிகளைச் செய்தார். எனது தந்தையுடனும் என்னுடனும் மிகஅன்பாக அவர்,நடந்து கொண்டார்.

எப்போதும் முகத்தில்புன்னகையுடன் பழகும் அவர்,சிறுவர் முதல் பெரியோர்வரை நன்றாக பழகினார். கெச்சிமலை தர்ஹாவை சூழவுள்ள சிங்கள மக்களாலும் கௌரவமாக மதிக்கப் பட்டு வந்தார். பிரதேசத்திலுள்ள பௌத்த மக்களுடன் சிறந்த உறவைப் பேணி, இருசமூகங்களுக்கு இடையில் ஓர் இணைப்புப் பாலமாக அவர், செயற்பட்டு வந்ததை மறக்க முடியாது. சிறந்த தலைமைத்துவப் பண்புகளை கொண்டிருந்த அவர், வரலாற்று புகழ் மிகு கெச்சிமலை தர்ஹாவில் புனித ஸஹீஹுல் புகாரி மஜ்லிஸை பல வருட காலமாகசிறப்பாக தலைமை தாங்கி நடத்தி வந்தார். அவர் எம்மை விட்டுப் பிரிந்தாலும் மக்கள் உள்ளங்களில் என்றும் நிலைத்து

நிற்பார் என்பதில் சந்தேகமில்லை. எல்லாம் வல்ல இறைவன் அன்னாரைப் பொருந்திக் கொள்வானாக.

### அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல. 533, வெவ வீதி, பொரலஸ்கமுவவில் வசிக்கும் நளின் திலினகுமார கன்னங்கர (தே.அ.அ.இல. 542183268V) ஆகிய என்னால் இல. 68/18, எகொடவத்த வீதி, பொரலஸ்கமுவவில் வசிக்கும் உடுவிதானலாகே காந்த ஸ்ரீ ஜகத் குமார உடுவிதான (தே.அ.அ.இல. 582683565V) என்பவருக்கு, கொழும்பு பதிவக நொத்தாரிசு தொன் மனுவல் கே தொன் டொனல்ட் புஷ்பகுமார ஸ்ரீ ஜயவர்தனவினால் 2022 மார்ச் 19ம் திகதி எழுதி உறுதி செய்யப்பட்ட இல. 4330 அட்டோர்ணி அதிகாரப் பத்திரத்தின் மூலம் வழங்கப்படும் அட்டோர்ணி அதிகாரம் இத்தால் இரத்துச் செய்யப்படுவதாகவும் இன்று முதல் மேற்படி அட்டோர்ணி அதிகாரத்தில் செல்லுபடியாதல் அமுலில் இல்லையென இலங்கை சனநயக குடியரசுக்கும் மக்களுக்கும் இத்தால் தெரிவித்துக் கொள்கிறேன்.

**- நளின் திலின குமார கன்னங்கர**


1990ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிக்கடன் அறவீடுகள் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 9ஆம் பிரிவின் கீழான ஏலவிற்பனை

SINCE 1892

**பிரதேச அபிவிருத்தி வங்கி**

**பெறுமதிமிக்க சொத்து ஏல விற்பனை**

RDB

வடமத்திய மாகாணம், அநுராதபுர மாவட்டம், நாச்சியாதூவ பிரதேச செயலகப் பிரிவு, நுவரகம் கோரளே, 265 குடா நெலுபெவ கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகம் அவர்களினால் தயாரிக்கப்பட்டதும், உரிமம் கொள்ளப்பட்டதுமான, கள பத்திர இல. 15, I.S.P.P. 03 இல் துண்டு 91 எனக் குறிப்பிடப்பட்டுள்ளன. (A-00:R-01:P-39) விஸ்தீரணமான அரச காணி

**அண்மையில் மேற்கொள்ளப்பட்ட மீள் அளவைக்கு அமைய குறித்த காணி பின்வருமாறு விபரிக்கப்படுகிறது:**

வடமத்திய மாகாணம், அநுராதபுர மாவட்டம், நாச்சியாதூவ பிரதேச செயலகப் பிரிவு, நுவரகம் கோரளே, 265ம் இலக்க கிராம உத்தியோகத்தர் பிரிவின் குடா நெலுபெவ கிராமத்தில் அமைந்துள்ள 1997ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 07ஆம் திகதியிடப்பட்ட **Anu/Nnp/P/2749**ஆம் இலக்க வழங்கல் இலக்கம் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட குடா நெலுவெவ கெரே என அழைக்கப்படும் 2006ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14ஆம் திகதியிடப்பட்ட அனுமதிப் பத்திரம் பெற்ற நில அளவையாளர் கே.கே. சின்னையா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 59ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 01 எனக் குறிப்பிடப்பட்டுள்ள காணித் துண்டு

**காணியின் விஸ்தீரணம்: ஏக்கர் A-00 : R-01 : P-39**

அதிலுள்ள மரங்கள், பழங்கள், கட்டிடங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக

**பிரதேச அபிவிருத்தி வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி எம்மால் 2022ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 09ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிரதேச அபிவிருத்தி வங்கியின் தலாவ கிளை வளாகத்தில் மு.ப. 11.00 மணிக்கு பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.**

**சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள கடுமையான பணிப்புரைகளுக்கு அமைய COVID 19 நெறிமுறைகளைப் பின்பற்றிய வகையில் இந்த ஏலவிற்பனை நடைபெறும்**

**தீர்மான அறிவித்தலுக்கு:**

தயவு செய்து 2019 ஆகஸ்ட் 16ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2019 செப்டெம்பர் 17ஆம் திகதிய தினமின, டெய்லி நியூஸ் மற்றும் தினகரன் ஆகிய செய்தி பத்திரிகைகளையும் பார்வையிடவும்.

**ஆதனத்தைச் சென்றடைதல்**

தலாவ நகரிலிருந்து அநுராதபுரம் வீதி ஊடாக ரத்மலே சந்தி வரை செல்லவும். அங்கிருந்து வைத்தியசாலை வீதி ஊடாக சுமார் 100 மீற்றர் தூரம் வரை செல்கையில் குறித்த காணி பாதையின் வலது பக்கத்தில் அமைந்துள்ளதைக் காணலாம்.

**கொடுப்பனவு செய்யும் முறை:**

ஏல விற்பனையில் வெற்றி பெற்ற கொள்வனவாளர், ஏலவிற்பனை முடிவில் உடனடியாக பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 25% (இருபத்தைந்து சதவீதம்)
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய 1% விற்பனை வரி - (ஒரு சத வீதம்)
(3) ஏலதாரர் தரகு 2 ½ % (இரண்டரை சதவீதம்) கொள்விலைக்குப் பொருத்தமான வரிகளுடன்
(4) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ. 1,500/-
(5) விற்பனைக்கான கட்டணங்கள் மற்றும் வேறு ஏதேனும் கொடுப்பனவுகள் இருப்பின் அவையும்
(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரை வரி

கொள்முதல் விலையின் மீதி 75% ஏல விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள், பிராந்திய பொது முகாமையாளர், பிரதேச அபிவிருத்தி வங்கி, வட மத்திய மாகாண அலுவலகம், இல. 65/D, 4வது ஒழுங்கை, அபய பிளேஸ், அநுராதபுரம் என்ற முகவரியில் செலுத்தப்பட வேண்டும்.

தொலைபேசி இலக்கம்: 025-2223080, 025-2225214

மேலே கூறப்படும் வகையில் 30 நாட்களுக்குள் கொள்முதல் விலையில் மிகுதி செலுத்தப்படாத சந்தர்ப்பத்தில் ஏற்கனவே செலுத்தப்பட்டுள்ள தொகையை (25%) பறிமுதல் செய்து குறித்த சொத்தை மீண்டும் ஏலவிற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரிய சொத்து தொடர்பான காணி உறுதி மற்றும் ஏனைய விபரங்களை மேற்கூறப்பட்டுள்ள முகவரியில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

**'முன்னறிவித்தலின்றி ஏல விற்பனையை நிறுத்தும்/ இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது'**

**ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம**

**ஒரே தேசம், ஒரே ஏல விற்பனையாளர்**

**130 வருடகால மகோன்னத சேவை**

**தலைமை அலுவலகமும்: காட்சியறையும்**
**24, டொரிங்டன் வீதி, கண்டி.**
**தொலைபேசி: 081-2227593**
**தொலை/பக்ஸ்: 081-2224371**
**மின்னஞ்சல்: schokmankandy@sltnet.lk**

**நகர அலுவலகம்:**
**6A, பெயார் பீல்ட் கார்டன், கொழும்பு-8**
**தொலைபேசி: 011-2671467, 011-2671468**
**தொலை/பக்ஸ்: 011-2671469**
**மின்னஞ்சல்: schokman@samera1892.com**

இணையதளம்: **www.sandslanka.com**



1990ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிக்கடன் அறவீடுகள் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 9ஆம் பிரிவின் கீழான ஏல விற்பனை

SINCE 1892

**பிரதேச அபிவிருத்தி வங்கி**

**பெறுமதிமிக்க சொத்து ஏல விற்பனை**

RDB

வடமத்திய மாகாணம், அநுராதபுர மாவட்டம், தலவ பிரதேச சபை எல்லைகளுக்கு உட்பட்ட 374ஆம் இலக்க நுவரகம் பலாத்த கிராம உத்தியோகத்தர் பிரிவில் எப்பாவெல கோரளயவின் அம்பகஸ்வெவகமயில் அமைந்துள்ள 2017ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20ஆம் திகதியிடப்பட்ட 2012/365-1ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 01 எனக் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிப்பத்திரம் பெற்ற நில அளவையாளர் திரு. பீ. சமரதுங்க அவர்களினால் வரையப்பட்ட அம்பகஸ்வெவ புராண இடம என அழைக்கப்படும் காணித்துண்டு.

**காணியின் விஸ்தீரணம்: A - 00 : R - 02 : P - 00**

அதிலுள்ள மரங்கள், பழங்கள், கட்டிடங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக

**பிரதேச அபிவிருத்தி வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி எம்மால் 2022ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 09ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிரதேச அபிவிருத்தி வங்கியின் தலாவ கிளை வளாகத்தில் மு.ப. 11.30 மணிக்கு பகிரங்க ஏல விற்பனைக்கு விடப்படும்.**

**சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள கடுமையான பணிப்புரைகளுக்கு அமைய COVID 19 நெறிமுறைகளைப் பின்பற்றிய வகையில் இந்த ஏலவிற்பனை நடைபெறும்**

**தீர்மான அறிவித்தலுக்கு:**

தயவு செய்து 2019 செப்டெம்பர் 12ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2019 ஒக்டோபர் 23ஆம் திகதிய தினமின, டெய்லி நியூஸ் மற்றும் தினகரன் ஆகிய செய்தி பத்திரிகைகளையும் பார்வையிடவும்.

**ஆதனத்தைச் சென்றடைதல்**

தலாவ நகரிலிருந்து கெக்கிராவ வீதி வழியாக அம்பகஸ்வெவ பாதை வரை செல்லவும். அங்கியிருந்து அம்பகஸ்வெவ வீதி வழியாக சுமார் 400 மீற்றர் வரை செல்கையில் குறித்த ஆதனம் பாதையின் இடது புறத்தில் அமைந்துள்ளதைக் காணலாம்.

**கொடுப்பனவு செய்யும் முறை:**

ஏல விற்பனையில் வெற்றி பெற்ற கொள்வனவாளர், ஏலவிற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 25% (இருபத்தைந்து சதவீதம்)
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய 1% விற்பனை வரி - (ஒரு சத வீதம்)
(3) ஏலதாரர் தரகு 2 ½ % (இரண்டரை சதவீதம்) கொள்விலைக்குப் பொருத்தமான வரிகளுடன்
(4) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ. 1,500/-
(5) விற்பனைக்கான கட்டணங்கள் மற்றும் வேறு ஏதேனும் கொடுப்பனவுகள் இருப்பின் அவையும்
(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரை வரி

கொள்முதல் விலையின் மீதி 75% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள், பிராந்திய பொது முகாமையாளர், பிரதேச அபிவிருத்தி வங்கி, வடமத்திய மாகாண அலுவலகம், இல. 65/D, 4வது ஒழுங்கை, அபயபுர பிளேஸ், அநுராதபுரம் என்ற முகவரியில் செலுத்தப்பட வேண்டும்.

தொலைபேசி இலக்கம்: 025-2223080, 025-2225214

மேலே கூறப்பட்டவாறு கொள்முதல் விலையில் மிகுதி, 30 நாட்களுக்குள் செலுத்தப்படாத சந்தர்ப்பத்தில் ஏற்கனவே செலுத்தப்பட்டுள்ள தொகையை (25%) பறிமுதல் செய்து குறித்த சொத்தை மீண்டும் ஏலவிற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரிய சொத்து தொடர்பான காணி உறுதி மற்றும் ஏனைய விபரங்களை மேற்கூறப்பட்டுள்ள முகவரியில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

**'முன்னறிவித்தலின்றி ஏல விற்பனையை நிறுத்தும்/ இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது'**

**ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம**

**ஒரே தேசம், ஒரே ஏல விற்பனையாளர்**

**130 வருடகால மகோன்னத சேவை**

**தலைமை அலுவலகமும்: காட்சியறையும்**
**24, டொரிங்டன் வீதி, கண்டி.**
**தொலைபேசி: 081-2227593**
**தொலை/பக்ஸ்: 081-2224371**
**மின்னஞ்சல்: schokmankandy@sltnet.lk**

**நகர அலுவலகம்:**
**6A, பெயார் பீல்ட் கார்டன், கொழும்பு-8**
**தொலைபேசி: 011-2671467, 011-2671468**
**தொலை/பக்ஸ்: 011-2671469**
**மின்னஞ்சல்: schokman@samera1892.com**

இணையதளம்: **www.sandslanka.com**



**சுற்றுலாத்துறை மற்றும் காணிகள் அமைச்சு**

**இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகார சபை (SLTDA)**
**ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான வேண்டுகோள் (EOI)**

**SLTDA இன் அமுலாக்கல் பிரிவிற்காக தனிநபர் உசாத்துணையாளரை (புலனாய்வு) மற்றும் இரு எண்ணிகையான புலனாய்வு அலுவலர்களை வாடகைக்கமர்த்துதல்**

மேற் கூறப்பட்டுள்ள விடயப் பரப்புகளில் உசாத்துணை சேவைகளை வழங்குவதற்காக அவர்களின் ஆர்வங்களை வெளிப்படுத்துவதற்காக தகுதியும் தகைமையுமுள்ள உசாத்துணையாளர்களை இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகார சபையின் திணைக்கள உசாத்துணை கொள்வனவுக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.

இதற்கமைவாக ஆர்வமுள்ள தனிநபர் உசாத்துணையாளர்கள் வழங்கப்பட்டுள்ள நியதிக் குறிப்புக்களில் விபரிக்கப்பட்டவாறான சேவைகளை செயற்படுத்துவதற்கான தகைமையுடையவர்களென சான்று பகருவதற்கான தகவலை வழங்கல் வேண்டும்.

2022 ஜுலை 22ஆம் திகதியிலிருந்து 2022 ஓகஸ்ட் 5ஆம் திகதி வரையும் உங்களின் பார்வைக்காக http://www.sltda.lk/careers என்ற SLTDA இன் இணையதளத்தில் விபரமான நியதிக் குறிப்புக்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. ஆர்வமுள்ள உசாத்துணையாளர்கள் பொருத்தமான பதவிகளுக்கு விண்ணப்பிப்பதற்காக உரித்தான நியதிக் குறிப்புக்களை பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறனர்.

ஆர்வமுள்ள உசாத்துணையாளர்கள் மேலதிக தகவலை கொழும்பு -03, காலி வீதி, 80ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகார சபையின் (4ஆம் மாடி), கொள்வனவுப் பிரிவின் கொள்வனவிற்கான உதவிப் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு இலக்கம் - 011-2426800 (நீடிப்பு: 306, 277, 303) மின்னஞ்சல் amilamQ@srilanka.travel/sltdaproc@srilanka.travel

ஆர்வமுள்ள தனிநபர் உசாத்துணையளர்கள் அவர்களின் ஆர்வத்தை (நியதிக் குறிப்புக்களின் பிரகாரமான உரித்தான விபரங்களடங்கிய முழுமையான விபரக் குறிப்பு) சுயரவு, தேவைப்படும் உரித்தான தகைமையை சான்று பகருவதற்கான சான்றிதழ்களின் பிரதிகள் மற்றும் உரித்தான முன் அனுபவம் ஆகியவற்றை 2022 ஓகஸ்ட் 5ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் தன்மையில் பின்வரும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டுமென்பதுடன் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் 'Hiring of an Individual Consultant (respective position)' என்ற சொற்கள் குறிப்பிடப்படல் வேண்டும். தெரிவு செய்யப்படட நபர்களுக்கே நேர்முகப்பரீட்சைகள் நடைபெறுமென்பதுடன் தெரிவு செய்தல் செயற்பாட்டின் இறுதி தீர்மானமானது திணைக்கள உசாத்துணையாளர்கள் கொள்வனவுக் குழுவிற்கே உரித்தாகும்.

**தலைவர்,**
**திணைக்கள உசாத்துணையாளர்கள் கொள்வனவுக் குழு,**
**கொள்வனவுப் பிரிவு (4ஆம் மாடி),**
**இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகார சபை,**
**இல. 80, காலி வீதி,**
**கொழும்பு -03.**



திகதி 20.07.2022 புதன்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம்: 4822
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,323,250.00
ஆங்கில எழுத்து B வெற்றி இலக்கங்கள் 1 2 5 6 0 3
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 22,733,610.40

**தன நிதானய** — சீட்டிழுப்பு இலக்கம் : 852
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,955,440.00
வெற்றி இலக்கினம் K வெற்றி இலக்கங்கள் 23 28 46 62
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 118,458,444.80

**கொவிசெத** Govisetha — சீட்டிழுப்பு இலக்கம் 3064
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,285,940.00
ஆங்கில எழுத்து B வெற்றி இலக்கங்கள் 49 51 61 74
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 64,564,291.60

**ஜாதிக சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் : 1300
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,439,480.00
வெற்றி இலக்கினம் கடகம் வெற்றி இலக்கங்கள் 8 2 0 9 7 6
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,410,390.80

**ராசி சுப பலன்** Handahana — சீட்டிழுப்பு இலக்கம்: 131
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,628,840.00
இலக்கினம் மேஷம் வெற்றி இலக்கங்கள் 04 13 35 40 விசேட இலக்கினம் மேஷம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,251,555.40

**Mega Power மெகா பவர்** கோடி 26+ — சீட்டிழுப்பு இலக்கம் 1170
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,493,660.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 261,509,382.00
ஆங்கில எழுத்து T சுப்பர் நம்பர் 07 வெற்றி எண்கள் 28 40 47 56
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

ජාතික ලොතරැයි මණ්ඩලය தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

# கிழக்கின் குரல்



# கதிர்காமத்திற்கான காட்டுப்பாதை திறப்பு

காரைதீவு குறூப் நிருபர்

கதிர்காமம் ஆடிவேல் விழா உற்சவத்தையொட்டிய கதிர்காமத்துக்கான காட்டுப்பாதை இன்று(22) வெள்ளிக்கிழமை கழுகுமலை பத்து பாடி திறந்து வைக்கப்படுகின்றது.

கொரோனா காரணமாக கடந்த இரண்டு வருடங்களாக காட்டுப் பாதை திறக்கப்படவில்லை.

எனவே, இம் முறை காட்டுப்பாதையூடாக பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பாதயாத்திரையை மேற்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இன்று காலை 6 மணிக்கு உகந்தை மலை முருகன் ஆலயத்தில் பிரதம குரு சிவசிறி க.கு. சீதாராம் குருக்கள் விசேட பூஜை நடாத்தி ஆசியுரை வழங்குவார்.

காலை 7 மணியளவில் காட்டுப் பாதை திறக்கப்படும்.



அவ்வமயம் , அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜெ.என்.டக்ளஸ், மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன், லாகுகலை பிரதேச செயலாளர் என்.நவநீதராஜா ,மொனராகலை மாவட்ட அரசாங்க அதிபர், ஆலய வண்ணக்கர் சுதுநிலமே திசாநாயக்க, காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் உள்ளிட்ட பலர் கலந்து கொள்வர்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் அருளானந்தம் உமாமகேஸ்வரனின் ஆலோசனைக்கமைவாக மாவட்ட கலாசார உத்தியோகத்தர் கு.ஜெயராஜி கழுகுமலை பத்து பாடி காட்டுப் பாதை திறந்து வைக்கப்படவிருக்கிறது.

முதல் நாளிலேயே சுமார் 2000 பாதயாத்திரிகர்கள் பயணிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து ஆரம்பித்த ஜெயராசா தலைமையிலான மிக நீண்ட பாதயாத்திரை அடியார்கள் உள்ளிட்ட ஆயிரக்கணக்கான அடியார்கள் கலந்து கொள்வார்கள்.

கதிர்காம காட்டுப் பாதை மொத்தம் 56 மைல்கள் ஆகும்.

உகந்தையிலிருந்து ஐந்து மைல்தூரத்தில் வாகூரவட்டை பின்பு 7 மைல் தூரத்தில் குமுக்கனாறு 12 மைல் தூரத்தில் நாவலடி. பின்னர் 11 மைல் தூரத்தில் யாழை 6 மைல் தூரத்தில் வள்ளி அம்மன் ஆறு, 8 மைல் தூரத்தில் கட்டகாமம், அடுத்து 8 மைல் தூரத்தில் கதிர்காமம் மொத்தமாக காட்டுப்பாதை 56 மைல்களை உள்ளடக்கியது. சுமார் 6 நாட்கள் இந்த பயணத்தை அடியார்கள் மேற்கொள்வது வழமை.

# புதிய ஜனாதிபதியின் தெரிவு சமகால அரசியலுக்கான தீர்வு

## ஹாபிஸ் நசீர் அஹமட் எம்.பி

பெரியபோரதீவு தினகரன் நிருபர்

புதிய ஜனாதிபதியின் தெரிவு சமகால அரசியலுக்கான தீர்வாக நான் கருதுகிறேன் என்றும், மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் 60 வீதமானோரின் ஆதரவைப் பெற்று புதிய ஜனாதிபதி தெரிவாகியிருப்பது, தாய்நாட்டின் கீர்த்தியை சர்வதேசத்தில் உயர்த்தியிருப்பதாக சுற்றாடல்துறை அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

நாட்டின்,எட்டாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவானமை தொடர்பில் அவர் தெரிவித்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அதில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது ;

தேவையான நேரத்தில் தகுதியான ஒருவர் ஜனாதிபதியாக தெரிவாகியுள்ளார். பல இனங்களையும் பெரும்பாலான கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் எம்.பிக்களது ஆதரவும் அவருக்கு கிடைத்துள்ளது.

ஐக்கிய இலங்கையை கட்டியெழுப்ப வழங்கப்பட்ட சந்தர்ப்பமாகவே இதை, நான் பார்க்கிறேன். படுகுழிக்குச் சென்றுள்ள நாட்டின் பொருளாதாரத்தை தூக்கி நிமிர்த்த சர்வதேசத்தின் உதவிகளே தேவைப்படுகிறது.

இந்த நேரத்தில் ரணிலை ஜனாதிபதியாக பாராளுமன்றம் தெரிந்திருப்பது, மிகத் தீர்க்கதரிசனமிக்க செயலாகும். சர்வதேசத்தில், புதிய ஜனாதிபதிக்குள்ள கீர்த்தியாலும், ஜனநாயகத்தில் ரணில் வைத்துள்ள நம்பிக்கையாலும் இந்த உதவிகளைப் பெறமுடியும்.

இனவாதிகள் மற்றும் அடக்குமுறையாளர்களின் முகாம்களுக்குள் சிறுபான்மை கட்சிகள் முடங்கியதன் நோக்கம் எங்களுக்குத் தெரியாத விடயமுமில்லை. இந்தக் கூட்டத்தை தோற்கடித்து, அதிகாரத்துக்கு அலைவோருக்கு தக்க பாடம் புகட்டியுள்ளோம். மக்களின் பட்டினியைப் போக்குவது பற்றிச் சிந்திக்காமல், பழிவாங்கும் மனநிலையிலுள்ள தலைவர்களை மக்கள் அடையாளம் காணவேண்டுமென்றும் ஹாபிஸ் நஸீர் அஹமட் எம்.பி தெரிவித்துள்ளார்.



அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பயிற்சி நிலையத்தின் வழிகாட்டலுக்கு அமைவாக அக்கரைப்பற்று மாநகர சபையின் “அபாய பாதுகாப்பு மற்றும் வெளியேற்றம் தொடர்பான செய்கை முறைப்பயிற்சி” யொன்று அக்கரைப்பற்று “எய்ம்ஸ் இன்டர்நேஷனல்”(AIMS INTERNATIONAL) கல்வி நிறுவன வளாகத்தில் நடைபெற்ற போது,.... படம் அட்டாளைச்சேனை குறூப் நிருபர்

# தோப்பூரில் மூன்று மாதங்களுக்கு பின்னர் கேஸ் விநியோகம்

தோப்பூர் குறூப் நிருபர்



தோப்பூர் உப பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கிராம மக்களுக்கு மூன்று மாதங்களின் பின்னர் கேஸ் விநியோகம் மூதூர் பிரதேச செயலாளர் எம்.பி.எம். முபாரக்கின் வழிகாட்டலின் கீழ் நேற்று (21) தோப்பூர் அல்ஹம்றா மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) மைதானத்தில் வைத்து விநியோகிக்கப்பட்டது. இதன் போது கிராமசேவையாளர் பிரிவின் அடிப்படையில் மேமாத மின் பட்டியல் அடிப்படையில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு டோக்கன் வழங்கப்பட்டு உபபிரதேச செயலக ஊழியர்கள் மற்றும் கிராம சேவையாளர் மூலமாக முறையாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதன்போது தோப்பூர், அல்லை நகர் கிழக்கு, அல்லை நகர் மேற்கு, இக்பால் நகர், பாலத்தோப்பூர் மற்றும் பள்ளிக்குடியிருப்பு கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்தகுடும்பங்களுக்கு 750 கேஸ் சிலிண்டர்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.



அட்டாளைச்சேனை வை.எம்.எம்.ஏ இன் ஏற்பாட்டில் அதி கஷ்டப் பிரதேசத்தில் அமைந்துள்ள அட்டாளைச்சேனை சம்பு நகர் அல்மினா வித்தியாலய மாணவர்களுக்கு நேற்று (21) கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்ட போது,.... படம் ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்

## மண்முனை ஒள்ளிக்குளம் நரசிம்ம

# வைரவர் ஆலயத்தில் புதையல் தோண்டிய 04 பேர் கைது

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

மட்டக்களப்பு மண்முனைப் பற்று ஒள்ளிக்குளம் பிரதேசத்தில் செவ்வாய்க்கிழமை (19) புதையல் தோண்டிய 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிசார் தெரிவித்தனர்.

மண்முனை ஒள்ளிக்குளம் நரசிம்ம வைரவர் இந்து ஆலயத்துக்கு பின்னால் புதையல் தோண்டுவதாக களுவாஞ்சிக்குடி விஷேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த தகவலையடுத்து அங்கு விரைந்த ஐ.பி.தென்னக்கோன் தலைமையிலான விஷேட அதிரடிப் படையினர் குறித்த இடத்தில் புதையல் தோண்டிய சந்தேக நபர்களில் நான்கு பேரை கைது செய்ததுடன் புதையல் தோண்ட பயன்படுத்திய சில உபகரணங்களையும் கைப்பற்றியுள்ளனர்.



கைது செய்யப்பட்டவர்கள் அநுராதபுரம் பகுதியைச் சேர்ந்த ஓய்வு பெற்ற இராணுவ சிப்பாய் உட்பட அம்பாறை மட்டக்களப்பு, தாழங்குடா ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என தெரிய வருகின்றது

இன்னும் சிலர் தப்பியோடி விட்டதாகவும் கைது செய்யப்பட்ட நான்கு பேரையும் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் புதன்கிழமை ஆஜர் செய்யப்பட்ட போது 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்க நீதிவான் பீட்டர் போல் உத்தரவிட்டார்.

அத்துடன் சந்தேக நபர்கள் புதையல் தோண்டிய குறித்த இடத்தை முழுமையாக தோண்டி பார்ப்பதற்கு பொலிசார் நீதிமன்றில் அனுமதி கோரினர் இதையடுத்து குறித்த இடத்தை தோண்டுவதற்கு பொலிசாருக்கு நீதவானினால் அனுமதி வழங்கப்பட்டது

இதையடுத்து புதன்கிழமை குறித்த இடம் விஷேட அதிரடிப்படையினர் மற்றும் பொலிசார் முன்னிலையில் பெக்கோ இயந்திரத்தினால் தோண்டப்பட்ட போது அங்கு சந்தேகத்திற்கு இடமான எந்த புதையல்களோ. தங்க நகைகளோ காணப்படவில்லை என காத்தான்குடி பொலிசார் தெரிவித்தனர்.

## கையடக்க தொலைபேசியை பாவிக்க வேண்டாமென மகனை திட்டிய தாய்;

# மாத்திரைகள் அருந்திய மாணவன் வைத்தியசாலையில் அனுமதி

றொட்டவெவ குரூப் நிருபர்

கையடக்க தொலைபேசி பாவிக்க வேண்டாம் புத்தகத்தை எடுத்து படி என தாய் கூறியதினால் 15 வயது சிறுவன் மாத்திரைகளை உட்கொண்ட சம்பவமொன்று திருகோணமலையில் பதிவாகியுள்ளது.

திருகோணமலை கோமரங்கடவல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்யாணபுர பகுதியில் நேற்று முன்தினம் (20) இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவ்வருடம் க.பொ.த சாதாரண தர பரீட்சையில் தோற்றவுள்ள மாணவன் தொடர்ச்சியாக கையடக்க தொலைபேசியை பாவித்து வருவதாகவும், படிக்கின்ற நேரத்தில் படிக்குமாறு தாயார் கூறி தனது 15 வயது மகனை தாக்கியதாகவும் இதனையடுத்து மகன் வீட்டிலிருந்த மாத்திரைகளை உட்கொண்டதாகவும் தாயார் குறிப்பிட்டார்.

தாக்குதலுக்கு உள்ளான மகன் தனி அறைக்குள் உறங்கிக் கொண்டிருந்ததாகவும் பகல் சாப்பாட்டிற்காக சிறுவனை பார்த்த போது வீட்டுக்குள் மயங்கிய நிலையில் இருந்ததாகவும் இதனை அடுத்து மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு சென்றதாகவும் தாய் கூறினார்.

இதனை அடுத்து மயக்க முற்ற நிலையில் இருந்த சிறுவனை மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் வைத்தியசாலையின் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

இருந்தபோதிலும் கையடக்க தொலைபேசி பாவனை தொடர்பினால் சிறுவர்கள் அதிக அளவில் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு வருவது அதிகரித்துள்ளதாக திருகோணமலையில் பொது வைத்தியசாலை சட்ட வைத்திய பிரிவின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

# திருக்கோணேஸ்வரர் திருக்கொடியேற்றம்

அன்புவழிபுரம் தினகரன் நிருபர்

தெட்சணகைலாயம் திருக்கோணேஸ்வரர் ஆலய தேவியார் அருள்மிகு மாதுமை அம்பாள் சுபகிருது வருட ஆடிப்பூர மகோற்சவம் 23 ஆம் திகதி சனிக்கிழமை திருக்கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

திருக்கோணேஸ்வரப் பெருமானின் தேவியார் மாதுமை அம்பாளின் சந்நிதியில் ஆடிப்பூர பிரமோற்சவம் நிகழும் மங்களகரமான சுபகிருது வருடம் ஆடித்திங்கள் 07ம் நாள் (23) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து வரும் 10 தினங்கள் திருவிழா இடம்பெற்று (31) ஞாயிற்றுக்கிழமை இரதோற்சவம் (தேர்த்திருவிழா) இடம்பெற்று (01) திங்கட்கிழமை தீர்த்தோற்சவம் இடம்பெறவுள்ளது. எனவே திருவிழாக் காலங்களில் பக்தர்கள் கலந்துகொண்டு அன்னையை வழிபட்டு அன்னையின் திருவருட் கடாச்சத்தை பெற்றுய்யுமாறு அன்புடன் ஆலய பரிபாலன சபையினர் வேண்டுகின்றனர்.

# சுவிஸ் உதயம் அமைப்பினால் வறிய குடும்பத்துக்கு குழாய் கிணறு

பழுகாமம் நிருபர்

கிழக்கு மாகாணத்தில் மக்களின் வாழ்வாதாரம் மற்றும் கல்வி மேம்பாட்டுக்கான பணிகளை முன்னெடுத்துவரும் சுவிஸ் உதயம் அமைப்பினால் மிகவும் வறிய நிலையில் உள்ள மூன்று குடும்பங்களுக்கு குழாய் கிணறு நீர் திட்டங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பின்தங்கிய பகுதியான திராய்மடு பகுதியில் குடிநீருக்கு மிகவும் கஷ்டங்களை எதிர்நோக்கிவந்த மிகவும் வறிய குடும்பங்களுக்கு இந்த குழாய் கிணறு குடிநீர் விநியோக திட்டம் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. இதனை கையளிக்கும் நிகழ்வு சுவிஸ் உதயம் அமைப்பின் தாய்ச்சங்கத்தின் பொருளாளர் கணபதிப்பிள்ளை துரைநாயகத்தின் பிறந்த தினமான நேற்றுக் காலை நடைபெற்றது.





இலங்கையின் 8ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க உத்தியோகபூர்வமாக கடைமையை நேற்று சுபவேளையில் பொறுப்பேற்ற நிகழ்வை முன்னிட்டு ஐக்கிய தேசிய கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் வீ.கே.லிங்கராசா மற்றும் கட்சியின் மாவட்ட முகாமையாளர் எல்.பிரதாப் தலைமையிலான குழுவினர் மட்டக்களப்பு நகரில் பட்டாசு கொளுத்தி மகிழ்ச்சி ஆரவாரத்தில் ஈடுபட்டுள்ளதை காணலாம். வெல்லாவெளி தினகரன் நிருபர், கல்லடி குறூப் நிருபர்கள்



# புலமைக் கதிர்

தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான



திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – I

1 மணித்தியாலம்

**எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.**
**சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

1. தரப்பட்ட படத்திற்கு பொருத்தமான சொற்தொகுதியைத் தெரிவு செய்து கோடிடுக.
   i. இயற்கை, சூடு, குளிர்
   ii. இயற்கை, வெப்பம், இரவு
   iii. இயற்கை, ஒளி, வெப்பம்




2. பொருத்தமான தொடர்புடைய சொற்கூட்டத்தினை தெரிவு செய்க.
   i. தலைக்கவசம் / போக்குவரத்து / வீதி
   ii. கைக்குட்டை / கதிரை / சீப்பு
   iii. சீவுளி / குயவன் / வாள்

3. "முயன்றால் வெற்றி பெறலாம்" என்பது
   i. எப்போதும் உண்மை
   ii. பெரும்பாலும் உண்மை
   iii. எப்போதும் பொய்

4. அனைத்துமுண்ணி, சுயசுத்தம் பேணும் செல்லப்பிராணி
   i. நாய் ii. காகம் iii. பூனை

5. அடுத்துவரும் உருவை தெரிவு செய்க




i. ii. iii.

6. ABA = 343
   COC = 858
   BAC = 438
   இத்தரவுகளின் அடிப்படையில் 534 என்பதன் எழுத்துக்கள்
   i. OAB ii. OCA iii. OAC

7. பின்வரும் கூற்றுக்களை சரியான ஒழுங்கு முறையில் காட்டும் விடையின் கீழ்க் கோடிடுக.
   A – பரீட்சை எழுதினான் B – சித்தியடைந்தான்
   C – பாடசாலை சென்றான் D – பாடம் படித்தான்
   i. DACB ii. CDAB iii. DCAB

8. வெற்றிடத்துக்கு பொருத்தமான எண்ணைத் தெரிக.




   i. 4 ii. 6 iii. 5

9. சுகயீனமுற்ற ஒருவர் ஒரு நாளில் மூன்று வேளையும் இரண்டிரண்டு மாத்திரைகள் வீதம் எடுத்துக்கொள்ள வேண்டும் எனில் 24 மாத்திரைகளை அவர் எத்தனை நாட்களில் எடுத்துக் கொள்வார்?
   i. 4 நாட்கள் ii. 5 நாட்கள் iii. 6 நாட்கள்

10. 2m நீளமான கயிறு ஒன்றினை சரி அரைவாசியாக மடித்து மீண்டும் அதனை சரி அரைவாசியாக மடித்து வெட்டினால் கிடைக்கும் கயிறு துண்டுகளின் எண்ணிக்கை யாது?
    i. 3 துண்டுகள் ii. 4 துண்டுகள் iii. 5 துண்டுகள்

11. ஒரு அழிறப்பரின் விலை ரூ. 2.50 ஒரு பேனாவின் விலை ரூ. 15.00 ஒரு பேனா வாங்கும் பணத்திற்கு எத்தனை அழிறப்பர்கள் வாங்க முடியும்
    i. 6 ii. 5 iii. 4

12. கல்விச் சுற்றுலாவிற்கு செல்வதற்கு இன்னும் 56 நாட்கள் இருப்பதாக டிலக்சன் கூறினான். இதனை எத்தனை வாரங்கள் என கூற முடியும்
    i. 6 ii. 7 iii. 8

13. ஒரு தாங்கியை முற்றாக நிரப்புவதற்கு 300*l* நீர் தேவை. அதுபோல் 5 தாங்கிகளை நிரப்ப தேவையான நீரின் அளவு யாது?
    i. 1*l* 500ml ii. 1500*l* iii. 1500ml

14. 848 தோடம்பழங்களை எட்டுப்பழங்கள் வீதம் பொதி செய்தால், மொத்த பொதிகளின் எண்ணிக்கை யாது?
    i. 101 பொதிகள் ii. 106 பொதிகள் iii. 108 பொதிகள்

15. ஒரு வகுப்பிலுள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை 38. அதேபோல் நான்கு வகுப்பிலுள்ள பிள்ளைகளின் எண்ணிக்கையையும் சேர்த்து 9 குழுக்களாக பிரித்தால் ஒரு குழுவிலுள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை யாது?
    i. 16 ii. 17 iii. 18

16. 418 முட்டைகள் இருந்த கூடையொன்றில் 22 முட்டைகள் உடைந்து விட்டன. மிகுதி முட்டைகளை 3 சம பிரிவுகளாக பிரித்தால் ஒரு பங்கில் எத்தனை முட்டைகள் இருக்கும்
    i. 130 ii. 131 iii. 132


17. சம நிறையுள்ள இரண்டு சீனிப் பைகளின் மொத்த நிறை 6kg 500g ஆகும். ஒரு சீனிப் பையின் நிறை யாது?
    i. 3kg 250g ii. 3kg 500g iii. 3kg 750g

18. ஆறாவது சதுர எண்ணின் எண்ணிக்கை யாது?
    i. 25 ii. 36 iii. 49

19. ஒரு சந்தையிலுள்ள 520 தேங்காய்களில் 120 தேங்காய்கள் விற்கப்பட்டன. மிகுதியில் 2/4 பங்கு எவ்வளவு?
    i. 120 ii. 160 iii. 200

20. ஒரு அறிவித்தற் பலகையின் நீளம் 6m 45cm. இதன் நீளம் அகலத்தின் 3 மடங்காகும். எனவே இவ் அறிவித்தற் பலகையின் அகலம் யாது?
    i. 2m 05cm ii. 2m 25cm iii. 2m 15cm

21.





    i. 12 ii. 16 iii. 18

22. 3 8 5 1 4 9 3 1 2
    7 2 6 3 4 3 8 3
    இங்கு அதிக தடவை இடம்பெற்றுள்ள இலக்கம் எது?
    i. 4 ii. 3 iii. 2

23. மாணிக்க கங்கைக்கு அருகில் அமைந்துள்ள சரித்திர புகழ்வாய்ந்த நகரமெது?
    i. திருகோணமலை ii. சிலாபம் iii. கதிர்காமம்


24. புத்தகமொன்றில் கட்டாயமாக இருக்கக் கூடியது
    i. பக்கங்கள் ii. எழுத்துக்கள் iii. படங்கள்

25. இங்குள்ள சுவரொன்றிலுள்ள செங்கற்களின் எண்ணிக்கை யாது?




    i. 10 ii. 12 iii. 14

26. உருவில் நிழற்றப்படாத பகுதியை தசம எண்ணாக எழுதினால்
    i. 0.2
    ii. 0.6
    iii. 0.8





27. 20ம் நூற்றாண்டில் 6 ஆம் தசாப்தத்திற்குரிய ஆண்டு
    i. 1955 ii. 1965 iii. 2065

28. ஒரு தேக்கரண்டி அளவு என்பது
    i. 5 ml ii. 10 ml iii. 15 ml




**இத்தரவுகளைக் கொண்டு 29ம், 30ம் வினாக்களுக்கு விடையளிக்குக.**

29.  இன் பெறுமானம் யாது?
    i. 12 ii. 17 iii. 18

30.  இற்கு பொருத்தமான பெறுமானம்
    i. 48 ii. 54 iii. 58


31. வாகனமொன்று புறப்படுகையில் அதன் km அளக்கும் மானியில் |1|2|9|9|0| km இவ்வாறு பதிவாகி இருந்தது. அவ்வாகனம் 10km தூரம் ஓடிய பின்பு அதன் மானியில் காட்டும் அளவானது
    i. |1|2|1|0|0| km ii. |1|3|0|0|0| km iii. |1|3|1|0|0| km

32. இருபதாயிரத்து ஐம்பது என்பதனை எண்களில் எழுதினால்
    i. 20050 ii. 20500 iii. 20005

33. வருடமொன்றில் 28 நாட்களைக் கொண்ட மாதங்கள் எத்தனை?
    i. 1 ii. 8 iii. 12


34. கழுத்து – மாலை எனில் கை - ...............
    i. காப்பு ii. மோதிரம் iii. கடிகாரம்

35. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்ற பழமொழியின் கருத்து
    i. விடாமுயற்சி வெற்றி தரும் ii. ஒற்றுமையே பலம்
    iii. சுத்தம் சுகம் தரும்


36. 
    இதிலுள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?
    i. 10
    ii. 12
    iii. 14

37. "பெண்மயில் அழகிய தோகை விரித்தாடியது" இக்கூற்று
    i. பிழை ii. சரி iii. கூறமுடியாது


38.



அம்புக்குறி காட்டும் பக்கம் இருந்து பார்க்கும் போது இவ்வுரு தோன்றும் விதம்




i. ii. iii.

39. 
    கடதாசி ஒன்றினை நான்காக மடித்து படத்தில் காட்டியவாறு வெட்டினால் பெறப்படும் உரு யாது?

(10ஆம் பக்கம் பார்க்க)

09 ஆம் பக்கத் தொடர்

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – I


i. ii. iii.

40. இக்கடிகார முகத்திலுள்ள முட்கள் ஏற்படுத்தும் கோணமானது
i. செங்கோணம்
ii. விரிகோணம்



## வினாத்தாள் ii இற்கான விடைகள் (17.07.2022)

I. (1) புத்தர் பெருமானின் தந்தம்
(2) பளபள
(3) கண்டு களிப்போம்
(4) தங்கம் + பேழை
(5) நான் கண்டுகளிப்பேன்
(6) (i) களிறு (ii) பிடி
II. (7) மடமட
(8) சரியாக
(9) தெளிவான
(10) கலகல
III. தன்மை முன்னிலை படர்க்கை

(11) நாம் நீங்கள் அவர்கள்
(12) நான் வந்தாயா அவன்
13) படித்தோம் நீ சென்றது
IV. (14) வெள்ளி
(15) மயக்கம்
(16) உள்ளம்
V. (17) Where do you live?
(18) I am very hungry
(19) (i) லேனா (ii) நெலும் மல
VI. (20) 101
(21) 8

(22) 11
(23) 20
(24)

| X | 5 | 8 | 6 |
|---|---|---|---|
| 4 | 20 | 32 | 24 |
| 2 | 10 | 16 | 12 |
| 7 | 35 | 56 | 42 |

(25) ஆறாயிரத்து முந்நூற்று முப்பத்துமூன்று
(26) 20

(27) ரூ. 885.00
(28) ரூ. 620.00
(29) ரூ. 245.00
(30) 1
(31) 2
(32) 1
(33) 3
(34) 2
(35) 3
(36) 2
(37) 3

(38) 1
(39) 2
(40) 1
(41) 3
(42) 1
(43) 2
(44) 3
(45) 2
(46) 1
(47) 3
(48) 1

(49) 3
(50) 2
(51) 1
(52) 3
(53) 2
(54) 3
(55) 3
(56) 1
(57) 2
(58) 2
(59) 3

# காரைதீவில் விபுலானந்த அடிகளாரின் 75 ஆவது மகாசமாதி தின நிகழ்வு

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் 75 ஆவது மகாசமாதி தின நிகழ்வும், அடிகளாரின் சிலை திறப்பு விழாவும் கடந்த 19.07.2022 (செவ்வாய்க்கிழமை) காலை அவர் அவதரித்த காரைதீவில் மிகவும் சிறப்பாக நடைபெற்றன.

விபுலாநந்தர் ஞாபகார்த்தப் பணி மன்றத்தினரின் ஏற்பாட்டில், இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையோடு கண்ணகை அம்மன் ஆலய முச்சந்தியில் நிறுவப்பட்ட அடிகளாரின் மார்பளவிலான சிலையை மட்டக்களப்பு, இராமகிருஷ்ண மிஷன், உதவிப் பொதுமுகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தஜீ மஹராஜ் திருமுன்னிலை அதிதியாக கலந்து கொண்டு சுபவேளையில் திறந்து வைத்தார். சுவாமிகளின் "வெள்ளை நிற மல்லிகையோ..." என்ற பாடல் இசைக்க ,அதிதிகளால் சுவாமிகளின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டது.

இது சுவாமி பிறந்த காரைதீவு மண்ணில் நிறுவப்படும் ஐந்தாவது சிலையாகும்.இச்சிலையை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் அருளானந்தம் உமாமகேஸ்வரன் வழங்கி இருந்தார். சிலை திறப்பு விழாவின் பின்னர், அங்கிருந்து அதிதிகள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பிரமுகர்கள் ஊர்வலமாக சுவாமி விபுலாநந்தர் மணிமண்டபத்தை அடைந்ததும், அங்கு

பணி மன்றத்தின் தலைவர் வெ. ஜெயநாதன் தலைமையில் 75 ஆவது ஆண்டு மகாசமாதி தின வைபவம் ஆரம்பமாகியது.





அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம்ஜெகதீஸன் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார். முன்னதாக மணி மண்டபத்தில் சுவாமி விபுலானந்தரின் திருவுருவப் படங்கள்,அதனை அன்பளிப்புச் செய்த சிவனருள் பவுண்டேசன் நிறுவன லண்டன் பிரதிநிதி டொக்டர் சிவனேசன் சார்பில் நிறுவனத்தின் அம்பாறை மாவட்ட செயலாளர் கே.வாமதேவன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டன.

மண்டப நிகழ்வில் கௌரவ சிறப்பு அதிதிகளாக காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன், திருக்கோவில் வலய பிரதி கல்வி பணிப்பாளர் சோ.ஸூரநுதன், சம்மாந்துறை வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

சுவாமி விபுலாநந்தர் கற்கை நிலைய மாணவர்களின் கலை நிகழ்வுகள், இந்து கலாசார ஒன்றிய அறநெறிப் பாடசாலை மற்றும் முருகன் ஐக்கிய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பேச்சு நிகழ்வுகள், சிறப்பிசை நிகழ்வு, சிறப்புரைகள், பாராட்டுப் பரிசில்கள் வழங்கும் நிகழ்வுகள் ஆகியவை இடம்பெற்றன. ஆன்மீக பணியாற்றி வரும் சிவனருள் பவுண்டேசன் நிறுவன மாவட்ட செயலாளர் கே.வாமதேவன் பொன்னாடை போர்க்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

நிகழ்வை ஏற்பாடு செய்த பணிமன்ற செயலாளர் கு.ஜெயராஜி நன்றி தெரிவித்து உரையாற்றினார். கலாசார உத்தியோகத்தர் என்.பிரதாப் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார்.

காரைதீவு குறூப் நிருபர்...

# மட்டக்களப்பு மாவட்ட இயற்கை வளங்கள் தரகுப் பணத்துக்காக சுரண்டப்படுகின்றன!

## பொருளாதார நெருக்கடி, எரிபொருள் பற்றாக்குறையிலிருந்து மீண்டெழுவதற்கான விழிப்புணர்வுச் செயலமர்வில் வெளியிடப்பட்ட தகவல்!

மதங்களினூடாக சமூகங்களிடையே சகிப்புத் தன்மை, நல்லிணக்கம், சமாதானம் என்பனவற்றை தோற்றுவித்து மக்கள் எதிர்கொண்டுள்ள பொருளாதார சவால்களுக்கான தீர்வை கண்டறியும் நோக்குடன் சமூகத்தில் பல்வேறு மட்டப் பிரதிநிதிகளின் கருத்தாடல்களை அறிவதற்கான ஒன்றுகூடல் மட்டக்ளப்பில் நடைபெற்றது.

நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் எரிபொருள் பற்றாக்குறை, உணவுப் பொருள் விலையேற்றம் என்பவற்றிலிருந்து மீட்சி பெறுவதற்கான ஆலோசனைகள் மற்றும் முன்னெடுப்புகள் தொடர்பாகவே மேற்படி விழிப்புணர்வுச் செயலமர்வு கடந்த செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு_ திருமலை வீதியிலுள்ள



ஊறணி அமெரிக்கன் மிசன் மண்டபத்தில் நடைபெற்றது. மட்டக்களப்பு கரித்தாஸ் எகெட் நிறுவனத்தின் ஏற்பாட்டில் அதன் இயக்குனர் அருட்தந்தை ஏ.யேசுதாசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சமயத் தலைவர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், பொதநிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டு தங்களின் விமர்சனங்கள் மற்றும் நேர்ம றை எண்ணங்களையும் வெளிப்படுத்தினர். அத்தோடு ஊடகவியலாளர்களின் பங்களிப்பு எப்படி அமைய வேண்டும் எனவும் அங்கு தெரிவிக்கப்பட்டது. இந்நிகழ்வில் பங்கேற்ற சிரேஷ்ட ஆ ய்வாளரும் பகுப்பாய்வாளருமாக அருளப்பு இருதயநாதன் தெரிவிக்கையில், "எமது பிரதேசத்தில் 63 வீதமான மக்கள் விவசாயத்தை தொழிலாகக் கொண்டுள்ளனர். எமது நாட்டில் தற்போது மக்கள் எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு பல காரணங்கள் உள்ளன. பொருளாதார நெருக்கடி,டொலர் பற்றாக்குறை, சூறையாடல், இயங்குநிலை தளம்பல், துருவமயமாக்கம், கருத்தாடல், தன்முனைப்பு,பொருளியல் சிந்தனை, வெறுப்பு, காழ்ப்புணர்ச்சி என்பன தற்போதுள்ள நெருக்கடிகளுக்கு காரணமாய் அமைந்துள்ளன. இவற்றை சீர் செய்வதற்காக மக்களிடையே அறிவு, உணர்வு மற்றும் இரக்க மனம் என்பன தோன்ற வேண்டும்" எனக் குறிப்பிட்டார். சமூக பொருளாதார ஆய்வாளர் கே.கணேசமூர்த்தி தெரிவிக்கையில் "இலங்கையில் 6 வீதம் பொருளாதார வீழ்ச்சி காணப்படும் நிலையில், இது பூச்சியம் நிலைக்கு வருவதற்கு இன்னும் 12 ஆண்டுகள் செல்லும். நாம் ஆர்முடுகலுடன் செயற்பட உக்குவிக்க வேண்டும். சமூகங்களுக்கிடையேயான நீண்ட இடைவெளியும் தற்காலப் பிரச்சினக்கு ஒரு காரணமாகும். 1116 கிராமங்களைக் கொண்ட மட்டக்களப்பு மாவட்டத்தில் 51,959 ஹெக்டயர் வயல் நிலங்களிலிருந்து 349,895 மெட்ரிக் தொன் நெல் பெறப்படுகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்திற்கு தேவையானதை விட 3 மடங்கு நெல் உற்பத்தி செய்யப்படுகின்றது.

103 கி.மீ நீளமான களப்பு மற்றும் 139 கி.மீ நீளமான கடற்பரப்பில் 56 கி.மீ மட்டுமே மீன்பிடிக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ள நிலையில், ஏனைய பகுதி சுற்றுலாவுக்கு வழங்கப்பட்டுள்ளது. தரகுப் பணத்துக்காக மட்டக்களப்பு மாவட்டத்தின் வளம் சுரண்டப்படுகின்றது. மரபுசார்ந்த உற்பத்திகளை ஊக்குவித்து தற்சார்ந்த பொருளாதார எழுச்சிக்கு வித்திடுவதோடு மாவட்டத்தில் 32,462 பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்களுக்கும் வீட்டிலிருந்து வேலை செய்யும் தொழில் வாண்மைக்கு வித்திடுவதும் ஏதுவாக அமையும்" எனத் தெரிவித்தார்.



"சிக்கனம் அவசியம். எரிபொருள் பற்றாக்குறை காணப்படுவதனால் மிதிவண்டியைப் பாவித்தல், வாழ்க்கைச் செலவைக் குறைத்தல், பராமரிப்பு செலவுகளைக் குறைத்தல் மற்றும் ஒன்றுக்கு மேற்பட்ட வேலைகளை செய்தல் என்பன அவசியம்.

சுயசார்புத் தன்மையாக வீட்டுத் தோட்டங்களை மேற்கொள்வதோடு மீன்பிடி வளங்களை விஸ்தரிப்பதற்கு மேலதிக குளம் மற்றும் களப்பு என்பனவற்றை அமைக்க வேண்டும். மட்டக்களப்பு மாவட்டத்தில் 446 ஆழ்கடல் வள்ளங்கள் காணப்படும் நிலையில் வாழைச்சேனையில் மட்டும் 242 வள்ளங்கள் காணப்படுகின்றன. இது அவர்களின் சுயதொழிலின் ஆர்முடுகலை வெளிப்படுத்துகின்றது. எல்லோரும் சுயமாக சிந்திப்பதன் மூலம் நாட்டின் தற்போதைய நெருக்கடியிலிருந்து ஓரளவு மீட்சி பெறலாம்" எனவும் அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சர்வமத ஒன்றியத்தின் தலைவர் சிவஸ்ரீ வீ.கே.சிவபாலன் குருக்கள், சர்வமத ஒன்றியத்தின் செயலாளர் அருட்தந்தை கே.ஜெகதாஸ், சர்வமத ஒன்றியத்தின் உபதலைவர் மௌவி சாஜஹான், அமெரிக்கன் சிலோன் மிசனின் கிழக்கு பிராந்திய குருமுதல்வர் அருட்பணி எம்.லூகேயோன் லூக் உள்ளிட்ட சர்வ மத ஒன்றியத்தின் உறுப்பினர்களும் கரீத்தாஸ் எகெட் நிறுவனத்தின் பணியாளர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

சிவம் பாக்கியநாதன்...
(மட்டக்களப்பு விஷேட நிருபர்)

# புத்தளம் புபுதுகம கரையோரத்தில் அழிவடையும் கண்டல் தாவரங்கள்

புத்தளம் களப்பு பகுதியிலுள்ள புபுதுகம கரையோரத்தில் வனப் பாதுகாப்பு திணைக்களத்தினால் நிறுவப்பட்டுள்ள சதுப்புநில பாதுகாப்பு நிலையத்தில் உள்ள உடைமைகள் மிகவும் பாழடைந்த நிலையில் காணப்படுகின்றன.

சதுப்புநில பிரதேசத்தின் அழகை ரசிக்க பலர் வந்தாலும், அதன் அழகை ரசிக்க முடியாத நிலை உள்ளது.

கடந்த அரசாங்க காலத்தில் புத்தளம் வனப் பாதுகாப்பு அலுவலகம் மீனவ மக்களின் பங்களிப்புடன் புபுதுகம கடற்கரைக்கு அருகில் சதுப்புநில காப்பு ஒன்றை நிர்மாணித்துள்ளது.



இந்த சதுப்புநில பாதுகாப்பு நிலையத்திற்குச் சொந்தமான கட்டடங்களும், அங்கு செல்லும் பல பாலங்களும் முற்றாக சேதமடைந்து காணப்படுகின்றன. சில கட்டடங்களில் பயன்படுத்தப்படும் பெறுமதியான உபகரணங்கள் நாளுக்கு நாள் சேதமடைந்து வருவதாக மீனவர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இந்த சதுப்புநில பாதுகாப்பு மையம் வன பாதுகாப்பு துறையால் பல நோக்கங்களை கொண்டு நிறுவப்பட்டுள்ளது. அழிந்து வரும் சதுப்புநிலங்களை மீண்டும் பாதுகாத்தல் மற்றும் புதிய தாவரங்களை நடுதல் ஆகியனவே நோக்கமாகும். ஆனால் இந்நிலையம் மூடப்பட்டுள்ளது. கடற்கரையோரம் நிர்மாணிக்கப்பட்ட இந்த இடம் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தும் அதிகாரிகள் கவனம் செலுத்தாமல் உள்ளனர்.



இறால் பண்ணை அமைப்பவர்களின் செயற்பாடுகளாலும், பல அரிய சதுப்புநில தாவரங்கள் அழியும் அபாயத்தில் உள்ளன. இந்த தளத்தை ஒட்டிய ஒரு பெரிய பகுதியில் பல பெரிய சதுப்புநிலங்கள் முற்றிலும் அழிந்து விட்டன.

இறால் வளர்ப்புக்கான குளங்களுக்காக இயற்கையான வடிகால்களை தொடர்ச்சியாக தடை செய்வதனால் இத்தாவரங்கள் அழிந்து வருவதாக மீனவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அடர்ந்த காடுகளால் சூழப்பட்ட இந்த சதுப்பு நிலப் பாதுகாப்புத் தளத்தை மீட்டெடுத்து மக்களிடம் ஒப்படைத்தால், நாளுக்கு நாள் அழிந்து வரும் இந்த இடத்தை அடுத்த தலைமுறைக்குக் கையளிக்க முடியும் என மீனவர்கள் மேலும் சுட்டிக்காட்டுகின்றனர்.

கே.பிரியங்கர கலுபஹன...
(வண்ணாத்திவில்லு குறூப் நிருபர்)





எட்டாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க பாராளுமன்ற வளாகத்தில் பதவியேற்றுக் கொண்டார். இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் எட்டாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க நேற்று (21) பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய முன்னிலையில் பதவியேற்றுக் கொண்டார். பாராளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், முதற்பெண்மணி பேராசிரியர் மைத்திரி விக்ரசிங்க உள்ளிட்ட பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.













# சிறுபோக அறுவடைக்கு எரிபொருள் விநியோகம்

**முல்லைத்தீவு குறூப் நிருபர்**

முல்லைத்தீவு அம்பலப்பெருமாள்குளம் விவசாயிகளுக்கு சிறுபோக அறுவடைக்கு முதலாம் கட்ட எரிபொருள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டது.

துணுக்காய் பிரதேச செயலகம், துணுக்காய் கமநல சேவை நிலையம் என்பவற்றின் ஒழுங்குப்படுத்தலில் துணுக்காய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் எரிபொருள் விநியோகிக்கப்பட்டது. அம்பலப்பெருமாள்குளம் கிராமத்தில் 330 ஏக்கரில் சிறுபோகம் மேற்கொள்ளப்பட்டபோதிலும் 72 ஏக்கருக்குரிய எரிபொருளே நேற்று வழங்கப்பட்டது. மிகுதி விவசாயிகளுக்கான எரிபொருளினை பெற்றுக் கொடுப்பதற்கு துணுக்காய் பிரதேச செயலகம், துணுக்காய் கமநல சேவை நிலையம் என்பன நடவடிக்கை எடுக்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதேவேளை கோட்டைக்கட்டியகுளம் கிராமத்தில் சிறுபோக நெற்செய்கை அறுவடைக்காக இதே ஒழுங்குப்படுத்தலில் இரு கட்டங்களாக எரிபொருள் விநியோகிக்கப்பட்டது.



தற்போதைய நெருக்கடியான சூழலில் விவசாயிகளுக்கு எரிபொருளினைப் பெற்றுக் கொடுப்பதில் முனைப்புடன் செயற்படும் துணுக்காய் பிரதேச செயலாளர், துணுக்காய் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர், துணுக்காய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினருக்கு அம்பலப்பெருமாள்குளம், கோட்டைக் கட்டியகுளம் விவசாயிகள் நன்றிகளைத் தெரிவித்து வருகின்றனர்.

### யாழில் அதிகரிக்கும் போதைப்பொருள் பாவனை

# போதை ஊசியால் இளைஞன் பலி

**யாழ்.விசேட நிருபர்**

ஹெரோயின் போதைப்பொருளை ஊசிமூலம் எடுத்துக் கொண்ட இளைஞன் ஒருவன் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் கொழும்புத்துறையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

நண்பர்களுடன் இணைந்து ஹெரோயின் போதை மருந்தை ஊசி மூலம் செலுத்திய இளைஞன், சில நிமிடங்களில் உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இளைஞனின் சடலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சடலத்தின் மாதிரியில் போதைப்பொருள் நேர்மறை அறிக்கை கிடைத்துள்ளது.

இளைஞனின் சடலம் நாளை உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் அண்மைய காலப்பகுதியில் போதைப்பொருள் பாவனையினால் தொடர்ச்சியாக உயிரிழப்புகள் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நுணாவில் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக எரிபொருள் விநியோகம்

**சாவகச்சேரி விஷேட நிருபர்**



நுணாவில் ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக நேற்று 21/07 வியாழக்கிழமை பெற்றோல் விநியோகிக்கப்பட்டது.இதன்போது ஜே/301 தொடக்கம் ஜே/307 வரையான 7கிராம அலுவலர் பிரிகளைச் சேர்ந்த மக்களுக்கு எரிபொருள் விநியோகிக்கப்பட்டது.அதேவேளையில் சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் பகுதிகளில் அமைந்துள்ள கூட்டுறவுச்சங்க எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மோட்டார் சைக்கிளின் இறுதி இலக்கத்தின் அடிப்படையில் எரிபொருள் விநியோகம் இடம்பெற்றிருந்தது.

தென்மராட்சியிலுள்ள மூன்று எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் ஆயிரக்கணக்கானவர்கள் எரிபொருள் பெறக் காத்திருப்பதை அவதானிக்க முடிந்தது.

## வடக்கின் உதயம்



ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் யாழ்ப்பாண நகரில் வெடி கொழுத்தி வெற்றிக் கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இலங்கையின் புதிய ஜனாதிபதியாக பதவிப் பிரமாணம் செய்து கொண்டதையடுத்து யாழ் நகரின் மத்திய பஸ் நிலையம் முன்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் பட்டாசுகளை கொழுத்தி மகிழ்ச்சியை பரிமாறிக்கொண்டனர்.

படம் யாழ். விசேட நிருபர்

# இனப்பிரச்சினை தீர்வுக்கான நெறிமுறையை ஜனாதிபதி கையாள்வார்

### ஜனநாயக போராளிகள் கட்சி நம்பிக்கை

**யாழ்.விசேட நிருபர்**

இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கான நெறிமுறைகளை புதிய ஜனாதிபதி கையாளுவார் என நம்புவதாக புதிய ஜனாதிபதிக்கான வாழ்த்து செய்தியில் ஜனநாயக போராளிகள் கட்சியினர் குறிப்பிட்டுள்ளனர்.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

உங்களது அரசியல் சாணக்கியமும் அரசியல் முதிர்ச்சியுமே இன்றைய வெற்றிக்கு காரணமாகும்.

இலங்கையின் எட்டாவது ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டு உள்ளீர்கள். அதற்கு எமது வாழ்த்துக்களை எங்களது மக்கள் சார்பாக தெரிவித்துகொள்கிறோம். இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடிகள். மக்களின் அன்றாட வாழ்வியல் சுமைகள். அரசியல் ஸ்திரமற்ற நிலைகளிலிருந்து இலங்கை விரைந்து மீண்டு வர செயலாற்றுவீர்கள் என திடமாக நம்புகிறோம்.

தங்களது தலைமைத்துவத்தில் சரி இனங்களுக்கிடையே புரையோடிப்போயிருக்கும் இனப்பிரச்சினைக்கான நெறிமுறைகளை கையாளுவீர்களென தமிழ்மக்கள் சார்பாக கேட்டு நிற்கின்றோம் என அவர்களது வாழ்த்துசெய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வவுனியாவில் சிறுவனை காணவில்லை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

**ஓமந்தை விஷேட நிருபர்**


வவுனியாவில் சிறுவனை காணவில்லையென பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா, தேக்கவத்தை, ஆலடி சந்தியை சேர்ந்த ஜசோதரன் கிஷால் என்ற 15 வயது சிறுவனே இவ்வாறு காணாமல் போயுள்ளார். நேற்றுமுன்தினம் (20) காலை வீட்டிலிருந்து வெளியே சென்ற சிறுவன் இரவாகியும் வீடு திரும்பாமையால் சந்தேகமுற்ற பெற்றோர் இதுதொடர்பில் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டினை பதிவுசெய்துள்ளனர். சிறுவன் தொடர்பில் தகவல் ஏதும் அறிந்தால் சிறுவனின் தந்தையான ஜசோதரனின் 077 559 9709 தொலைபேசி இலக்கத்திற்கு அழைத்து உதவுமாறு கேட்டுக் கொண்டுள்ளனர்.




# தேயிலைத் தோட்டங்களுக்கு தீ வைப்பு





ஹாலி எல விசேட நிருபர்

ஹாலிஎல வெலிமடை வீதியில் எடம்பிட்டிய மற்றும் ஹாலிஎல ரொக்கதென்ன, ரொசாட் வத்த பிரதேசங்களிலுள்ள தேயிலை தோட்டங்களுக்கு சிலர் தீ வைத்து பாரிய சேதத்தை ஏற்படுத்தியுள்ளனர்.

தற்போது நிலவும் வறண்ட காலநிலை காரணமாக நீரூற்றுகளுக்கு தண்ணீர் தேடி வரும் வனவிலங்குகளை வேட்டையாடவும், கால் நடைகளுக்கு புதுவகையான புல் வகைகளை வழங்கும் நோக்கிலும் சிலர் புதர்களுக்கு தீ வைப்பதற்கு முயற்சிக்கின்றனர்.

ஹாலிஎல பிரதேச செயலக பிரிவில் அரசாங்கத்தின் காடுகள் மற்றும் தரிசு நிலங்களுக்கு சில விஷமிகள் தீயிட்டு கொளுத்தியதை நேற்றைய தினம் காணக்கூடியதாக இருந்தது.

தீயினால் ஹாலிஎல ரொசாட், ரொக்கத்தன்ன, தெமோதர, எடம்பிட்டியவத்தை, உடுவரவத்தை ஆகிய தேயிலை தோட்டங்களில் பாரியளவில் சுற்றாடலுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது.

காடுகளை அழிப்பவர்கள் குறித்து அதிகாரிகள் உடனடியாக விசாரணை நடத்தி அவர்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்துவதன் மூலம் சுற்றுச்சூழலை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# அதிகரிக்கும் சிறுத்தைகளின் நடமாட்டம்: அச்சத்தில் பிரதேச மக்கள்

இரத்தினபுரி நிருபர்



எட்டியாந்தோட்டை பிரதேசத்தில் சிறுத்தைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாக சுற்றாடல் அமைப்புகள் தெரிவிக்கின்றன. இப்பிரதேசத்தில் பல இடங்களில் வீடுகளில் வளர்க்கப்படும் செல்லப்பிராணிகள் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

எட்டியாந்தோட்டை பிரதேசசெயலகத்துக்குட்பட்ட கில்ம, பெரன்னாவ, அமனாவல, வேவல்தலாவ பிரதேசங்களில் வீடுகளில் வளர்க்கப்படும் நாய், பூனை ஆகிய செல்லப்பிராணிகள் திடீரென்று காணாமல் போவதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

இதன் பின்னணியில் சிறுத்தைகளின் நடமாட்டம் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. குறிப்பாக கடந்த சில வருடங்களாக சிறுத்தைகள் நடமாட்டம் அதிகரித்துள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர். இதனால் வீடுகளில் வளர்க்கப்படும் நாய்கள் சிறுத்தைகளால் இழுத்துச் செல்லப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

சீபொத், தெனவக்க தோட்டத்தில் இரண்டு சிறுத்தைகள் வலையில் சிக்கியிருந்த போது மீட்கப்பட்டதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பில் புளத்கொஹுபிட்டிய வனஜீவராசிகள் அதிகாரியிடம் வினவியபோது, அம்பான மற்றும் நாரங்கல ஆகிய வனங்களிலுள்ள சிறுத்தைகள் உணவைத் தேடி மக்களின் வாழ்விடங்களை நோக்கி வரும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக தெரிவித்தார்.

# கிம்ரூ தோட்ட கரப்பந்தாட்ட மைதானத்தை அபிவிருத்தி செய்யுமாறு கோரிக்கை



அக்கரப்பத்தனை பிரதேச சபைக்குட்பட்ட மெராயா கிம்ரூ கீழ் பிரிவு தோட்ட கரப்பந்தாட்ட மைதானத்தை அபிவிருத்தி செய்து தருமாறு தோட்ட இளைஞர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிம்ரூ தோட்டத்தில் கரப்பந்தாட்ட விளையாட்டில் திறமையுடைய இளைஞர்கள் பலர் உள்ளனர். கிம்ரூ தோட்ட நிர்வாகம், இளைஞர்களின் திறமையை ஊக்குவிக்க தோட்ட ஆலயத்திற்கு முன்பாக மைதானம் ஒன்றை அமைத்து விளையாட இடத்தை ஒதுக்கி கொடுத்துள்ளது.

இவ்வாறு ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் இளைஞர்கள் மைதானத்தை அமைத்து அதில் பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் இம் மைதானம் ஒழுங்கற்ற வகையில் காணப்படுவதுடன் அபிவிருத்திகள் ஏதும் முன்னெடுக்க அக்கரப்பத்தனை பிரதேச சபை முன்வருமா? என்ற கேள்வி அங்குள்ளது.

மைதானத்தை சுற்றி பாதுகாப்பு வேலிகளை அமைத்து அங்கு கரப்பந்தாட்ட விளையாட்டை முறையாக விளையாடுவதற்கான ஒழுங்கு வசதிகள், மற்றும் மைதான அமைப்பு வசதிகளுக்கான அபிவிருத்தியினை செய்து கொடுக்க வேண்டும் என்பதே இளைஞர்களின் கோரிக்கையாக முன்வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மலையக தோட்டப்பகுதிகளில் கரப்பந்தாட்ட விளையாட்டு பிரதான விளையாட்டாக காணப்படுவதுடன் தேசிய மட்டத்தில் விளையாடக்கூடிய கரப்பந்தாட்ட வீரர்கள் உருவாகி வருகின்றனர்.

இதனடிப்படையில் கிம்ரூ தோட்ட இளைஞர்கள் தமக்கு இருக்கும் வசதிகளை கொண்டு கரப்பந்தாட்ட விளையாட்டுக்கான பயிற்சிகளையும், தமது பொழுது போக்கையும் மேற்கொண்டு வருகின்றனர்.

அதேநேரத்தில் மெராயா பிரதேசத்திலுள்ள அரசியல் பிரமுகர்களிடமும் இம் மைதானம் குறித்தும்,முன்னெடுக்கப்பட வேண்டிய அபிவிருத்திகள் குறித்தும் நடவடிக்கைகளை எடுக்குமாறு பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. எனினும் அவை கைகூடாத நிலையில் மனம் நொந்திருப்பதாக கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே மைதானம் தொடர்பில் அக்கரப்பத்தனை பிரதேச சபை கவனத்திற்கொண்டு கிம்ரூ தோட்ட இளைஞர்களின் கோரிக்கையை நிறைவேற்ற முன்வர வேண்டும்.

ஆ.ரமேஸ்

அக்குறணை பிரதேசத்தில்

# வெள்ளப்பெருக்கை கட்டுப்படுத்த நடவடிக்கை

மாவத்தகம தினகரன் நிருபர்



அக்குறணை பிரதேசத்தில் 25 வருடங்களாக தீர்வின்றி தொடரும் வெள்ளப்பிரச்சினையை தீர்க்கும் முகமாக பாரிய வேலைத்திட்டமொன்றை துரித கதியில் ஆரம்பிக்கவுள்ளதாக அக்குறணை பிரதேச சபையின் தவிசாளர் இஸ்திஹார் இமாமுதீன் தெரிவித்தார்.

இச்செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான திட்டமிடல் அமர்வு அண்மையில் அக்குறணை பிரதேசசபையில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

அமெரிக்க நிறுவனமொன்றின் நிதியுதவியுடன் அக்குறணை பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில், சர்வமத தலைவர்கள், அக்குறணை ஜம்மியதுல் உலமா, வர்த்தக சங்கங்கள், சமூக நிறுவனங்கள், மற்றும் முக்கியஸ்தர்களின் ஒத்துழைப்புக்களுடன் இச்செயற்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. மேலும் இச்செயற்திட்டத்தை நடைமுறையில் ஒருங்கமைக்கும் பணியினை அக்குறணை பிரதேச சபை மேற்கொள்ளவுள்ளது.

இதன் முதற்கட்ட கலந்துரையாடல்கள் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் அமெரிக்க நிறுவனத்தின் பிரதிநிதிகளுடன் நடைபெற்றது. இதன் பொழுது சுமார் 4 மில்லியன் ரூபா பெறுமதியான இயந்திரம் ஒன்றை கொள்வனவு செய்ய தீர்மானிக்கப்பட்டது. இச்செயற் திட்டத்தை நிறைவு செய்வதற்கு சுமார் 10 மில்லியன் ரூபா செலவாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது என அவர் தெரிவித்தார்.

மேலும் இக்கலந்துரையாடலில், வெள்ளப் பெருக்கை கட்டுப்படுத்துவதற்கான ஆய்வுகள், இயந்திரத்தை பயன்படுத்துவதற்கான புவியியல் அமைப்புகள் குறித்து கலந்துரையாடப்பட்டன. இந்த இயந்திரம் மூலம் அகழ்ந்து எடுக்கப்பட்டு சுத்திகரிக்கப்பட்ட மணலினூடாக எவ்வாறு பயன்களை பெற முடியும் என்பது குறித்தும் அதன் தொழில் முனைவுத் திறன் குறித்தும் கலந்துரையாடப்பட்டன.

# நிவாரண பொதிகள் திருட்டு

இரத்தினபுரி நிருபர்

இரத்தினபுரி ஹப்புகஸ்தென்ன தோட்டத்தில் தொழிலாளர்களுக்கு வழங்கப்படவிருந்த தமிழக அரசாங்கத்தின் நிவாரண பொதிகள் காணாமல் போயுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதுதொடர்பில் தோட்ட நிர்வாகத்தினால் பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் தோட்ட தொழிற்சாலை அதிகாரியொருவர் கைது செய்யப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திருடப்பட்ட அரிசி, இதுவரை மீட்கப்படவில்லை.

# தோட்ட நிர்வாகங்களின் எல்லையற்ற அதிகாரங்களினால் மக்கள் பாதிக்கப்படுகின்றனர்

தலவாக்கலை குறுப் நிருபர்

தோட்ட நிர்வாகங்களின் எல்லையற்ற அதிகாரங்களின் காரணமாக தோட்டங்களில் வாழுகின்ற மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர். என முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதித் தலைவருமான கணபதி கனகராஜ் தெரிவித்துள்ளார்.இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது தோட்டங்களில் குடியிருப்பாளர்களாக வாழ்கின்றவர்களில் சுமார் 50 வீதத்திற்கு மேற்பட்டவர்கள் தோட்டங்களில் வேலை செய்யாதவர்களாக இருக்கின்றனர். இவர்களின் நலன்கள் தொடர்பில் தோட்ட நிர்வாகங்கள் அக்கறை செலுத்துவதில்லை. தோட்டங்களில் வேலை செய்யாத தோட்ட குடியிருப்பாளர்கள் தமது வாழ்வாதாரங்களை கொண்டு நடத்துவதற்கு முற்படுகின்றபோது பல்வேறு இடையூறுகளை தோட்ட



நிர்வாகங்கள் ஏற்படுத்துவதுடன், அதற்கு தடையாகவும் இருக்கின்றன. தோட்டங்களில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்தவர்கள் பலரை தற்போது தோட்டத்தில் வேலை செய்யவில்லை என்ற ஒரே காரணத்துக்காக ஒதுக்கி ஓரம் கட்டுவதற்கு பெருந்தோட்டக்கம்பனிகளுக்கு எவ்வித உரிமையும் கிடையாது. பெருந்தோட்ட கம்பனிகளுக்கு தோட்டக் காணிகள் குத்தகைக்கு வழங்கப்பட்டிருக்கின்றன என்பதையும், ஆனால் தோட்டங்களில் குடியிருப்பாளர்களாக வாழ்பவர்கள் பெருந்தோட்டங்களை உருவாக்கி இன்று வரை அதில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து கொண்டிருப்பவர்களாக இருக்கிறார்கள் என்பதையும் தோட்டக் கம்பனிகள் மனதில் கொள்ள வேண்டும்.

# காலாவதியான உணவுப்பொருட்கள் மீட்பு

நுவரெலியாவில் மொத்த மற்றும் சில்லறை விற்பனை நிலையமொன்றின் மேல் மாடியில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த காலாவதியான 800 கிலோ உணவுப்பொருட்கள் மாநகர சுகாதார திணைக்கள அதிகாரிகளினால் கைப்பற்றப்பட்டுள்ளது. இதனை நுவரெலியா நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நுவரெலியா மாநகர சுகாதார திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

நுவரெலியா மாநகரசபையின் மாநகர சுகாதார திணைக்கள அதிகாரிகளுக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் குறித்த கடை மற்றும் களஞ்சியசாலை நேற்று அவசர பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. சேமிப்பு அறையில், உலர் பழங்கள், டின் மீன், வத்தல், மிளகாய் போன்ற பல உணவுப்பொருட்கள் காலாவதியான நிலையில் கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளது.

எலியின் மலம் மற்றும் சிறுநீருடன் பல உணவுப் பொருட்கள் சேமித்து வைக்கப்பட்டிருந்ததாக விசாரணை அதிகாரிகள் தெரிவித்தனர். நுகர்வுக்கு தகுதியற்ற உணவுப்பொருட்களை நீதவானின் உத்தரவின் பேரில் அழிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என மாநகர சுகாதார பிரிவின் பொது சுகாதாரப் பரிசோதகர்கள் மேலும் தெரிவித்தனர்.

# காரலிபேக் தமிழ் பாடசாலைக்கு திறன் வகுப்பறை

தலவாக்கலை குறுப் நிருபர்



நுவரெலியா மாவட்டத்தில் லக்ஸமன ஐயர் சசிதரன் குடும்பம் மற்றும் ஐக்கிய இராஜ்ஜியத்தில் இயங்கும் இரட்ணம் பவுன்டேஷன் ஆகிய நிறுவனங்களின் நிதி அனுசரனையில் வன்னி ஹோப் அவுஸ்ரேலியா நிறுவனத்தின் ஏற்பாட்டில் பிறைட் சமூக அபிவிருத்தி அறக்கட்டளை ஊடாக திறன் வகுப்பறைகள் அமைக்கும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதற்கமைய நுவரெலியா கல்வி வலயத்துக்குட்பட்ட காரலிபேக் தமிழ் பாடசாலையில் அமைக்கப்பட்ட திறன் வகுப்பறையொன்றை உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு (20) நேற்று முன்தினம் வன்னி ஹோப் நிறுவன தலைவர் ரஞ்சன் சிவஞான சுந்தரம் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வன்னி ஹோப் நிறுவனத்தின் பணிப்பாளர்களான ரஞ்சன் சிவஞானசுந்தரம், வைத்தியர் மாலதி வரன், நுவரெலியா கல்வி வலய மேலதிக பணிப்பாளர் மோகன்ராஜ், பிறைட் சமூக அபிவிருத்தி அறக்கட்டளை நிறுவனத்தின் தலைவர் என். முரளிதரன், பாடசாலையின் அதிபர் சவரிமுத்து, நுவரெலியா கல்வி வலயத்தின் ஆரம்பக் கல்வி பணிப்பாளர் செல்வராஜ், கோட்டக் கல்வி பணிப்பாளர் கிருபாகரன், உதவி கல்விப் பணிப்பாளர் நெடுஞ்செழியன் ஆகியோர் உட்பட பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இலங்கையின் புதிய ஜனாதிபதியாக பதவிப் பிரமாணம் செய்து கொண்டதையடுத்து அவரது ஆதரவாளர்கள் ஹற்றன் நகரில் பட்டாசு வெடித்து வெற்றிக் கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர்.

# எம்பிலிப்பிட்டிய கோத்தாகோகம மீது இரவில் தாக்குதல்

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

எம்பிலிப்பிட்டிய கோத்தாகோகம மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இத்தாக்குதல் நேற்று முன்தினம இரவு நடத்தப்பட்டுள்ளதாக எம்பிலிப்பிட்டிய பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

இரவு நேரம் ஆகையால் இவ்விடத்தில் எவரும் தங்கியிருக்கவில்லை என தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் தாக்குதல் நடத்தப்பட்டவர்களால் இங்கு அமைக்கப்பட்டிருந்த கூடாரங்கள் தற்காலிக இருப்பிடங்கள் பல உடைத்து நொறுகப்பட்டுள்ளன. காலிமுகத்திடலில் அமைக்கப்பட்டுள்ள கோட்டாகோகமவுக்கு ஆதரவாக சுமார் மூன்று மாதங்களுக்கு முன்னர் இந்த கோடாகோ கம அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இத்தாக்குதல் சம்பவம் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

## அற்றோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் குருநாகல், சுமங்கள மாவத்த, இல. 79 இல் வசிக்கும் களுவாஹந்தி ஜெஸ்மி சாமனி ஆகிய என்னால் குருநாகல், சுமங்கள மாவத்த, இல. 71/1 இல் வசிக்கும் ஹந்துன்னெத்தி புபுது நிஷாந்த த சொய்சாவுக்கு வழங்கப்பட்ட சட்டத்தரணி மற்றும் பகிரங்க நொத்தாரிசு திரு. நளீன் ஜே எதிரிசிங்ஹவினால் எழுதி உறுதி செய்யப்பட்ட 2018.09.22ம் திகதிய இல. 1093 விசேட அட்டோர்ணி அனுமதிப்பத்திரத்தை இத்தால், இரத்துச் செய்து இல்லாதொழிப்பதாக, இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கிறேன். இத்தினம் முதல் அட்டோர்ணி தத்துவக்காரரால் மேற்படி அற்றோர்ணி அனுமதிப்பத்திரத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் எந்த செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகளுக்கு நான் பொறுப்பாக மாட்டேன்.

**2022 ஜுலை 19ம் திகதியன்று. களுவாஹந்தி ஜெஸ்மி சாமனி**

## 1964 இலக்கம் 28ஐக் கொண்ட காணி எடுத்தற் சட்டத்தின் (திருத்தப்பட்ட) கட்டளைச் சட்டத்தின் திருத்தப்பட்டவாறு காணி எடுத்தற் சட்டத்தின் (460ஆம் அத்தியாயம்) 7(1)ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

**எனது குறிப்பிலக்கம்: KDS/PHT/4/6/1/11**
**காணி அமைச்சின் குறிப்பிலக்கம்: 4-3-/18/2018/WS465**

இங்கு கீழ் குறிப்பிடப்பட்ட உப அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணியை அரசாங்கத்திற்கு எடுத்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மேலதிக விபரங்களுக்கு 2022.06.02ஆம் திகதி இலக்கம் 2282/56ஐக் கொண்ட ஸ்ரீ லங்கா ஜனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின் (III)ஆம் பகுதியைப் பார்க்கவும்.

**உப அட்டவணை**

மாவட்டம் : கண்டி
பிரதேச செயலாளர் பிரிவு : பாத்தஹேவாஹெட்ட
கிராம உத்தியோகத்தர் பிரிவு : பின்னகொல்லை
கிராமத்தின் பெயர் : பூட்டாவத்த
காணியின் பெயர் : கிரிபோவ மற்றும் பின்னகொல்லை
ஆரம்ப வரைபட இலக்கம் : மஹ 7155
காணித்துண்டிலக்கம் இலக்கம் : 1,2, மற்றும் 3

**எச்.கே. சாகரிகாதில்ஹானி**
**பிரதேச செயலாளர்,**
**காணி எடுத்துக் கொள்ளும் உத்தியோகத்தர்**
**பாத்தஹேவாஹெட்ட**

2022 ஜுலை மாதம் 21ம் திகதி
**பிரதேச செயலகம்**
**பாத்தஹேவாஹெட்ட**

# 01 விலைமனுக்கோரல்

## டீ சொய்சா மகளிர் வைத்தியசாலையின் சிற்றுண்டிச சாலை சேவையை நடைமுறைப படுத்தல் விலைமனுக் காரல் 2022/2023

கொழும்பு -08 கன்சி வீதி, டீசெய்சா மகளிர் வைத்தியசாலையின் பெறுகைக் குழுவின் தலைவரினால் 2022/2023 வருடத்திற்கான இவ் வைத்தியசாலையின் ஒரு வருட காலத்திற்கு சிற்றுண்டிச்சாலைச் சேவையை நடைமுறைப்படுத்துவதற்காக ஆர்வமும், தகைமையும் பெற்றுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து விலைமனுக் கோரப்படுன்றது.

1. இதற்காக ஆர்வமுள்ள நபர்கள் படிவக் கட்டணமாக ரூபா 2500.00 இற்கான தொகையை டீ சொய்சா மகளிர் வைத்தியசாலையின் கணக்காளருக்குச் செலுத்திப் பெற்றுக் கொள்ளும் பற்றுச்சீட்டுடன் தம் தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பித்து 2022.07.22 முதல் 2022.08.04 வரை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை இவ்வைத்தியசாலையின் அலுவலகத்தில் இதற்கான விலைமனுப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
2. விலைமனுக்களை அடக்கும் உறைகளின் இடது பக்க மேல் மூலையில் ‘டீ செய்சா மகளிர் வைத்தியசாலையின் சிற்றுண்டிச்சாலைச் சேவையை 2022/2023 ஆண்டில் வழங்கல் எனக் குறிப்பிட்டு 2022.08.05 அன்று மு.ப. 10.00 இற்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு தலைவர், டீ செய்சா மகளிர் வைத்தியசாலையின் பெறுகைக் குழு, டீ சொய்சா மகளிர் வைத்தியசாலை, கின்சி வீதி, கொழும்பு -08 என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்புமாறு அல்லது மேற்படி முகவரியின் கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்த்தல் மேற்கொள்ளலாம்.

03. விலைமனுக்கள் இரண்டு பிரதிகளாக மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியெனக் குறிப்பிட்டு தனித்தனி உறைகளில் சேர்த்து அவற்றை ஒருறையில சேர்த்து சமர்ப்பித்தல் வேண்டும்.

4. விலைமனுக்கள் மூடப்பட்டதும் உடனடியாக அதே முகவரியில் அவை திறக்கப்படுவதுடன் அவ்வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.
5. விலைமனுப்படிவங்களை இலவசமாக வைத்தியசாலையின் அலுவலகத்தில் பரீட்சிக்கலாம்.
6. குறித்த விலைமனுவை முழுமையாக அல்லது அதன் பகுதியொன்றை ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை பெறுகைக்குழுவிற்கு உரித்தாகும்.
7. மேலதிக விபரங்களிற்கான தொலைபேசி எண்கள்: 011-2662621, 2696226

**தலைவர்,**
**பெறுகைக்குழு.**
**டீ செய்சா மகளிர் வைத்தியசாலை.**
**கின்சி வீதி, கொழும்பு -08**

## இலங்கைதுறைமுக அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## TENDER FOR SALE OF 01 NO OF 60 TON CAPACITY FLOATING CRANE GIRAFFE

**கேள்வி இலக்கம்: EW/04/PT/2021/MA/26-1**

1. இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் சார்பாக, திணைக்களப் பெறுகைக் குழுவின் தலைவர், இலங்கை துறைமுகங்கள் அதிகார சபைக்கு உரித்தான 01 NO of 60 Ton Capacity Floating Giraffe இன் விற்பனைக்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987ஆம் ஆண்டின் 3ம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகின்றார்கள். இதற்கமைய அனைத்து தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வி தொடர்பாக ஒப்பந்தக் காலப் பகுதியில் கூறப்பட்ட சட்டத்தைக் கண்டிப்பாகப் பின்பற்றுதல் வேண்டும். மற்றும் உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் 550 GRT இற்கும் குறையாத கப்பல்கள் அல்லது இழுவைப் படகுகளை மீள்பாவனைக்கு அல்லது பாவனையிலிருந்து அகற்றுவதற்காக முன் அறிவித்தல் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் நிகரான சேவையில் ஆகக்குறைந்தது கடந்த ஐந்து வருடங்களுக்காவது ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொழும்பு-01, லேடன் பஸ்தியன் வீதி 45ஆம் இலக்கத்திலுள்ள, இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் பொறியியல் பிரிவின் (பொறியியல் வேலைகள்) பிரதான பொறியியலாளரிடம் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். என்பதுடன் பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. மீளளிக்கப்படாத கட்டணமான 4,500.00 (12% பெசேவ அடங்கலாக) ரூபாவை ரொக்கப்பணத்தில் செலுத்திய பின்னர், வார வேலை நாட்களில் 09.00 மணி முதல் 15.00 மணி வரை, 2022.07.25 முதல் 2022.08.22 வரை, பிரதான பொறியியலாளர் (பொறியியல் வேலைகள்) அவர்களுக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-01 லேடன் பஸ்தியன் வீதி, 45ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதகார சபையின் பொறியியல் வேலைகள் கிளையிலிருந்து ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
6. அனைத்து விலைமனுக்களுடனும் 210,000.00 ரூபாவிற்கான விலைமனுக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். என்பதுடன் முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ‘Sale 01 No of 60 TON CAPACITY FLOATING GIRAFFE, EW/04/PT/2021/MA/26-1’ எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.
7. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் 2022.08.23ஆம் திகதி 14.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராகக் கிடைக்கும் வகையில், பிரதான பொறியியலாளர் (MW) பொறியியல் வேலைப் பிரிவு, இலங்கை துறைமுக அதிகார சபை, 45, லேடன் பஸ்தியன் வீதி. கொழும்பு-01 எனும் முகவரிக்குக் கிடைக்கும் வகையில் பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது இதே முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
8. விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டவுடனேயே விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகளின் சமுகத்தில் அதே முகவரியில் திறக்கப்படும்.

**பிரதான பொறியியலாளர் (பொறியியல் வேலைகள்)**
**பொறியியல் வேலைகள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01**
**தொலைபேசி: 011-2482905, 011-24510906**
**தொலைநகல்: 011-2451906**

## 1964 ஆம் ஆண்டின் 28ஆம் இலக்கக் காணி எடுத்தற் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7(1)ஆம் பிரிவின் பிரகாரம் அறிவித்தல்

**எனது குறிப்பு இலக்கம் :- KDS/AKU/4/2/1/58**
**காணி அமைச்சின் குறிப்பு இலக்கம்:- 4-3/9/2015/WS/46**

இங்கு கீழ்க்காணும் அட்டணையில் விபரிக்கப்பட்டுள்ள காணியை எடுத்துக்கொள்ள அராசங்கம் எண்ணியிருக்கிறது, மேலதிக விபரங்களுக்கு 2022.02.05ஆம் திகதிய 2268/79ஆம் இலக்க இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியையும் 2022.05.25ஆம் திகதிய 2282/16ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியின் பகுதி IIIஐயும் பார்க்கவும்.

**அட்டவணை**

மாகாணம் : மத்திய மாகாணம்
மாவட்டம் : கண்டி
பிரதேச செயலாளர் பிரிவு : அக்குறனை
கிராம அலுவலர் பிரிவு : புழுகொஹ தென்ன (இலக்கம் 559)
காணியின் பெயர் : பள்ளியகாவ வத்த
அடிப்படை வரைபட இலக்கம் : மஹ 7085
காணித்துண்டு இலக்கம் : 1,2,3,4,5,6,7,8
காணியின் விஸ்தீரணம் : 0.0664 ஹெக்டயர் (35 பேர்ச்சஸ்)

**A.H.M. இந்திகா குமாரி அபேசிங்க**
**பிரதேச செயலாளர்,**
**அக்குரணை.**

**2022 07 மாதம் 11ஆந் திகதி**
**அக்குரணை பிரதேச செயலகத்தில்**

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனதுஇல.: ஏ/பி.செ./5/5/14/2012/2-ii
காணி அமைச்சின் குறிப்பு இல. 4-3/2/2014/HA/218
பிரதேச செயலகம்,
எலபாத.

2022....................

இங்கே பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணியினை அரசாங்கம் எடுத்துக் கொள்ள எண்ணியுள்ளது. மேலதிக விபரங்களுக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2022 ஆம் வருடம் மே மாதம் 04 ஆம் திகதிய 2278/08ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் (III) ஆம் பகுதியை பார்க்கவும்.

**அட்டவணை**

பிரதேச செயலாளர் பிரிவு : எலபாத
கிராமம் : வெரணியகொட கம
இடம் : சப்ரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், எலபாத பிரதேச செயலாளர் பிரிவில், நவதுன் கோறளே பல்லே பற்று, கரன்கொட கிராம உத்தியோகத்தர் பிரிவில் (இல 186) வெரணியகொடகம கிராமத்தில் அமைந்துள்ள
காணியின் பெயர் : பொத்குல்கந்த வத்தை அல்லது பொத்குல்கந்தெ மூகலான எனும் காணி
ஆரம்ப வரைபட இல : இ.கி.வ 73, பிற்சேர்க்கை இல4, தாள் இல5
துண்டு இல : 44, 45, 46, 47

**பிரதேச செயலாளர்,**
**எலபாத பிரதேச செயலகப் பிரிவு**

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல.: ஏ/பி.செ./5/5/14/2012/2-ii
காணி அமைச்சின் குறிப்பு இல. 4-3/2/2014/HA/218
பிரதேச செயலகம்,
எலபாத.

இங்கே பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணியினை அரசாங்கம் எடுத்துக் கொள்ள எண்ணியுள்ளது. மேலதிக விபரங்களுக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2022 ஆம் வருடம் மே மாதம் 04 ஆம் திகதிய 2278/08ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் (III) ஆம் பகுதியை பார்க்கவும்.

**அட்டவணை**

பிரதேச செயலாளர் பிரிவு : எலபாத
கிராமம் : கரன்கொட கம
இடம் : சப்ரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், எலபாத பிரதேச செயலாளர் பிரிவில், நவதுன் கோறளே பல்லே பற்று, கரன்கொட கிராம உத்தியோகத்தர் பிரிவில் (இல 186) கரன்ொகட கிராமத்தில் அமைந்துள்ள
காணியின் பெயர் : பொத்குல்கந்த வத்தை காணி
ஆரம்ப வரைபட இல : இ.கி.வ 72, பிற்சேர்க்கை இல 13, தாள் இல 13
